மலர் - 04 இதழ் - 7 - ஜனவரி 2026

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி கெ. ராதிஜஸ்ரீ

ஜனவரி 16 திருவள்ளுவர் தினம்

கடையநல்லூர் கோவிலும் கல்வெட்டுகளும்
சண்முகக் குமார் எம். ஏ.

Nuances in the Periya Puranam
Akshayan

மூவரை வென்றான்
மு.நளினி, இரா. கலைக்கோவன்

பயன்பாட்டு மொழியே வாழும் மொழி : அழிநிலை மொழிகளை முன்னிறுத்தி...
முனைவர் ச. சீனிவாசன்

மன்னரை மலைக்க வைத்த தமிழர் மலையப்பன் !
டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்

A review on Kavinjanin kaathali-Tamil translation of Sonnets from Portugese
Dr. Nagalakshmi

சாதிவன்மக் கொலைகளும் அருந்ததியர் குல சாமிகளும்
டாக்டர் புதேரி தானப்பன்

பெரியார் பிராமணர்களின் எதிரியா?
-சோழ. நாகராஜன்
-முனைவர் சிவ இளங்கோ (நூலாய்வு)

இன்னும் பல ...

தனிச்சுற்றுக்கு மட்டும்

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 7
ஜனவரி 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி
பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்
ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)
வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. **கணியான் கூத்து** 3
தமிழ் மாமணி

2. **கடையநல்லூர் கோவிலும் கல்வெட்டுகளும்** 7
சண்முகக் குமார் எம். ஏ.

3. **மூவரை வென்றான்** 12
மு.நளினி, இரா. கலைக்கோவன்

4. **பயன்பாட்டு மொழியே வாழும் மொழி : அழிநிலை மொழிகளை முன்னிறுத்தி...** 19
முனைவர் ச. சீனிவாசன்

5. ***Nuances in the Periya Puranam*** 26
Akshayan

6. **எளிய முறையில் யாப்பறிவோம்** 33
நெருப்பலையார்.இராம இளங்கோவன்

7. ***TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor*** 37
Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

8. **மீனாட்சிபுரம்** 44
அபிஷேக்

9. **ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய வில்லியம் கௌடி....** 52

10. **உலகப் பெருந்தமிழர் தனிநாயகம் அடிகளார் தனித்துவத் தமிழ்ப்பணி** 55
பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே

11. **மரபின் வேர்கள் - நூல் திறனாய்வு** 62
டாக்டர் புதேரி தானப்பன்

12. **ரோசாப்பூ துரை** 72

13. **பெரியார் பிராமணர்களின் எதிரியா?** 75
முனைவர் சிவ இளங்கோ (நூலாய்வு)

14. **வழிபாடு விளக்கமும் வகைகளும்** 82
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி,

15. ***Who will punish and Who will not*** 88
Dr. Mrs. C. Rajeswari

16. ***A review on Kavinjanin kaathali-Tamil translation of Sonnets from Portugese*** 90
Dr. Nagalakshmi

17. **சாதிவன்மக் கொலைகளும் அருந்ததியர் குல சாமிகளும்** 92
டாக்டர் புதேரி தானப்பன்

18. முனைவர்.மு.முத்துவேலு அவர்களின் திருக்குறளின் உறுதியும் தெளிவும் 95
ம.சுரேஷ்

கணியான் கூத்து

தமிழ் மாமணி புலவர், பூங்கொடி
பராங்குசம்

கணியான் என்னும் பழங்குடி இனத்தவரால் நடத்தப்பெறும் ஆட்டமே கணியான் கூத்து எனப்படும். இசக்கி அம்மன், சுடலைமாடன், பிச்சைக்காலன், செங்கிடாக்காலன் போன்ற சிறுதெய்வங்களின் கோவில்களில் கொண்டாடப்பெறும் திருவிழாக்களில் நடைபெறும் பாடல், ஆடல் நிகழ்ச்சிகளில் கணியான் கூத்தும் ஒன்றாகும். இக்கூத்தின் அடிப்படைக்கு இசையே முதன்மையதாகும். இந்நிகழ்வில் கிராமிய இசையும், கருநாடக இசையும், கல்யாணி, முகாரி, தோடி, பூபாளம், நாட்டை, பைரவி போன்ற பண்களும் விரவிப் பாடுவதால் ஆட்டமும் காண்பவர்களைக் களிகொள்ளச் செய்யும்.

கணியான் கூத்துப் பற்றிய இத்தகைய நிகழ்வுகளை முக்கூடற்பள்ளு, விறலிவிடு தூது போன்ற சிற்றிலக்கிய வகை நூல்களில் காணமுடியும். ஒரு கதையை எளிமையாக, இசைவடிவில் பாடிச் சொல்வதே கணியான் கூத்தின் அடிப்படையாகும். அவ்வாறு இசையும், கதையும் ஆடலும் கொண்டு அமையப்பெறும் இந்நிகழ்ச்சி, உயிரோட்டமான நிகழ்வாகவே காணும் வகையில் அமைவது இக்கூத்தின் சிறப்பாகும்.

தமிழ்நாட்டில் வாழும் தென்பகுதியைச் சேர்ந்த மக்களால் பெருமளவில் நடத்தப்பெறும் திருவிழாக்களில் விரும்பிக் காணும் கலைகளில் ஒன்றே இக்கணியான் ஆட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் சுட்டிக்காட்ட வேண்டிய தெய்வம் சுடலைமாடன் என்பது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சீவலப்பேரி என்ற ஊரின்கண் வீற்றிருக்கும் சுடலைமாடன் உருவம் மிகவும் கம்பீரமானது. துடியான தெய்வம் சுடலைமாடன் என்பதைக், "காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளம் கவர் கள்வன்" என்று திருஞான சம்பந்தர் தம்முடைய நூலில் சுடலையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்."சீவலப்பேரிக்குள் யாருக்கும் பணியான் கணியான் " என்று சொல்லப்படும் வழக்கொன்றுண்டு. இப்படிப்பட்ட பெருமையுடைய சுடலைத் தெய்வம்தான் தென் மாவட்டங்களின் இடுகாட்டில் காவல் நிற்கும் தெய்வமாகும்.

சுடலைத் தெய்வத்தை மண் , சுண்ணாம்பு, செம்மண் சேர்த்துக் கலந்த சாந்தால் செய்வார்கள். காலம் காலமாக இந்நிலையிலேயே பிறப்பெடுத்த சுடலையின் சிலைகள், காலமாற்றத்தால் தற்போது கற்சிலைகளாகவும் காட்சியளிக்கின்றன. அம்மன் கோவில்கள் அத்தனையிலும் சுடலைத் தெய்வத்திற்கென்று தனி இடமும் உண்டு.

புதியதாக ஓர் ஊரில் சுடலைமாடனைச் சிலைவடிக்க வேண்டுமென்றால், முன்னதாகச் சுடலைமாடன் குடிகொண்டிருக்கும் கோவிலிலிருந்து மண் கொண்டு வந்துதான் புதிய சுடலைமாடனை உருவாக்குவார்கள். கீழ்ப்பாகம் அகலத்துடனும் மேலே செல்லச் செல்லக் குறுகியும் இருக்கும் சுடலையின் உருவம். தலையோ ஒரு பெரிய கருநிறம் கொண்ட பாறையின் வட்டமான பாகத்தைப் போன்றிருக்கும். இச்சிலையானது மழையிலும், வெயிலிலும் மேற்கூரையின்றித் திறந்த நிலையிலேயே காணப்பெறும்.

தமிழர் இசைக்கருவிகள் - மகுடம்
மகுடம் - பூவரசு, வேம்பு, மஞ்சணத்தி மரங்களில் வளைவு செய்து பெண் எருமைத் தோலால் போர்த்தப்படும். தென் தமிழகத்தில் கணியான் கூத்திலும் நாட்டார் தெய்வ கோவில்களிலும் இசைக்கப்படும்.

சுடலைத் தெய்வத்திற்கு மற்ற தெய்வங்களுக்கு நடப்பது போன்று அன்றாடம் பூசை என்பது கிடையாது. வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் சுடலையின் உடலுக்குக் களபம் என்னும் கலவைச் சாந்து பூசி, முகத்திற்கு மஞ்சள் தடவி , அரளிப்பூ அல்லது செவ்வந்திப் பூக்களால் மாலையிட்டுத் தலையில் பிச்சிப் பூவைப் பரிவட்டமாகக் கட்டி, அரைத்த சந்தனத்தால் கண், மூக்கு வைத்து அலங்கரிக்கப்படும்.

சுடலை அலங்காரம் முடிந்தபின், கோழியோ அல்லது ஆடோ உயிர்ப்பலி கொடுக்கும் பூசை நடைபெறும். இதில், குறிப்பாகப் பெட்டைக் கோழியையோ அல்லது பெண் ஆட்டையோ என்றுமே உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கமில்லை. சேவற்கோழியை உயிர்ப் பலியாக்கினால் சுடலைக்குக் கறி படைப்பதில்லை.

எத்தனைக் கோழிகள் அல்லது எத்தனை ஆடுகள் அறுத்தாலும் மாடனுக்குப் பாலும் அடையுமே பிடித்தமான படையலாகும். பச்சரிசி மாவுடன் சர்க்கரை, வாழைப்பழம் சேர்த்துப் பிசைந்து நெய்விட்டுச் சிறிய அடைகள் சுட்டுப் படைப்பார்கள். குடிப்பதற்குப் பசும்பால் காய்ச்சிக் குவளைகளில் வைப்பார்கள். இது ஒரு கட்டுப்பாடான விழாவாகும். சேவலை உயிர்ப்பலியாக்கினால் கூட்டாகச் சேர்ந்து உண்ண மாட்டார்கள். காரணம், அவ்வாறு கூட்டாகச் சேர்ந்து சேவல் கறியை உண்டால் , உறவில் விரிசல் கண்டு ஒற்றுமை குறைந்து விடும் என்று மக்கள் நம்புவார்கள்.

திருவிழாக்களில், முதல்நாள் நிகழ்வாகக் காப்புக் கட்டும் நிகழ்ச்சியும் மறுநாள் கைவெட்டு நிகழ்ச்சியும், அன்று நள்ளிரவு திரளைக்கூத்து நிகழ்ச்சியுமாக நடந்து முடிந்த பின்னரே, கணியான் ஆட்டம் தொடங்கும். இதில் திரளை வீசும் நிகழ்ச்சி என்பது, முரசு அடிப்பவர், சாமியாடி, கணியான் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து சுடுகாட்டில் சுடலைத் தெய்வத்தின் முன் ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு, அவற்றின் குருதியைச் சோற்றில் கலந்து வானம் பார்த்து மேலே நோக்கி வீசுவர். இதுவே திரளை வீசுதல் என்பதாகும்.

கணியான் ஆட்டம் நடத்துவதற்கு ஆட்டக் குழுவினர் கூட்டமாகச் சேர்ந்து வருவர். இவர்கள் பகுதிப் பகுதியாகத் தம் வேலைகளைச் செய்வர். இவர்களில் மிகவும் முதன்மையானவர் அண்ணாவி என்று சொல்லக் கூடியவர். இவர் ஒரு கதையை எளிமையான இசைவடிவில் பாடி இடையிடையே விளக்கம் சொல்வார். இவர் பாடியதைப் பின்பாட்டாகப் பாடுதற்கு ஒருவர் துணைநிற்பார். இந்தப் பாடலுக்கு இருவர் மகுடம் வாசிப்பார்கள். மகுடம் என்பது, வட்ட வடிவினதாகிய தப்பட்டை என்பதாகும். எருமைக் கன்றின் தோலைத்தான் இந்தத் தப்புக்குப் பயன்படுத்துவார்கள். மகுடம் வாசிப்பவரில் ஒருவர் உச்சமாகவும் , மற்றொருவர் மந்தமாகவும் வாசிப்பார்கள். சில நேரங்களில் மகுடம் வாசிப்பவர்களும்

அண்ணாவியுடன் சேர்ந்து பாடுவார்கள். அப்படிப் பாடும்போது இடையிடையே இரண்டு ஆண்கள், பெண் வேடமிட்டு ஆட்டம் ஆடுவார்கள்.

இந்தக் கூத்து அல்லது கச்சேரி நடைபெறும்போது , கணியான் பாடுவதற்கும், ஆடுபவர்கள் ஆடுவதற்கும் போதுமான இடம்விட்டுத் திருவிழாவைக் காண வந்தவர்கள் சுற்றி அமர்ந்துகொண்டிருப்பார்கள். மகுடக்காரர்கள் பனை ஓலைகளைக் கொளுத்தி, அவை சத்தத்துடன் வெடித்து எரியும்போது, உச்சத்தையும், மந்தத்தையும் சூடாக்கிச் சுதி சேர்ப்பார்கள். பிறகு இடுப்பில் மேளத்தை வைத்து விழாமல் கட்டிக்கொண்டு ஒரு கையை மேல் பக்கமாக வைத்தும், மற்றொரு கையை நேரடியாக வைத்தும் மேளத்தை வாசிப்பர். இடையே ஆண்வேடம் பூண்ட கணியான்கள், குனிந்தவாறே சுழன்று ஆடும்போது அங்குப் பரப்பப்பட்டிருக்கும் மணல், முன் வரிசையில் அமர்ந்திருப்பவர் மீது வாரி இறைக்கப்படும். அந்த அளவிற்கு ஆடுபவர்கள் சுழன்று, சுழன்று ஆடுவது அனைவரின் உணர்வைத் தூண்டுவதாக அமையும்.

அண்ணாவி பாடும் பாடல் பெரும்பாலும் சிறுதெய்வங்களின் கதைகளாகவே இருக்கும். அவை வழி வழியாகப் பேசப்பட்டுப் புழக்கத்திலிருக்கும் கதைகளாகவே பெரும்பாலும் இருக்கும். அக்கதைகள் புலமாடன் வரலாறு, சப்பாணிமாடன் வரலாறு, முண்டன்சாமி வரலாறு, சுடலைமாடன்சாமி வரலாறு, கரடிமாடன்சாமி வரலாறு, நீலி அம்மன்கதை, முத்தாரம்மன் கதை, முத்துப்பட்டன் கதை போன்ற கதைகளை இசைப்பாடல்களாக எளிதில் மக்களைச் சென்றடையும் வகையில் பாடப்படுகின்றன.

நம்மைச் சுற்றிப் பல பண்பாட்டுச் சிதறல்கள் இன்றும் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருவதற்கு இப்படிப்பட்ட திருவிழாக்களே சான்றுகளாக அமைகின்றன.

கடையநல்லூர் கோவிலும் கல்வெட்டுகளும்

சண்முகக் குமாரீ எம். ஏ.
தென் பொதிகை ஆவணக் காப்பகம், தென்காசி

முன்னுரை:

தென்காசி மாவட்டத்தின் மிக முக்கியமான வணிகத்தலமாகக் கடையநல்லூர் அமைந்துள்ளது. இங்கு "கடைகாலீசுவரர்" என்ற சிவன் கோயிலும், "கரிய மாணிக்கப் பெருமாள்" என்ற திருமால் கோயிலும் அமைந்துள்ளன. கடைகலீசுவரர் சிவன் கோயிலால் இவ்வூர்ப் பெயர் மருவி கடையநல்லூர் என்று அழைக்கப்படுகின்றது.

ஊர்ப் பெயர்க் காரணம்:

கடையர்கள் எனப்படும் நெல் வேளாண்மை செய்த மருத நில மக்கள் வாழ்ந்த ஊர் கடையன் நல்லூர் ஆகும். அங்கு ஏற்பட்ட ஒரு தகராறு காரணமாக இப்போது அங்கு கடையர் எவரும் குடியிருக்கவில்லை. ஒரு கிலோ மீட்டர் தள்ளி வந்து வசிக்கின்றனர். இவ்வூர் தென் பொதிகை மலைச் சாரலில் இருப்பதால் அதன் பெயர்க் காரணம் ஸ்தல புராணத்தில் அகத்தியர் சார்ந்து புனையப்பட்டுள்ளது.

கலியுகத்திலே தனது பக்தர்களுக்கு அருள்புரியக் கருதிய காலகேதார நாதர் ஒரு திருவிளையாடல் மூலமாக உலகிற்கு வெளிப்பட்டார். தெற்குத் திசை நோக்கி தீர்த்த யாத்திரை செய்து வந்த சிவனடியார் ஒருவர் இப்புண்ணியத் தலத்திற்கு அருகே வரும்போது தாகமிகுதியால் இப்பகுதி வயல்களில் உரமேற்றுவதற்காகக் கிடை வைத்துள்ள இடையர்களிடம் தண்ணீர் கேட்க, அவர்கள் மூங்கில் பாத்திரமாகிய

கடைகாலில் பால் கொடுத்து கனிவோடு உபசரித்தனர். அவர்கள் சென்ற பிறகு, தான் குடித்த கடைகால் பாத்திரத்தை மண்மூடியிருந்த சுயம்புலிங்க மூர்த்தியான காலகேதார நாதர் மூலமாகக் கவிழ்த்து வைத்துச் சென்றுவிட்டார் சிவனடியார். மீண்டும் இவ்விடத்துக்கு வந்த இடையர்கள் கடைக்காலை எடுக்க முயன்று முடியாமல் போக மண்வெட்டியால் வெட்ட ரத்தம் கசிந்தது. பயந்து போன இடையர்கள் இப்பகுதியை ஆட்சி செய்த செயசேன பாண்டியனிடம் முறையிட்டார்கள். மன்னனும் இவ்விடத்திற்கு வந்து, தான் பார்வை குறைபாடு உள்ளவனாதலால் தன் கைகளால் கடைகாலைத் தொட்டுப் பார்த்தபோது அம் மன்னனுக்குப் பார்வைக் குறைபாடு நீங்கியது. இது ஈசன் அருளே என்று எண்ணி கண் கொடுத்த "கமலநாதா", "கடைகாலீசுவரா" என சிவபெருமானை மனமுருக வேண்டினான் பாண்டிய மன்னன். அப்போது நிலத்தடியில் இருந்த காலகேதார நாதர் "கடைகாலீசுவரராக" வெளிப்பட்டார். ஆலய நிர்மாணம் செய்யும்படி அசரீரி வாக்குக் கேட்டது. அதன்படி ஆலயம் எழுப்பி அதனைச் சுற்றி நகர நிர்மாணமும் செய்தான் பாண்டிய மன்னன். அந்நகரமான "கடைகால் நல்லூர்" என்பது தற்போது பெயர் மருவி "கடைய நல்லூர்" என அழைக்கப்பட்டு வருகின்றது.

கல்வெட்டுகளும் செய்திகளும்

கடையநல்லூரில் அமைந்துள்ள "கடைகாலீசுவரர்" கோயில் கருவறையைச் சுற்றி மட்டும் பதினொன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் கி.பி. 1227, 1498, 1527, 1540 ஆகிய காலகட்டங்களைச் சார்ந்ததாகும்.

கல்வெட்டுச் செய்திகளில் இறைவன் பெயர்கள்:

கரும்பால் மொழி அம்மன் உடனுறை கடகாலீசுவரர், சிவன் கோயில் கல்வெட்டுகளில் "திருக்கமலீச்சுரமுடைய நாயனார்" என்றும், "திருக்கமலீசுவரமுடைய மகாதேவர்" என்றும் "கடைகாலீசுவர்" என்றும் அழைக்கப்படுகின்றார். கரும்பால் மொழி அம்மன் பெயர் கல்வெட்டுகளில் "உலகுடைய நாச்சியார்" என்று தெரிவிக்கின்றது.

இக்கோயிலின் அருகே "கருப்பா நதி" என்ற ஆறு பாய்வதால் இப்பெயர் இறைவியின் பெயராக ஏற்பட்டிருக்க வேண்டும். திருமால் கோயில், "கரிய மாணிக்கப் பெருமாள் கோயில்" என்று வழங்கப்படுகின்றது. கல்வெட்டுகளில் இவ் விறைவன் பெயர், "கரிய மாணிக்க ஆழ்வார், குலசேகர விண்ணகர் எம்பெருமான்" என்று அழைக்கப்படுகிறது.

இறைவனும் கல்வெட்டும்:

சிவன் கோயில் மற்றும் திருமால் கோயில் என இரண்டு கோயில்களிலும் மொத்தம் இருபத்து ஒன்பது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இறைவனே நிலம் தானம் செய்ததாக அமையும் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. கி.பி. 1273ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு முதலாம் மாறவர்மன் குலசேகரன் காலத்தைச் சார்ந்தது ஆகும். இக் கல்வெட்டில் "கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலைச் சார்ந்த நிலங்கள் திருவெழுந்தூரைச் சசேர்ந்த "செவுரியர் சூடினான்" என்பவனுக்கு இறைவன் முன்பு பாசுரங்கள் பாடுவதற்கு இறைவன் முன்பே வைத்து அரைகாணி நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதை இறைவனே கூறுவது போல கல்வெட்டுச் செய்தி அமைந்துள்ளது.



கல்வெட்டுகள் குறிப்பிடும் பெருவழிகள்

1. களங்காட்டூர் பெருவழி 2. கல்லக நாட்டுப் பெருவழி

3. காங்கேய குலகாலபுரம் பெருவழி. கி.பி. 1131. கி.பி. 1143ஆம் கால கட்டத்தைச் சார்ந்த "சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவ"னின் கல்வெட்டில் இந்தப் பெருவழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"காங்கேய குல காலபுர"த்தைச் சார்ந்த ஒருவன் நிலம் தானம் செய்ததையும் குறிப்பிடுகின்றது. கி.பி. 1305ஆம் ஆண்டில் புளியங்குடி நடுவிற்கரை பகுதியிலுள்ள நிலங்கள் "கரிய மாணிக்க ஆழ்வார் கோயி"லுக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

முழு முகவரி கல்வெட்டு:

தனி மனிதனை அடையாளப்படுத்தும் கல்வெட்டாகவும் ஒன்று காணப்படுகின்றது. "கடகாலீசுவரர் கோயி"லுக்கு நிலங்களைத் தானமாகக் கொடுத்தவனை "மிழலைக் கூற்றத்து நடுவிற்கூற்றின் ஸ்ரீ பராந்தக நல்லூரில் வசிக்கும் இடும்பழ உடையான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவதர்மம் வாசிக்க நிலதானக் கல்வெட்டு

மருதூர் கோட்டைக்கு மேற்கே உள்ள "துப்பாமணி நல்லூர் கலங்காத கண்ட பெருந்தெருவில் வசிக்கும் கோளன் அம்பலவாணனான திருக்கையொட்டி அமரக்கோன்" என்பவனுக்குச் சிவதர்மம் வாசிக்க நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது என்று கூறுகின்றது.

விருந்தோம்பல் கல்வெட்டு:

இறைவனைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்குக் கடையநல்லூரில் தியாக கஞ்சரி என்ற மடம் அமைத்து நாள்தோறும் பத்து பேருக்கு உணவிட்டு உள்ளனர். உணவு சமைப்பதற்கு நிலதானமும் செய்துள்ளனர்.

கையொப்பம் கல்வெட்டு:

காணியாட்சியாக நிலத்தைப் பெறுபவர்கள் கையெழுத்துப் பொறித்ததனை ஐந்து கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கருவூர் பொன்பற்றி உடையான், வெளியாற்றூர் கப்பலூர் உடையான, மூவேந்த வேளாண் ஆகியோர் நிலங்களை காணியாட்சியாகக் கையெழுத்திட்டுப் பெற்றதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. "கையெழுத்து இட்டான்" என்ற சொல்லுக்குக் "கைத்தடி இட்ட"தாகக் குறிப்பிடுகின்றது.

அளவுமுறைகளைக் கூறும் கல்வெட்டு:

நிலங்களின் அளவைக் குறிப்பிடும்போது முக்கால், அரை, கால், அரைக்கால், மாகாணி, காணி, அரைக்காணி, முந்திரி போன்ற அளவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்றொரு கல்வெட்டு கி.பி. 1511ஆம் காலகட்டத்தைச் சார்ந்ததாகும். இக் கல்வெட்டில் "இலையமுது" எனப்படும் வெற்றிலை ஐந்தும், "அடைக்காய்" எனப்படும் பாக்கு ஐந்தும் ஐந்து என்ற எண்ணிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. முகத்தல் அளவையாக நாழி, ஆழாக்கு, உரி, உழக்கு, கலம் போன்றவற்றை குறிப்பிடும் வண்ணமாக கோயில் பூசைக்கு உழக்கு எண்ணெய்யும், நாழி நெய்யும், உரி நெல்லும், முந்நாழி நெல்லும், ஆழாக்கு அரிசியும், பதினைந்து குறுணி கலம் நெல்லும், மாதம் ஆறு கலம் நெல்லும் கொடுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகின்றது. அதோடு பாலினை மக்கள் நாழியில்தான் அளந்து கொடுத்துள்ளனர். மிகுதியான நெல்லை பொதி என்ற அளவீட்டாலும் இது தலைச்சுமை, பாக்கம், வண்டி, மூடை போன்ற அளவுகள் என்பதனையும், துல்லியமற்றது என்பதையும் தெரிவிக்கின்றது. மா, காணி, முந்திரிகை, எல்லைக்கல் நடுதல் போன்றவைகளும் அளவீடாகக் குறிக்கப்பட்டுள்ளன.

நிலதானக் கல்வெட்டுகள்:

கோயில் பூசைக்காகவும், கோயில் பராமரிப்புப் பணிகளுக்காகவும், மடம் அமைத்து பக்தர்களுக்கு உணவிடவும், கோயிலில் பணிபுரிபவர்களுக்கு ஊழியமாகவும், நிலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. அரசன் வழங்கிய நிலதானம், ஊரார் மற்றும் தனிநபர் நிலதானம் என மூன்று பிரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைக் கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள் மூலம் அறிய முடிகின்றது.

கல்வெட்டுகளில் பாண்டிய மன்னர்கள்:

சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவன் (கி.பி. 1131 கி.பி. 1143)

முதலாம் சடைய வர்மன் குலசேகரன் (கி.பி. 1162 - கி.பி. 1177)

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1216 - கி.பி. 1244)

முதலாம் மாறவர்மன் குலசேகர தேவன் (கி.பி. 1268 - கி.பி. 1318)

நான்காம் சடையவர்மன் குலசேகர தேவன் (கி.பி. 1279 - கி.பி. 1309)

முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1315 - கி.பி. 1350)

முதலாம் மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1335 - கி.பி. 1363)

போன்ற ஏழு இடைக்காலப் பாண்டியர் கல்வெட்டுகளும், அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன்

குலசேகர தேவன் (கி.பி. 1162 - கி.பி. 1177)

சடையவர்மன் சீவல்லப பாண்டியன் (கி.பி. 1534 - கி.பி. 1543)

போன்ற மூன்று பிற்காலப் பாண்டியர்கள் கல்வெட்டுகளும், காணப்படுகின்றன. இவர்கள் கடைய நல்லூரில் ஆட்சி செய்துள்ளதை முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் மூன்று கல்வெட்டுகளும், முதலாம் மாறவர்மன் குலசேகர தேவனின் இரண்டு கல்வெட்டுகளும், முதலாம் சடைய வர்மனின் மூன்று கல்வெட்டுகளும், முதலாம் மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் ஒரு கல்வெட்டும், நான்காம் சடையவர்மன் குலசேகர தேவனின் ஏழு கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. மொத்தம் பதினாறு கல்வெட்டுகளில் மன்னர் பெயரும் ஆட்சி ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளன.

சடைய வர்மன் ஸ்ரீ வல்லபனின் "பூமாது புணர புகழ் மாது விளங்க" எனத் தொடங்கும் மெய்கீர்த்தியும், முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் சேணாடு கொண்ட முடி கொண்ட சோழபுரத்தில் பட்டம் கட்டியவன் என்ற விருதுப் பெயரும், சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவன் பழங்காலத்தை திருத்தியவன் என்ற விருதுப் பெயரும் கல்வெட்டில் காணப்படுகின்றன. இம் மன்னர்களின் ஆட்சிமுறை, போர், நில தானங்கள், முடி சூடியமை, முடி சூட்டப்பட்ட ஆண்டு போன்ற செய்திகளையும் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது..

மூவரை வென்றான்

மு.நளினி, இரா. கலைக்கோவன்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
திருச்சிராப்பள்ளி

மதுரை திருவில்லிப்புத்தூர் நெடுஞ்சாலையில் அழகாபுரிக்கு அருகில் மேற்கு நோக்கிப் பிரியும் பாதையில் ஏறத்தாழ 4 கிலோமீட்டர் பயணித்தால் மூவரைவென்றானை அடையலாம். ஊரின் புறத்தே உள்ள குன்றின் நடுப்பகுதியில் கிழக்கு நோக்கிய குடைவரையொன்றும் பிற்காலத் திருப்பணிகளாய் அம்மன் திருமுன், பெருமண்டபம், மடைப்பள்ளி இவையும் உள்ளன.

குடைவரை வளாகம்

குடைவரைக்கு முன் ஒரு மண்டபமும் அதற்கு முன் சிறிய அளவிலான நந்திமண்டபமும் காணப்படுகின்றன. கருவறையை நோக்கி நந்தி அமர்ந்துள்ள இம்மண்டபத்தை அடைய மலைத்தளத்திலிருந்து படிகள் உள்ளன. மண்டபத் தளத்தின் தென்முகப்பிலும் அதன் மேற்கிலுள்ள மண்டபமுகப்புச்சுவரின் இருபுறத்திலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

முன்மண்டபம்

குடைவரையின் முன்னும் நந்திமண்டபத்தின் பின்னுமாய் அமைந்திருக்கும் மண்டபத்தை முன்மண்டபமாகக் கொள்ளலாம். அதன் முகப்புச் சுவர் நடுவே வாயில் காட்டப்பட்டுள்ளது. வாயிலின் வலப்புறச் சுவர்ப்பகுதியில் பிள்ளையார் சிற்பம் உள்ளது. உட்புறத்தே இம்மண்டபம் குடைவரையோடு பொருந்த இணைக்கப்பட்டுள்ளது. குடைவரை முகப்பு முழுத்தூண்களுக்கு முன் இரண்டு தூண்கள் எழுப்பி அவற்றின் மேல் உத்திரம் நிறுத்தி, மண்டப முன்சுவருக்கும் இதற்கும் இடையில் கற்கள் பாவிக் கூரையாக்கியிருக்கிறார்கள். இத்தூண்கள் பின்புறத்தில் நான்முகத் தூண்களாகவும் முன்புறத்தே சதுரம், முப்பட்டை, சதுரம் என்ற அமைப்பிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

முகப்பு

முகப்பு, மண்டபம், கருவறை என்ற அமைப்பில் குடைவரை அகழப்பட்டுள்ளது. தென்வடலாக 5.15 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 67 செ.மீ. அகலமும் உள்ள முகப்பில் இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் காணப்படுகின்றன.

தூண் சதுரங்களின் மேற்குத் தவிர்த்த பிற முகங்களில் மலர்ப் பதக்கங்கள் முயற்சிக்கப்பட்டுள்ளன. முழுத்தூண்களின் மேற்சதுர முகங்கள் இரண்டில் இவை நன்கு உருவாகியுள்ளன. இப்பதக்கங்களின் நடுவில் ஒன்றில் சிம்மமும் மற்றொன்றில் யாளியும் அமைய, வடமுழுத்தூணின் கீழ்ச்சதுரத் தென்முகத்தில் அன்னம் உள்ளது. வடிவங்கள் காட்டப்பெறாத பதக்கங்கள் தாமரை இதழ்களோடு அமையச் சிற்பங்களோடு திகழும் பதக்கங்கள் தாமரையல்லாத மலரிதழ்கள் சூழத் திகழ்கின்றன. தூண்களின் மேலுள்ள போதிகைகள் விரிகோணக் கைகளால் உத்திரம் தாங்க, மேலே கூரை.

முகமண்டபம்

தென்வடலாக 5.50 மீ. நீளம், கிழக்கு மேற்காக 1.16 மீ. அகலம் கொண்டுள்ள முகமண்டபத்தின் தரை சிமெந்துப்பூச்சுப் பெற்றுள்ளது. மண்டபத் தென்சுவர் வெறுமையாக அமைய, வடசுவரில் தரையிலிருந்து 78 செ.மீ. உயரத்தில் 1.25 மீ. அகல, 1.54 மீ. உயர, 15 செ.மீ. ஆழக் கோட்டம் அகழ்ந்து, ஆனந்ததாண்டவச் சிவபெருமானையும் அருகில் உமையையும் செதுக்கியுள்ளனர். கோட்ட மேற்பகுதி பிறையென வளைக்கப்பட்டுள்ளது.

பின்சுவரின் நடுப்பகுதியில் அகழப்பட்டுள்ள கருவறை உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், பிரதிவரி, வாஜனம் எனும் உறுப்புகள் கொண்ட 58. 05 செ.மீ. உயரப் பிரதிபந்தத் தாங்குதளம் பெற்றுள்ளது. பிரதிமுகங்கள் உருவாகவில்லை. தாங்குதளத்தின் மீது பாதங்களோடு பேரளவினதாய்க் கண்டமும் கம்பும் அமைய, மேலெழும் சுவரில் பக்கத்திற்கு இரண்டென நான்கு அரைத்தூண்கள் உள்ளன. இடைத்தூண்கள் நான்முகத்

தூண்களாய் அமைய, திருப்பத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற வடிவில் உள்ளன. அரைத்தூண்களின் மேலுள்ள போதிகைகள் விரிகோணக் கைகளால் சிறிய மடிப்புடன் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், கூரை.

இடைத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதி கருவறை வாயில் பெற, வாயில் தூண்களுக்கும் திருப்பத்தூண்களுக்கும் இடைப்பட்ட சுவர்ப்பகுதிகள் கோட்டங்களாகியுள்ளன. சிற்பங்களற்ற அவற்றுள் 1.44 மீ. உயரம், 74 செ.மீ. அகலம், 6 செ.மீ. ஆழமுள்ள வடகோட்டத்தில் இராமலிங்க அடிகளாரின் ஓவியம். தெற்குக் கோட்டம் 40 மீ. உயரம், 78 செ.மீ. அகலம், 5. செ.மீ. ஆழம் பெற்றுள்ளது. கருவறை வாயிலின்முன்,தாங்குதளத்தைஊடறுத்தவாறுநான்குபாறைப்படிகள்காணப்படுகின்றன.

கருவறையை அடுத்துள்ள பின்சுவரின் வட, தென்பகுதிகளில் ஆழமான கோட்டங்கள் அகழப்பட்டு, தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் முருகனும் செதுக்கப்பட்டுள்ளனர். தரையிலிருந்து 65 செ.மீ. உயரத்தில் உள்ள தெற்குக் கோட்டம் 80 செ.மீ. அகலம், 1.65 மீ. உயரம், 13 செ.மீ. ஆழம் கொள்ள, தரையிலிருந்து 74 செ.மீ. உயரத்தில் உள்ள வடக்குக் கோட்டம் 75 செ.மீ. அகலம், 1.60 மீ. உயரம், 20 செ.மீ. ஆழம் பெற்றுள்ளது.

பின்சுவர் மண்டபத்தின் வட, தென்சுவர்களைத் தொடுமிடத்து உள்ள நான்முக அரைத்தூண்களும் கருவறைச் சுவரின் திருப்பத் தூண்களும் இக்கோட்டங்களை அணைவுசெய்ய, மேலுள்ள விரிகோணப் போதிகைகள் உத்திரம் தாங்குகின்றன.

மேற்பகுதி பிறையென வளைக்கப்பட்டுள்ள இவ்விரண்டு கோட்டங்களுக்கு முன்னிருக்குமாறு பிற்காலத்தே எழுப்பப்பட்டுள்ள மேடை வடக்கில் ஆனந்ததாண்டவருக்கும் தொடர்கிறது. முருகன் கோட்டத்தருகே சிதைந்து காணப்படும் தாங்குதள ஜகதி, குமுதம் இவை பிள்ளையார் கோட்டத்தருகே முழுமையடைந்த நிலையில் காணப்படுவதால், முகமண்டபப் பின்சுவர் முழுவதிற்கும் இவை தொடர்ந்திருக்குமோ என்று கருதத் தோன்றுகிறது.

பிள்ளையார் கோட்ட மேடையில் சிறிய பிள்ளையார் சிற்பம் உள்ளது. மண்டபத்தின் கூரையையொட்டித் தெற்கிலும் வடக்கிலும் வாஜனம். மண்டபக் கூரையில் கிழக்கு மேற்காக இரண்டு அகலமான பட்டைகள் கருவறை முன்சுவர் வாஜனத்திலிருந்து முகப்பு உத்திரம்வரை வெட்டப்பட்டுள்ளன. தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள் எவற்றிலும் இது போன்ற கூரைப் பிரிப்பைக் காணக்கூடவில்லை. இதைப் பின்பற்றியே முற்சோழர் கற்றளிகளில் முகமண்டபக் கூரையை மூன்றாய்ப் பகுக்கும் பழக்கம் உருவானது போலும்.

கருவறை

நிலையமைப்புக் கொண்டுள்ள கருவறை வாயிலின் அகலம் 73 செ.மீ.; உயரம் 1.76 மீ. வாயிலின் இருபுறத்தும் தொடங்கிக் கோட்டங்களின் மீதும் பின்சுவரிலும் தொடரும் உத்திரம் வாயிலின் மேற்பகுதியில் இடம்பெறவில்லை. வாஜனத்தின் அடிப்பரப்பில் வாயிலுக்கு மேலாகக் காணப்படும் கற்பலகை அகற்றப்படாத பாறையாகலாம்.

கிழக்கு மேற்காக 2.72 மீ. அகலம், தென்வடலாக 2.77 மீ. நீளம், 1.89 மீ. உயரம் பெற்ற கருவறையில் சதுரமான ஆவுடையாரும் உருளைப்பாணமுமாய்ச் செய்தமைத்த இலிங்கத்திருமேனி அமைந்துள்ளது. கருவறையின் கூரை, சுவர்கள் இவை வெறுமையாக உள்ளன. தரையில் வடபுறத்தே முழுக்காட்டு நீர்வாங்க ஆழக் குறைவான சதுரப் பள்ளம் வெட்டப்பட்டுள்ளது. அதிலிருந்து வெளிப்படும் வடிகால் மண்டபத்தின் பின், வட சுவர்களை ஒட்டி ஓடுகிறது.

சிற்பங்கள்

கோட்டச் சிற்பங்கள் அனைத்துமே குடைவரைக் காலத்திற்குப் பிற்பட்டவை. அவற்றை 13 அல்லது 14ஆம் நூற்றாண்டினவாகக் கொள்ளலாம்.

பிள்ளையார்

கரண்டமகுடம், முப்புரிநூல், உதரபந்தம், தோள், கை வளைகள் அணிந்து கிழக்குப் பார்வையாக அர்த்தபத்மாசனத்தில் உள்ள பிள்ளையாரின் பின் கைப் பொருட்களை அடையாளம் காணமுடியவில்லை என்றாலும், இடப் பின் கையில் இருப்பதைத் தந்தமாக ஊகிக்கலாம். இட முன் கை தொடை மேல் அமர, முகமும் மார்பும் வல முன் கையும் சிதைந்துள்ளன.

முருகன்

பின் கைகளில் வலப்புறம் சக்தியும் இடப்புறம் வஜ்ரமும் கொண்டு சமநிலையில் உள்ள முருகப்பெருமானின் முன் கைகள் காத்து, அருள் செய்கின்றன. பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, தோள்மாலை கொண்டிலங்கும் அவர் தலையைக் கரண்டமகுடம் அழகு செய்கிறது. பின்னால் அலகில் பாம்புடன் மயில். பிள்ளையார், முருகன் இருவர் கோட்டங்களிலும் மேலே பக்கத்திற்கொருவராக வானவர்கள் ஒரு கையில் மலர் மொட்டும் மறு கையில் போற்றி முத்திரையுமாய் உள்ளனர்.

ஆனந்ததாண்டவர்

குப்புறப் படுத்திருக்கும் முயலகன் மீது ஆனந்ததாண்டவர் தம் வலப்பாதத்தை ஊன்றியிருக்கிறார். அழுத்தப்பட்டிக்கும் நிலையிலும் தலை தூக்கிப் பார்க்கும் முயலகனின் கையில் பாம்பு. இறைவனின் இடத்திருவடி உயர்த்தப்பட்டு வலப்புறம் வீசப்பட்டுள்ளது. பின் கைகளில் உடுக்கையும் தீச்சுடரும். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை வேழமுத்திரையில் மார்பின் குறுக்கே நீட்டப்பட்டுள்ளது.



விரிசடையின் வலப்புறம் கூப்பிய கைகளுடன் கங்கை; இடப்புறம் பிறை. நீள வளர்ந்த வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம். இரண்டு ஆரங்கள், அரும்புச்சரம், தோள்மாலை, தோள், கை வளைகள், சிற்றாடை, இடைக்கட்டு, தாள்செறிகள், வீரக்கழல் இவை இறைவனை அணிசெய்கின்றன. இடைக்கட்டின் முடிச்சுத்தொங்கல்கள் ஆடல் வேகத்தில் இருபுறமும் விரிந்துள்ளன.

அண்ணலின் இடப்புறம் கரண்டமகுடம், கழுத்தணி பெற்றுச் சமநிலையில் நிற்கும் அம்மையின் வலக்கையில் மலர்; இடக்கை நெகிழ் கையாக உள்ளது. இறைவனைப் போலவே இவருக்கும் வலச்செவியில் மகரகுண்டலம். இடச்செவியில் பனையோலைக் குண்டலம் கோட்ட மேல் விளிம்பைத் திருவாசி போல் செதுக்கி மேலே தீச்சுடர்கள் காட்டியுள்ளனர்.

அம்மன் கோயில்

குடைவரைக் கோயிலின் வடபுறத்தே கிழக்குப் பார்த்த நிலையில் உள்ள அம்மன் கோயில் கற்றளியாக அமைந்துள்ளது. கருவறை, முகமண்டபம் பெற்ற இத்திருமுன் ஜகதி, கண்டம், பெருவாஜனம் கொண்ட துணைத்தளத்தின்மீது கட்டப்பட்டுள்ளது. அரைத்தூண்களற்ற சுவரும் வாஜனம், வலபி, ஆழமற்ற கூடுகளுடன் கபோதம் எனக் கூரையிழுப்பும் கொண்டுள்ள இத்திருமுன்னின் பல இடங்களில் கல்வெட்டுச் சிதறல்கள் காணப்படுகின்றன.

கருவறையின் இட நிலைக்காலில் குலசேகர பாண்டியர் காலக் கல்வெட்டு உள்ளது. கருவறையில் பின் கைகளில் அக்கமாலையும் மலரும் கொண்ட மரகதவல்லி அம்மை, முன் கைகளுள் ஒன்று காக்கும் குறிப்புக் காட்ட, மற்றொன்று கடியவலம்பிதமாய் அமையச் சமநிலையில் உள்ளார்.

குடைவரையின் எதிர்ப்புறத்தே உள்ள பெருமண்டபச் சுவர்களிலும் கல்வெட்டுச் சிதறல்கள் உள்ளன. குடைவரைக்குத் தெற்கிலுள்ள சரிவில் விழும் நீரைக் கீழிறக்கச் சிறிய முகப்பு வெட்டியுள்ளனர். அதற்கு இரண்டு தூண்கள் நிறுத்திக் கூரை அமைத்துள்ளனர். அந்த முகப்பு வழி இறங்கும் நீர், கீழுள்ள சுனைக்குப் போகிறது. இச்சுனை நீரே திருமுழுக்காட்டுக்குக் கொள்ளப்படுகிறது. கீழ்ப்பகுதியில் உள்ள மடைப்பள்ளி மண்டபம் புதிய இணைப்பாகும்.

கல்வெட்டுகள்

குடைவரையின் எப்பகுதியிலும் கல்வெட்டுகள் இல்லை. ஆனால், முன்மண்டபம், நந்திமண்டபம் இவற்றின் புறச்சுவர்களிலும் மடைப்பள்ளியின் புறச்சுவர்கள், உட்புறத் தாங்குதளம் இவற்றிலும் அம்மன் திருமுன்னிலுமாகப் பதினொரு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் இரண்டு முழுமையானவை. ஏனைய ஒன்பதும் துணுக்குகளாய் உள்ளன.

குடைவரை முன்மண்டபக் கிழக்குச் சுவரில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. சாளரத்திற்கு அருகிலுள்ள கல்வெட்டு நாராயணன் என்ற பெயரை மட்டும் தருகிறது. பிள்ளையார் சிற்பத்திற்குக் கீழுள்ள கல்வெட்டு அகம்படியாகிய தில்லை நாயகன் பென்மன் என்பார் பெயரைத் தருகிறது. அவர் பிள்ளையாரை எழுந்தருளுவித்தவர் ஆகலாம். நந்திமண்டபக் கல்வெட்டு மெய்க்கீர்த்தியொன்றின் துணுக்காக உள்ளது.

அம்மன் திருமுன்னில் உள்ள ஐந்து கல்வெட்டுகளுள் துணுக்குக் கல்வெட்டுகள் நான்கு. திருநிலைக்காலில் காணப்படும் பதின்மூன்றாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள நாற்பத்தாறு வரிக் கல்வெட்டு இறைவனே பேசுவது போல் அமைந்துள்ளது. சாகல்யகுடி கேசவன் தேவன், ஆப்பனூர் சுந்தரத்தோளன் பேராயமுடையான் உள்ளிட்ட பத்துப் பேருக்கு இறைவனால் காராண்மை ஜன்மமாக நிலம் ஒதுக்கப்பட்டது. குலசேகரரின் எட்டாம் ஆட்சியாண்டு முதல் கைக்கொள்ளப்பட்டுப் பயிர் செய்யப்பட்ட இந்நிலத்திற்கான தீர்வைகள் கல்வெட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. இருபத்து நான்கு சாண் கோலால் அளக்கப்பட்ட ஒரு மா நீர்நிலத்துக்கு எட்டுக்கல நெல், ஆயிரத்தெண்மன் காலால், கோயில் அடுக்களைப்புறத்தே அளந்து தருதல். அத்துடன் மாத்தால் ஒன்றரைத் திரமம் தேவகன்மிகள் கையில் தருதல்.
2. கோடைக் குறுவை விளைந்த நிலங்களுக்கு இந்நெல்லிலும் திரமத்திலும் பாதி கொடுத்தல்.
3. கருஞ்செய், புன்செய் நிலங்களில் இருபத்து நான்கு சாண் கோலால் அளக்கப்பட்ட ஒரு மா நிலத்திற்கு ஒன்றரைத் திரமம் தருதல்.

முகமண்டபச் சுவர்களிலுள்ள கல்வெட்டுச் சிதறல்களுள் ஒன்று, மன்னர் ஒருவரின் ஆறாம் ஆட்சியாண்டின் பங்குனித் திங்கள் முதல் கோயில் நிலங்களுக்குத் தரப்பட்ட விலக்கைச் சுட்டுகிறது. திருவிடையாட்டம், கருநீலக்குடிநாடு என்பன குறிக்கப்பட்டுள்ளன. மற்றொரு கல்வெட்டு, திருப்படிமாற்று உள்ளிட்ட வேண்டும் நித்த நிவந்தங்களுக்குத் தரப்பட்ட கொடை யையும் சந்திவிக்கிரகப்பேறு என்ற வரியையும் குறிக்கிறது.

அம்மன் திருமுன் புறச்சுவர்க் கல்வெட்டு நிலக்கொடையைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். குலசேகர சதுர்வேதிமங்கலம், கண்டநாட்டு நாடாள்வான் எனும் தொடர்கள் கிடைக்கின்றன. மடைப்பள்ளிப் புறச்சுவர்களிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளுள் ஒன்று கடமை, அந்தராயம் வழி ஒன்றே முக்கால் காசு வருமானம் வந்ததாகக் கூறுகிறது. இக்கல்வெட்டில் வரகுணப் பேரேரி இடம்பெற்றுள்ளது. தேவதான நிலங்கள் இருந்த குறிப்பும் அவற்றிற்குப் பெறப்பட்ட அமைப்பிலேயே புதிய கொடை நிலத்திலிருந்தும் வரிகள் பெற ஏற்பாடான தகவலும் குறிப்பிடத்தக்கவை.

மற்றொரு கல்வெட்டு இறைவனுக்குத் தரப்பட்ட கொடையொன்றைச் சுட்டுகிறது. வடசுவரின் மேற்பக்கத்தில் உள்ள கல்வெட்டு, 'சோழ பாண்டியனான குலசேகர சதுப்பேதி மங்கலம் மங்கலத்து ஊரார்க்கு ஆனாயம்' என்றமைந்துள்ளது. இக்கல்வெட்டின் கீழ்ப்பகுதியில் ஒரு முக்காலியும் அதன் மேல் நிறைகுடமும் காணப்படுகின்றன. முக்காலியின் இருபுறமும் குத்துவிளக்குகள். ஆனாயம் என்ற சொல்லிலுள்ள ஆயம் சங்க காலச் சொல்வழக்காகும். இது ஆத்திரளைக் குறிக்கிறதா அல்லது அடைக்கலம் தொடர்பான சொல்லாட்சியா என்பது ஆய்வுக்குரியது.

குடைவரையின் காலம்

கல்வெட்டுகளின் வழிக் குடைவரையின் பெயரையோ, இறைவனின் பெயரையோ இங்குள்ள அம்மன் திருமுன் தொடர்பான செய்திகளையோ பெறமுடியவில்லை. மூவரை வென்றான் ஊர்ப்பகுதியில் காணப்படும் சிதைந்த நிலையில் உள்ள ஈசுவரர் கோயில் கல்வெட்டுகளிலும் இக்குடைவரை தொடர்பான செய்திகள் இல்லை.

இந்நிலையில் மூவரைவென்றான் குடைவரையின் காலத்தை அதன் அமைப்புக் கொண்டு பொ. கா. 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகக் கொள்ளலாம். இங்குள்ள கல்வெட்டுகள் இக்கோயில் 13, 14ஆம் நூற்றாண்டுகளில் வளமுடன் திகழ்ந்ததை உணர்த்துகின்றன. இந்நாளிலும் இராசபாளையத்தைச் சேர்ந்த சில குடியினருக்கு இக்கோயில் முக்கியத் தலமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

பயன்பாட்டு மொழியே வாழும் மொழி : அழிநிலை மொழிகளை முன்னிறுத்தி...

முனைவர் ச. சீனிவாசன்
(தமிழக அரசின் சிறந்த நூல் மற்றும் நூலாசிரியர் விருதாளர்)
பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை, திருமலா திருப்பதி தேவஸ்தானம்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி (தில்லிப் பல்கலைக்கழகம்)

அறிமுகம்

ஆண்டு தோறும் நவம்பர் மாதம் அழிந்துவரும் மொழிகள் மாதமாக நினைவுகூர்ந்து வரும் நிலையில் இரண்டு வாரத்திற்கு ஒரு மொழி என்ற விகிதத்தில் அவை அழிவைச் சந்திக்கின்றன என இந்திய ராணுவ விஞ்ஞானி டாக்டர் வி. டில்லிபாபு பதிவு செய்கிறார். மனிதமூளை உயிர்ப்புடன் சிந்திப்பதால் விழையும் எண்ணங்கள், கருத்துக்கள், உணர்ச்சிகளைப் பிறரோடு பரிமாறிக்கொள்ளப் பயன்படும் ஒரு கருவிதான் மொழி. மனிதன் கண்டுபிடித்த கருவிகளிலேயே இந்த மொழி எனும் கருவிதான் மகத்தானதாகக் கருதப்படுகிறது. தாய்க்கு இணையான தகுதியுடைய மொழி மனித சமூகம் பெற்ற மகத்தான வரமாகும். ஒரு குறிப்பிட்ட இனத்தின் புற அடையாளமாக விளங்கும் மொழி அக்குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்களின் மதக் கோட்பாடு, கலை, அரசியல், வரலாறு, சடங்கு முறைகள், பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் முதலான பண்பாட்டுக் கூறுகளை வாழவைப்பதாகவும் அதன் செயற்பாடு அமைகிறது. அவற்றை அடுத்தடுத்த தலைமுறையினருக்குக் கடத்தும் ஊடகமாகவும் மொழி செயலாற்றுகிறது.

மொழியும் சமூகமும்

மொழிகள் ஓர் இனக் கலாசாரத்தின் உயிர்நாடியாகத் திகழ்வதுடன், அவை, நமக்கு அடையாளத்தையும் சுயமரியாதையையும் தருபவை. உலகில் தோன்றிய ஒவ்வொரு மொழியும் அதன் சமூகக் கடமைகளை ஆற்றுவதோடு சமூகத்தின் ஒரு முக்கிய பகுதியாகவும் உள்ளது. அடிப்படையில் மொழியும் சமூகமும் நெருங்கிய உறவுடையவை. உயிர் இல்லாமல் எப்படி ஒருவர் வாழ முடியாதோ, அதேபோல் மொழி இல்லாமலும் ஒருவரால் உயிர் வாழ முடியாது. எந்த ஒரு சமூகமும் மொழி இல்லாமல் இயங்குவதாகச் சான்றுகள் இல்லை. மொழி ஒரு

சமூகத்தின் பாதுகாவலாகவும், ஓர் இனத்தின் உயிராகவும், அடையாளமாகவும், பண்பாட்டின் சின்னமாகவும், பாதுகாப்பு அரணாகவும் விளங்குகிறது. ஆக, ஒரு மொழியின் சிறப்பு அதன் தொன்மையைத் தாங்கி நிற்பதோடு பண்பாட்டுத் தொடர்ச்சி கொண்டதாகவும் இருக்கிறது.

உலக மொழிகளின் மொத்த எண்ணிக்கை, அவற்றின் அழிவு மற்றும் இருப்பு குறித்த துல்லியமான கணக்குகளைக் கணிக்க முடியவில்லையெனினும், உலகம் முழுவதும் சுமார் 7105- க்கும் மேற்பட்ட மொழிகளும், இந்தியா முழுக்க சுமார் 1,652-க்கும் மேற்பட்ட மொழிகளும் உள்ளதாக மொழியியலாளார் கணக்கிட்டுள்ளனர். இவற்றை மக்கள், தாய்மொழிகளாகவும், கிளைமொழிகளாகவும் பேசியும் எழுதியும் வருகின்றனர். எழுத்து வடிவம் இல்லாத மொழிகளும் இவற்றில் அடங்கும். சில மொழிகள் எழுத்து மொழியாகவும், பேச்சு மொழியாகவும் இருந்து வருகின்றன.

மொழிகளின் எதிர்காலம்

உலகத்தோடு ஒப்பிடும் போது அதிக மொழிகள் பேசும் நாடுகள் வரிசையில் இந்தியாவும் இடம் பெற்றிருக்கிறது. உலக அளவில் பல மொழிகள் அழிவின் விளிம்பில் உள்ளதாக அண்மைக்கால அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வரும் காலங்களில் 40 சதவீத மொழிகள் இந்த ஆபத்தான நிலையைச் சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மொழியியல் வல்லுனர்கள் எச்சரித்துள்ளார். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலகத்திலிருக்கும் ஈராயிரம் மொழிகளில் தொண்ணூறு சதவீத மொழிகள் இல்லாமல் போய்விடும் என்று சமூக மொழியியல் ஆய்வாளர்கள் அச்சுறுத்துகின்றனர். மொழிகள் ஒரு தலைமுறைக்கு 20 சதவீத வேகத்தில் அழிந்து வருகின்றன என்று மானிடவியலாளர்கள் கவலைப்படுகின்றனர். இந்த உலகில் பேசப்படும் மொத்த மொழிகளில் ஐம்பது விழுக்காடு மொழிகள் மறைந்துவிடும் என்றும், இன்றைய இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் 196 மொழிகள் மரணமுறும் என்றும் யுனெஸ்கோ அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. 1921-2011 ஆண்டுகளில் வழக்கிலிருந்த 1599 மொழிகளில் 220 மொழிகள் அழிந்து விட்டதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது.

22 அட்டவணை மொழிகளும், நூற்றுக்கும் மேற்பட்ட அட்டவணை அல்லாத மொழிகளும் இந்தியாவில் அதிக அளவிலான மக்களால் பேசப்பட்டு வருகின்றன. மேற்குறித்த இந்திய அட்டவணை மொழிகள் தவிர பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளால் 31 மொழிகள் ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளில், பத்தாயிரத்திற்கும் குறைவான எண்ணிக்கையிலான மக்களால் பேசப்பட்டுவரும் 42 மொழிகள் அழியும் நிலையில் இருப்பதாக உள்த்துறை அமைச்சகம் தெரிவிக்கிறது. அந்தமான்-நிக்கோபர் தீவுகளில் பேசப்படும் 11 மொழிகளும் இதில் அடங்கும். மணிப்பூரில் 7, இமாச்சலப் பிரதேசத்தில் 4, ஒடிசாவில் 3, அருணாசலப் பிரதேசத்தில்

2, அஸ்ஸாமில் 2, உத்தராகண்ட், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரம், மேகாலயம், மேற்கு வங்கம் ஆகிய மொழிகளில் தலா ஒன்று, கர்நாடகத்தில் பேசப்படும் குருபா மொழி, ஆந்திரப்பிரதேசத்தில் பேசப்படும் கடபா, நாய்கி மொழிகள், தமிழகத்தில் பேசப்படும் கோடா, தோடர் மொழிகள் என அழிநிலையில் இருக்கும் மொழிகளின் எண்ணிக்கை நீண்டுகொண்டே போய்க் கொண்டிருக்கிறது. 4500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் தமிழ் மொழி யுனெஸ்கோவாவால் வெளியிடப்பட்டுள்ள அழியப்போகும் மொழிகளின் பட்டியலில் பதினேழாவது இடத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 2057- இல் பேசப்படும் மொழியாகத் தமிழ் இருக்குமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

மனித சமூகம் தனது கருத்துப் பரிமாற்றத்திற்காக உருவாக்கிக் கொண்ட பல மொழிகள் காலப்போக்கில் தாக்குப்பிடிக்க முடியாமல் அழிந்துவிட்டன. இன்னும் ஏராளமான மொழிகள் அழிவின் விழிம்பில் இருக்கின்றன. செவ்வியல் மொழிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. செவ்வியல் மொழிகளான கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், வடமொழி, சீனம் மற்றும் தமிழ் ஆகியவற்றில் சீனமும் தமிழும் இன்றும் வழக்கில் இருக்கின்றன. ஏனையவை வழக்கொழிந்து போயின. எனினும் மொழிகளின் வரலாற்றில் அவை இடம்பெறுவது தவிர்க்கமுடியாததே. ஹார்ட்வார்ட் பல்கலைக்கழகத்தில் அவற்றிற்கு இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதே அதற்கு ஆதாரம்.

ஒருங்கிணைந்த முயற்சிகள்

அழிந்துவரும் - அழியப்போகும் இந்திய மொழிகளை அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. மொழிகளை அழியாமல் பாதுகாக்க நாம் அனைவரும் விளிப்புணர்வோடு இருப்பதோடு அரசு மேற்கொள்ளும் முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைப்பும் நல்க வேண்டும். இந்திய அரசோடு, யுனெஸ்கோ மற்றும் தில்லியிலுள்ள கலைகளுக்கான இந்திரா காந்தி தேசிய மையம் (Indira Gandhi National Centre for the Arts-IGNCA) ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து 700 அழியும் நிலையிலுள்ள மொழிகளைப் பாதுகாக்கும் ஆக்கப்பூர்வ முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஆர்வமிக்க துறைசார் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து பிராமி, மோடி, கோரகா, இருளா, சோளகா, சாரதா, கைத்தி, தக்ரி முதலான அழிநிலை மொழிகளை அதன் வளமான இலக்கியங்கள் மற்றும் ஓலைச்சுவடிகளைக் கொண்டு மீட்டுருவாக்கம் செய்து வருகின்றது. இந்தியாவிலுள்ள மத்தியப் பல்கலைக்கழகங்களில் அழிநிலை மொழிகள் மையங்களை நிறுவுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் அதற்கான உதவிகளையும் பல்கலைக்கழக மானியாக்குழு (UGC) 2014-இல் அறிவித்துள்ளது. அதனடிப்படையில் தலா 50.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஒன்பது மத்தியப் பல்கலைக்கழகங்களில் அழிநிலை மொழிகள் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மொழிகளை அழியாமல் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளில் மைசூரிலுள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவனமும்

(Central Institute of Indian Languages- CIIL) ஈடுபட்டுள்ளது. அருகிவரும் மொழிகளைப் பாதுகாக்க ஒருங்கிணைந்த ஆக்கப்பூர்வ முயற்சிகள் தேவை என்பதை இது உணர்த்துகிறது.

மொழிகளின் சிதைவும் மரணமும்

உலக மொழிகளை வாழும் மொழிகள், அழிந்துவரும் மொழிகள் என இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். 'கிறித்தவம் தான் ஆட்சியில் இருந்த நாடுகளில் எல்லாவற்றிலும் அவற்றின் பன்முகத் தன்மைகளை அழித்து ஒரு கடவுள், ஒரு புத்தகம், ஒரே இனம், ஒரே மொழி எனும் தத்துவத்தை நிலைநிறுத்தியது. அதன் பொருட்டு அது கொலை, அச்சுறுத்தல் ஆகிய காரணிகளைக் கையெலெடுத்தது. அதற்கு முதலாவதாகப் பலியானது ஹீப்ரு *(Hebrew)*, கோயின் கிரேக்கம் *(Koine Greek)*, காலிக் *(Gaulic)* ஆகிய பழமையான மொழிகளாகும். *(உமரி காசிவேலு, 2018: 60-64)*. அயர்லாந்துக் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் தாய் மொழியான காலிக் *(Gaulic)* ஆங்கில மொழியைவிட அனைத்து விதத்திலும் சிறப்பு வாய்ந்தது. ஆதாமும் ஏவாளும் பேசிய மொழி என்றும் அவர்கள் நம்பினர். ஆனால், புராட்டஸ்டாண்ட் கிறித்தவர்கள் கத்தோலிக்கர்களின் சிலை வழிபாட்டிற்கும் காலிக் மொழி பேசுவதற்கும் தொடர்புபடுத்தி அம்மொழியை அழிக்க எண்ணினர். விளைவு அயர்லாந்தில் காலிக் மொழி பேசுவதைத் தடை செய்தது ஆங்கில அரசு. காலப்போக்கில் காலிக் மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

வட மாநிலங்களில் மலைப்பிரதேச மாநிலமான உத்தராகண்ட்டில் கர்வாலி, குமாவோனி, ஜான்சாரி ஆகிய மொழிகள் மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இவை வாழும் மொழிகளாகவும் விளங்குகின்றன. ஆயின், அம்மாநில மக்கள் மத்தியில் இந்தி மொழியின் ஆதிக்கமும், பயன்பாடும் அதிகமாக உள்ளதால் மேற்குறித்த மொழிகளின் பயன்பாடு மக்களிடையே குறைந்து அழியும் அபாயத்தில் உள்ளன. மொழிகளின் சிதைவு என்றே இதனைக் குறிப்பிடலாம். வழக்கொழியும் நிலையில் உள்ள இம்மொழிகள் யுனெஸ்கோ நிறுவனம் வெளியிட்டுள்ள அழிநிலை மொழிகளின் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளன. எல்லா மொழிகளும் அவற்றின் அமைப்பு அடிப்படையில் சமமானவை என்று மொழியியலாளர்கள் கருதுகின்றனர். ஆனால், மக்கள் பயன்படுத்தும் மொழிகளில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டுவிட்டன. தங்கள் தாய்மொழி மீதான தாழ்வு மனப்பான்மை பெரும்பாலான இந்திய வட்டார மொழிகளில் உருவாகிவிட்டது.

மொழிகள் தோன்றிய காலத்திலிருந்தே அவற்றில் சில அழிவையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. வரலாற்று ரீதியாக காலனித்துவம் பல மொழிகளுக்கு அழிவை ஏற்படுத்தியிருக்கிறது. மொழிகளின் மறைவு அல்லது மரணத்தைப் போகிற போக்கில் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் அழிவு இயற்கையப் பாதிக்கும் என்று சுற்றுச் சூழல்

ஆர்வலர்கள் கருதுகின்றனர். இதே போல்தான் மொழிகளின் அழிவு அவை சார்ந்த சமூகங்களையும் பாதிக்கும். எனவே, மொழி என்பது மனிதனையும் அவன் சார்ந்த சமூகத்தையும் இணைக்கும் பாலமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையில்லை.

மொழிகளின் அழிவிற்கான காரணிகள்

குழந்தைகள் தங்களது பெற்றோர்களிடமிருந்து அவர்கள் பயன்படுத்தும் மொழியைக் கற்றுக்கொள்ளவில்லை என்றால் அந்த குறிப்பிட்ட மொழியின் இருப்பும் நீட்சியும் கேள்விக்குரியதாகிவிடும், அதாவது ஒரு தலைமுறையினர் முந்தைய தலைமுறையினரிடமிருந்து மொழியைப் பெறத் தவறும் போது அந்த மொழி மறையத் தொடங்குகிறது என்று மொழிகளின் மரணத்திற்கான முழுமுதற் காரணிகளாக முன்வைக்கின்றனர் மொழியியலாளர்கள். மொழியின் வளர்ச்சிக்குச் சாதகமான அரசியல் மற்றும் சமூகச் சூழல் இல்லையென்றாலும் அது அழிந்துபோக வாய்ப்புள்ளது. ஒரு பெரிய மொழி சிறிய மொழி ஒன்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் போது அல்லது உட்கொள்ளும் போது மொழி இழப்பு ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட மொழி பேசுவோரின் எண்ணிக்கை நூற்றுக்கும் கீழாக இருந்தாலும் காலப்போக்கில் மறைய வாய்ப்புள்ளது. தாய்மொழி ஆட்சி மொழியாக, கல்வி மொழியாக, நீதி மொழியாக, வழிபாட்டு மொழியாக இல்லாவிட்டால் அக்குறிப்பிட்ட மொழி அழிந்துவிடும் என்று மொழி அழிவிற்குரிய முக்கிய காரணிகளாக முன்வைக்கப்படுகின்றன. மொழிக்கலப்பு, பிறமொழி மீது மோகம், தாய் மொழி மீது ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை, இடம்பெயர்தல், மதமாற்றம் ஆகியனவும் மொழி அழிவிற்கு வழிவகுக்கும் காரணிகளாக அமைகின்றன. குழந்தைகள் தாய்மொழியை விடுத்துப் புதிய மொழியைக் கற்பதாலும், தங்கள் தாய் மொழியைக் கற்காமல் புறக்கணிப்பதாலும் மொழிகள் அழிவைச் சந்திக்கின்றன.

அனைவரும் தங்களின் தாய் மொழியை உயர்வானதாக மதிப்பதும் அதனை நேசிப்பதும் இயல்பானதே. ஆனால், காலப்போக்கில் ஏற்படும் சமூக-பொருளாதார மாற்றங்களால் அதே சமூக-பொருளாதார மேம்பாட்டைத் தரக்கூடிய மொழியை உயர்வானதாகவும், தங்கள் தாய் மொழியைத் தாழ்வானதாகவும் கருதும் மனப்பான்மைக்கு மக்கள் ஆட்பட்டுவிடுகிறார்கள். இளைய தலைமுறையினர் மத்தியில், தாய்மொழி தங்களின் எதிர்கால வாழ்விற்கும் வளத்திற்கும் பெரிதும் பயன்படாது என்ற எண்ணம் வேரூன்றி விட்டது. 'எங்கள் பிள்ளைகளுக்குத் தாய்மொழியில் எழுதப் படிக்கத் தெரியாது, ஏனென்றால் அவர்கள் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள்' என்று பெருமையாகச் சொல்லக்கூடிய பெற்றோர்களும் இருக்கிறார்கள். ஆந்திர மக்களில் வீட்டிற்கு ஒருவர் அமெரிக்காவில் குடியேற வேண்டும் என்பதும், கேரள மக்களில் குடும்பத்தில் ஒருவர் அல்லது ஒட்டுமொத்தக் குடும்பமும் வளைகுடா நாடுகளில் குடியேறிவிட வேண்டும் என்பதும் எழுதப்படாத சட்டமாக உள்ளது. பஞ்சாபியர்கள் கனடாவில் குடியேறுவதைப் பெருமையாகக் கருதுகின்றனர்.

அதை நோக்கிய பயணத்தில் அவர்கள் முனைப்புடன் செயல்பட்டும் வருகிறார்கள். சென்ற இடத்தில் தாய்மொழியை விடுத்துப் புதிய மொழி ஒன்றைக் கற்க நேர்கிறது. தாய்மொழி கைவிடப்படுகிறது. வீட்டுச் சூழலில் தாய் மொழியின் பயன்பாடு குறையும் போது அம்மொழி மெல்ல மெல்ல மரணத்தை எதிர்கொள்ள நேர்கிறது. ஒரு மொழியின் பயன்பாடு குறையும் போது அந்த மொழி சுருங்கும், சிதையும் இறுதியாக மரணிக்கும். எனவே, பயன்பாட்டு மொழியே உயிரோடு இருக்கும்; பாதுகாக்கவும்படும்.

செய்ய வேண்டிய செயற்பாடுகள்

அழியும் மொழிகளைப் பாதுகாப்பதற்கான எதிர்காலச் செயற்பாடுகளாகச் சிலவற்றை முன்மொழியலாம்.

- மொழிகளைப் பாதுகாக்க ஒருங்கிணைந்த புதிய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.
- மொழிகள் உயிர்ப்புடன் இருக்கும்போதே அவற்றின் அமைப்பு, இலக்கண- இலக்கியங்கள், வரலாறு மற்றும் வழக்காறுகள் முதலான தரவுகளை ஆவணப்படுத்த வேண்டும்.
- மொழிகளின் வாழும் கலாச்சாரக் கூறுகளை பாதுகாக்க ஓர் மக்கள் இயக்கம் உருவாக்கப்பட வேண்டும்.
- மொழிகளை மேலும் வளமாக்க ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகள் தேவை.
- மொழியைப் புத்துயிர் பெறச் செய்வதற்கான, தொலைநோக்குப் பார்வை கொண்ட கல்வித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- டிஜிட்டல் வளங்கள் மூலம் மொழிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- சமூகங்களும், சட்டங்களும் மொழி அழிவை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்ப வேண்டும்.
- அரசியல் ஜனநாயகத்திற்கு நிகராக மொழிகளின் ஜனநாயகமும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

தேவை அழிநிலை மொழிகளுக்கான ஆணையம்

மொழிகளைப் பாதுகாக்க வேண்டிய சூழல் உலக அளவில் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவிலும் அது நிலைபெற வேண்டும். அதற்கு, ஆளும் இந்திய அரசு தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய ஆணையம் ஒன்றை ஏற்படுத்தி அழிநிலை மொழிகளைப் பாதுகாக்க வழிவகை செய்ய வேண்டும் என்பதே மொழி வல்லுனர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மொழிநல விரும்பிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. விலங்குகளும் பறவையினங்களும் இயற்கையாகவே அழியும் இயல்புடையவை. அவற்றைக் காப்பதில் மக்களுக்கு இருக்கும் ஆர்வம் மொழிகளைக் காப்பதில் இல்லை. விலங்குகள் நல ஆர்வலர்கள் அரசிடம் முறையிட்டு வெற்றியும் பெறும் போது, நமது சமூக அடையாளமாக விளங்கும் மொழிகளின் அழிவைப் பாதுகாக்க அரசிடம் முறையிடுவதால் குறைந்து

போய்விட மாட்டோம். அழிவின் விளிம்பில் தத்தளிக்கும் மொழிகளைக் பாதுகாப்போம்... வாழ வைப்போம்... வளம் பெறுவோம்.

சான்றாதாரங்கள்

1. அரங்கன். கி. மொழிகளின் மரணம், சென்னை : நெய்தல் ஆய்வு.
2. ஆனைமுத்து. வே. 2017. '2057- இல் பேசப்படும் மொழியாகத் தமிழ் இருக்குமா ?'. சிந்தனையாளன், அக்டோபர், 2017.
3. இன்னாசி. சூ.2004. இந்திய மொழிக் கொடை, சென்னை : நிலா நூலகம்.
4. இராமலிங்கம். கே.பி. 2022. 'உள்ளூர் மொழிகளை ஊக்குவிக்கும் பிரதமர்!'. தினமணி, 26.10.2022.
5. உதையை மு. வீரையன். 2016. 'எத்தனை காலம்தான் மறைக்க முடியும் ?', தினமணி, 20.2.2016.
6. உமரி காசிவேலு. 2018. பிஷப் கால்டுவெல் : பிழையுரையும் பொய்யுரையும்...- திராவிட இனவாதமும், சென்னை : வர்சன் பிரசுரம்.
7. ஔவை அருள். 2022. 'மாந்தர் பெற்ற மகத்தான வாரம்', தினமணி, 21.2.2022.
8. கதிரவன். இரா. 2016. மொழிகளின் எதிர்நீச்சல், தினமணி, 2.2.2016.
9. கந்தசாமி. சா. 2018. 'இந்தியர்கள் அறியாத தமிழ் மொழி', தினமணி, 9.4.2028.
10. ----------. 2017. 'உலகெங்கும் ஒரே மொழி', தினமணி, 7.7.2017.
11. ----------2017. 'தாய்மொழி அழிப்பும் இந்தித் திணிப்பும்', தினமணி, 3.5.2017.
12. கோதை ஜோதிலட்சுமி. 2025. 'நமது மொழி - வேற்றுமையில் ஒற்றுமை', தினமணி, 9.6.2025.
13. சிதம்பரநாதன். பெ. 2017. 'தாய்மொழியின்றி கல்வியில்லை', தினமணி, 26.4.2017.
14. பூரணச்சந்திரன் .க. 2004. இந்திய மொழிகள்: ஓர் அறிமுகம், திருச்சி : நிவேதா : நல்வாழ்வு கல்வி அறக்கட்டளை.
15. மலையமான். 2018.' தாய்மொழியைப் போற்ற ஒரு தினம்', தினமணி, 21.2.2018
16. ----------. 2017.. அழிவின் விளிம்பில் நெளியும் மொழிகள், தினமணி, 30.11.2017.
17. நெல்லை சு. முத்து. 2017. 'மொழி என்பது பேச்சா ? எழுத்தா ?', தினமணி, 11.4.2017.
18. விசயராகவன். கோ. 2023. 'அருந்தமிழ் வளர்ச்சியில் அகரமுதலிகள்'. தினமணி, 7.2.2023.
19. ஜெயபாஸ்கரன். 2017. 'அருகிவரும் அறிஞர் இனம்', தினமணி, 19.7.2017
20. Ritwiz Sarma. 2022. Language Endangerment and Culture Loss-A Case Study of Tai Khamti, A-AA+play_circleListen, October, 28, 2022.

Nuances in the Periya Puranam

Akshayan
Sydney, Australia

The Periya Puranam is an epic hagiography of 4286 songs, detailing the lives of the 63 revered devotees of Lord Siva. It was sung by the legendary Sekkizhar in the mid-1100s, and is regarded to this day as one of the most important Tamil poetry works of all time. Sekkizhar is known particularly for his deep and nuanced understanding of Tamil and Saivam. For example, his depth of knowledge in the Tevaram poems are unmatched, and this allows him to weave consistent and indispensable biographies of the Tevaram trio (Sambandar, Appar and Sundarar), using minute details from their poems. Below we take a look at some such nuances from this immortal work.

Sundarar meets Paravai

Sundarar is the third in the line of the trio of poet-saints who sang the sacred Tevaram. One day, as was usual, he went to the Thiruvaarur temple to worship the Lord, when:

As her friends encircled her,
as her lustre filled the streets,
and the fragrance of her honied locks
spread in all the directions
Paravaiyaar set out as she usually did,
to lovingly worship the jewelled feet of the Lord
(Periya Puranam – Thaduthaatkonda Puranam 137)

Paravaiyaar was a dancer at the Thiruvaarur temple, and the women destined to be Sundarar's first wife. This concept of destiny is beautifully hinted at by Sekkizhar when he sings of the moment when Sundarar and Paraviyaar first eye one another. First, when Sundarar sees Paraviyaar, he says to himself in amazement:

Is she a flowery branch of the wish granting karpaga tree,
or the glorious consort of the God of Love?
Is she the result of the holiest of deeds,
or is she a creeper crowned with rain cloud,
*upon which the bow, water-lily, coral and moon blossom?**
Is she a miracle, or Sivan's grace – I have not a clue!
(Periya Puranam – Thadu. Pu. 140)

* A beautiful set of metaphors impossible to translate into English. Paravaiyaar's slender form is compared to the flower creeper and the flowers which blossom there are listed. Each word in the list is a metaphor for various aspects of her. These flowers are the rain cloud (her dark-coloured hair), the bow (her eyebrows), the water-lily (her eyes), coral (her red lips) and the moon (her bright face).

Sekkizhaar then sings a song from the perspective of Paravaiyaar eyeing Sundarar:

Is he who appears before me Murukan,
or the incomparable God of Love of increasing effulgence?
Is he a celestial of garlanded shoulders,
or someone who has gained the grace of Sivan,

who's matted locks streak of lightning?
Who could he be, who has set my mind astray?
(Periya Puranam – Thadu. Pu. 144)

* ஆதாரம்: இவரது முயற்சியின் விளைவாகவும், ட்ரெமன்ஹீரின் அறிக்கையின் (Tremenheere's Report on the Pariahs of Chingleput) அடிப்படையிலும் தான் ஆங்கிலேய அரசு 1892-ல் புகழ்பெற்ற G.O. No. 1010/1010A ஆணையைப் பிறப்பித்தது. இதுவே பிற்காலத்தில் 'பஞ்சமி நிலம்' உருவாகக் காரணமாக அமைந்தது.

3. கல்விப் பணிகள்

கல்வியே சமூக மாற்றத்திற்கான கருவி என்பதை கௌடி உறுதியாக நம்பினார்.

* பள்ளிகள்: திருவள்ளூர் மற்றும் இக்காடு சுற்றியுள்ள கிராமங்களில் பல ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கினார்.

* பெண்கள் கல்வி: பெண்களுக்கென பிரத்யேகமாக உண்டு உறைவிடப் பள்ளிகளை (Boarding Schools) இக்காடு மிஷன் வளாகத்தில் நிறுவினார்.

* தொழிற்கல்vi: ஏழை மக்கள் வெறும் ஏட்டுக்கல்வி மட்டும் கற்காமல், தச்சுவேலை, விவசாயம், நெசவு போன்ற கைத்தொழில்களையும் கற்றுக்கொள்ள வழிவகை செய்தார்.

4. மருத்துவப் பணிகள் (இக்காடு மருத்துவமனை)

கிராமப்புறங்களில் மருத்துவ வசதி இல்லாததைக் கண்டு, மருத்துவப் பணிகளையும் துவக்கி வைத்தார்.

* இக்காடு மிஷன் மருத்துவமனை: இவரது முயற்சியால் உருவாக்கப்பட்ட சிறிய மருத்துவச் சாலை, பின்னர் பெரிய மருத்துவமனையாக வளர்ந்தது. இது இன்றும் CSI மருத்துவமனை, இக்காடு என்ற பெயரில் இயங்கி வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தின் மிக முக்கியமான மருத்துவச் சேவையாக இது இன்றும் கருதப்படுகிறது.

வரலாற்று ஆதாரங்கள் மற்றும் சான்றுகள்

வில்லியம் கௌடி அவர்களின் பணிகளை உறுதிப்படுத்தும் முக்கிய ஆதாரங்கள்:

* வாழ்க்கை வரலாற்று நூல்: ஜேம்ஸ் லூயிஸ் (James Lewis) எழுதிய "William Goudie" (வெளியீடு: Wesleyan Methodist Missionary Society, London, 1923). இந்நூலில் திருவள்ளூர் மற்றும் இக்காடு மிஷன் பற்றிய முழுமையான ஆவணங்கள் உள்ளன.

* அரசு ஆவணங்கள் (Government Orders): 1891-1892 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ட்ரெமன்ஹீர் சமர்ப்பித்த அறிக்கைகளில், மிஷனரிகள் அளித்த தரவுகள் மற்றும் அவர்களது கோரிக்கைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இதில் கௌடியின் பங்கு முக்கியமானது.

* கட்டிடங்கள்: இக்காடு கிராமத்தில் இன்றும் கம்பீரமாக நிற்கும் தேவாலயம், மருத்துவமனை கட்டிடங்கள் மற்றும் பள்ளிகள் அவரது பணியின் நேரடி சாட்சிகளாக உள்ளன.

முடிவுரை

வில்லியம் கௌடி வெறும் மதப் போதகராக மட்டுமல்லாமல், திருவள்ளூர் பகுதி மக்களின் சமூக உரிமைகளுக்காகவும், நில உரிமைகளுக்காகவும் போராடிய ஒரு சமூக சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிலம் கிடைக்கவும், கல்வி கிடைக்கவும் அவர் அமைத்த அடித்தளம் இன்றும் பயன் அளித்து வருகிறது

உலகப் பெருந்தமிழர் தனிநாயகம் அடிகளார் தனித்துவத் தமிழ்ப்பணி

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்

உலகப் பெருமொழியாகவும் உலகமுதன் மொழியாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் நம் தாய்த்தமிழ் விளங்கிடினும், அதன் உன்னதங்களையும் உயர்வுகளையும் முற்காலத்தில் உலகம் முற்றாக அறிந்திலது. ஏன், பரந்த பாரத கண்டத்திலும் வடமொழி எனப்பட்ட சமற்கிருதத்துக்குத் தரப்பட்ட முதன்மையும் முக்கியத்துவமும் கூட தமிழுக்குத் தரப்படாத அவலம் இருந்து வந்தது. இந்த இழிநிலையை மாற்றி, உலகப் பேரரங்கில் தமிழின் பழமையும் பெருமையும் உணரப்படவும் போற்றப்படவும் தம் பன்முகப் பங்களிப்புகளால் வழிவகுத்த ஐரோப்பிய அருளாளர்களைப் பற்றித்தான் இதுகாறும் இக்கட்டுரைத் தொடரில் அறிந்து வருகிறோம். அவர்களுள், இதுவரை நாம் பார்த்த பெருமக்கள் பலரும் மேலை நாட்டவரேயாகும். இந்தக் கட்டுரையில் நாம் பார்க்கப்போகும் அருள்தொண்டர் - அருந்தமிழ்த் தொண்டர் கீழைத்தேயமாகிய இலங்கையில் உதித்தவர். சேவியர் நிக்கலஸ் ஸ்தனிஸ்லாஸ் எனப் பெற்றோரால் பெயரிடப்பட்டு, பின்னர் சேவியர் தனி நாயகம் எனும் பெயரால் அறியப்பட்ட பெருமகனார், தமிழின் பெருமையை மிக அண்மைக் காலங்களில் வாழ்ந்து உலகறியச் செய்ததனால் மட்டுமன்று, தமிழ்தொடர்பான பன்முக ஆய்வுகளைப் பாரெங்கும் பரவிட பலவழிகளை உருவாக்கி, உயர் புகழ் பெற்றவர்.

I அடிகளார் பிறப்பும் இளமையும்

தனிநாயகம் அடிகளார் யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த ஹென்றி ஸ்தானிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை, செசில் இராசம்மா பஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனாக, 1913ஆம் ஆண்டு ஆகஸ்டு 8ஆம் நாள் பிறந்தார். பிறந்த ஊர், ஊர் காவல்துறையைச் சேர்ந்த கரம்பொன். பெற்றோரிட்ட பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்தனிஸ்லாஸ் என்பது. பின்னாளில், அவர் ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொள்ள வேண்டும் என்று தூத்துக்குடி மறை மாவட்ட ஆயர் பிரான்சிஸ் ரோச் ஆண்டகை தெரிவித்த விருப்பத்தின் பேரில், தம் தந்தையாரின் சம்மதத்துடன் அவரது முன்னோர்களில் ஒருவரது பெயராகிய 'தனிநாயகம்' என்பதைச் சேர்த்துக்கொண்டு, சேவியர் தனிநாயகம் அடிகள் ஆனார்.

கல்வி:

இளமையில் ஊர்காவல்துறையில் புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்றார். பின்னர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் *(patrick college)* கல்லூரியில் கேம்பிரிட்ஜ் உயர் பிரிவு வரை பயின்றார். அப்போது அக் கல்லூரியில் வெளிவந்த மலரின் ஆசிரியராக இருந்து, அதில் பல ஆங்கிலக் கட்டுரைகள் எழுதினார். பிறகு கொழும்புவிலுள்ள புனித பெர்னாட் குருத்துவக் கல்லூரியில் மறையியல் பயின்றார். அதனைத் தொடர்ந்து, உரோமிலுள்ள உர்பன் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பு படிக்க அனுப்பப்பட்டார். அங்கு அவர் தொன்மையியலிலும் வரலாற்றிலும் ஆர்வம் கொண்டு, ஆப்பிரிக்க ஆயரான புனித சைபீரியன் *(st. cyprian)* என்பவரின் காலத்தைப் பற்றி ஆய்வு செய்து, 'கார்த்தஜினியன் குருமார்' *(carthaginian Clergy)* என்ற தலைப்பில் ஆய்வேடு சமர்ப்பித்து, முனைவர் பட்டம் பெற்றார்.

அருட்பணிகள்

1938 மார்ச் 19இல் அவர் உரோமில் கத்தோலிக்க சமயக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் இந்தியாவுக்கு வந்தார். முதலில் கேரளத்துக்குச் சென்ற அவர், பிறகு தூத்துக்குடி மறை மாவட்டத்துக்கு வந்தார். அங்கு, நெல்லை மாவட்டத்திலுள்ள வடக்கன்குளத்தில் உள்ள புனித தெரசாள் உயர்நிலைப் பள்ளியில் துணைத் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். அவரது ஆழ்ந்த தமிழ்ப்பற்றின் காரணமாக, வடக்கன் குளத்தில் இருந்த பண்டிதர் குருசாமி சுப்பிரமணியம் ஐயரிடம் நான்காண்டு காலம் தமிழ் பயின்றார். வடக்கன்குளத்தில் ஆறாண்டு காலம் ஆசிரியப் பணிபுரிந்த பிறகு, முறையாகத் தமிழ் கற்கும் ஆர்வத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து முதுகலை (எம்.ஏ) பட்டம் பெற்றார். பின்னர் அப்பல்கலைக்கழகத்திலேயே, டாக்டர் அ. சிதம்பரநாதனாரின் வழிகாட்டலில் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் பொருள் பற்றி ஆய்வு மேற்கொண்டு, எம்.லிட். பட்டம் பெற்றார்.

ஏற்ற பிற பொறுப்புகள்

இவ்வாறு பன்முக ஆய்வுகளும் பணிகளும் மேற்கொண்ட அடிகளார், உலகெல்லாம் சென்று, தமிழ் பரப்பும் பணியைப் பல நாடுகளில் மேற்கொண்டார். பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வுப் பொழிவுகளும் அறக்கட்டளைப் பொழிவுகளும் நிகழ்த்தினார். 1952 முதல் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1961 முதல் 69 வரை, மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல் துறையின்தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றினார். அதே பல்கலைக்கழகத்தின் கலைப் புலத்தலைவர் மற்றும் தமிழ்த் தேர்வாளர் முதலிய பிற பொறுப்புகளையும் வகித்தார். பிரான்சின் பாரீஸ் பல்கலைக்கழகத்திலும் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் வருகை தரு பேராசிரியராகப் பணியாற்றினார்.

வேறு பல பல்கலைக்கழகங்களிலும் அரசு அமைப்புகளிலும் இலங்கை, மலேசியா, தமிழகம் ஆகிய நாடுகளில் பல்வேறு கல்வி சார்ந்த பொறுப்புகளை வகித்துத் திறம்படச் செயலாற்றினார். அடிகளார் இத்தனை பணிகளையும் சாதனைகளையும் செய்வதற்கு அவரது ஆழ்ந்த புலமையும் பன்முக அனுபவங்களும், தொடர்புகளும் பேருதவியாயிருந்தன. அடிகளார் ஏறத்தாழ 13 மொழிகளை அறிந்தவர் எனக் கூறப்படுகிறது. அவற்றுள், இத்தாலியம், ஸ்பானிஷ், போர்த்துகீசியம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், எபிரேயம், முதலிய மொழிகளில் சரளமாகச் சொற்பெருக்காற்றுமளவு புலமை பெற்றிருந்தார்.

II அவரது பன்முகப் பணிகளில் முக்கியமானவை (பன்முகங்களில் 7 முகங்கள்)

பன்முகப் பங்களிப்புகள் நிகழ்த்தி, அதிசயிக்கத்தக்க சாதனைகள் புரிந்த அடிகளாரின் பன்முகங்களில் ஏழினை மட்டும் சுருங்கக் காண்போம்.

அ. தமிழாய்வு மேதை

உலகப் பெருந்தமிழாய்வாளராக அறியப்படும் தனிநாயகம் அடிகளார் மேற்கொண்ட ஆய்வுகள் பல திறப்பட்டன. அவற்றுள் முக்கியமான 3 தளங்களாக அவரது ஒப்பியல் ஆய்வுகள், உலகு தழுவிய ஆய்வுகள், பல்துறை ஆய்வுகள் என்பனவற்றைச் சுட்டலாம். அவரது எம்.லிட். பட்ட ஆய்வு, பழந்தமிழ் இலக்கியங்களில் இயற்கை எனும் பொருளில் அமைந்தது. அது தமிழிலும் ஆங்கிலத்திலும் பலமுறை வெளியிடப்பட்டது. உரோமில் ஆப்பிரிக்கக் குருவொருவரின் வரலாறு பற்றி ஆய்ந்து, முனைவர் பட்டம் பெற்றார். பின்னர், மீண்டும் இங்கிலாந்து சென்று, அங்கு 'பண்டைய ஐரோப்பிய இந்தியக் கல்விமுறைகளுக்கிடையே ஓர் ஒப்பீடு சிறப்பாகத் தமிழ்க் கல்வி மரபினை அடிப்படையாகக் கொண்டு' என்ற பொருளில் ஆய்வுசெய்து, அதிலும் முனைவர் (Ph.D.) பட்டம் பெற்றார். எண்ணற்ற ஆய்வு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் பல்வேறு பொருண்மைகளில் வெளியிட்டுள்ள அவர், (நூற்பட்டியல் தனியே தரப்பட்டுள்ளது.) அவரது ஆய்வுப் பணிகளின் கொடுமுடியாக, 'Tamil Culture' (தமிழ்ப் பண்பாடு) என்ற

ஆய்விதழை காலாண்டிதழாகத் தொடங்கினார். அவரால், முன்னெடுக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அதைத் தொடர்ந்து வெளியிட வழி வகுத்தார். உலகளாவிய உயர் தமிழாய்வுகளின் தளமாகவும் களமாகவும் அது விளங்கிட வேண்டுமென்று விழைந்தார்.

ஆ. உலகத் தமிழாய்வு நாடுகள் நடத்திய உலகத்தமிழர்

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வண்ணம், உலகின் பல நாடுகளிலும் உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகள் சிறப்புற நடைபெற பெரும் முயற்சிகள் மேற்கொண்டு வெற்றிகண்டார். 1966 ஏப்ரலில் மலேசியாவில் அடிகளார் தலைமையில் முதல் உலகத் தமிழ் மாநாடும் 1970 இல் பிரான்சு நாட்டு பாரிசில் மூன்றாம் உலகத் தமிழ் நாடும் 1974 இல் யாழ்ப்பாணத்தில் நான்காவது மாநாடும் அடிகளாரின் முன்னெடுப்பில் நடந்தன. நான்காவது மாநாட்டில் யாழ்ப்பாணத்தில் விரும்பத்தகாத கலவரங்கள் நடந்தது அடிகளாருக்குச் சற்று மனவருத்தம் தந்தது. இந்த எல்லா மாநாடுகளின் நிகழ்வுகளும் ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வுக்கோவைகளாகத் தொகுக்கப்பட்டு, உலகளாவிய தமிழாய்வுக்கு நிரந்தரமான கருவூலங்களாக திகழ்கின்றன. இரண்டாவது சென்னை மாநாட்டினை ஒட்டியே, அன்றைய தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் பேராதரவோடு, சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தப்படவும் அடிகளாரே பெரும் பங்காற்றினார்.

இ) ஆய்வு நூல்கள் பல படைத்த எழுத்து வேந்தர்

அடிகளார் படைத்த நூல்கள், பிறரால் பதிப்பிக்கப்பட்ட மொழிபெயர்க்கப்பட்ட அவரது கட்டுரை நூல்கள், சொற்பொழிவுத் தொகுப்பு நூல்கள் பலவாகும். அவற்றின் ஒரு சிறு பட்டியலைக் காணலாம்.

1. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை - எம்.லிட். ஆய்வேடு
2. பழந்தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள் (முனைவர் பட்ட ஆய்வேடு)
3. தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் (உரைத் தொகுப்பு)
4. தமிழியல் நூல்கள் - ஆய்வடங்கல்
5. வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி பற்றிய தொகுப்பு நூல்
6. தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும் (தொகுப்பு நூல்)
7. தமிழ்த் தூது (தமிழியற் கட்டுரைகள்)
8. ஒன்றே உலகம் (உலகச் சுற்றுப் பயண நூல்)
9. திருவள்ளுவர் சென்னை, அண்ணாமலை பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் இவையன்றி, அவர் சில ஆங்கில நூல்களும் எழுதியுள்ளார். சில தமிழ் நூல்கள், ஆங்கிலத்தில் மொழியாக்கம் பெற்றுள்ளன.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் தமிழ் சார்ந்த பல துண்டு பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார்.

ஈ) உலகெல்லாம் பயணித்து, தமிழ் பரப்பிய தமிழ்த்தூதுவர்

தனிநாயகம் அடிகளாரின் தனித்துவமான பணியே, அவர் ஓர் உலகப் பெருந்தமிழராக ஒளிர்ந்து, உலகநாடுகள் பலவற்றிற்கும் பயணித்து, அங்கெல்லாம் தமிழின் பெருமையையும் பழமையையும் பறைசாற்றியவர் என்பதே. செருமனி நாட்டிலும் மொரீசியக, பிரான்சு முதலிய நாடுகளிலும் கம்போடியா, வியத்நாம், இந்தோனேசியா, தாய்லாந்து முதலிய தென்கிழக்காசிய நாடுகளிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, தமிழின் மாண்புகளை எடுத்துக்காட்டும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். பல நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகளிலேயே அவர் உரையாற்றியதாகக் கூறப்படுகிறது. பாரிசு, நேப்பிள்ஸ் முதலிய பல்கலைக்கழகங்களில் வருகை தரு பேராசிரியராகச் *(visiting Professor)* சென்று தமிழ்ப்பணியாற்றினார். அமெரிக்கா, தென் அமெரிக்கா, சீனா, ஜப்பான் முதலிய பல நாடுகளுக்கும் சென்று, தமிழுக்கான தூதுவராகத் தொண்டாற்றினார்.

உ. பொதுமை நோக்கில் தமிழ்பரப்பிய உலகப் பேரறிஞர்

அடிகளாருடைய ஆய்வு நோக்கும் தொண்டு நோக்கும் பரந்து பட்டது. சமய, இன, மொழி ஒற்றுமைகளை அவாவியது. கிறித்து சமயத் துறவியான அடிகளார் சைவ, வைணவ இலக்கியங்களிலும் ஆழ்ந்த புலமை பெற்ற, அவற்றிலிருந்து அடிக்கடி மேற்கோள் காட்டிப் பேசுவார். இலங்கை மக்களின் மொழிசார்ந்த உரிமைகள் குறித்து அவர் வெளியிட்டுள்ள துண்டு பிரசுரம் ஒன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

‘இலங்கையின் தலைநகரிலிருந்து அகன்றிருப்பதாலும், பல இனத்தாருடன் ஒரு சிறிது தொடர்பு குறைந்திருப்பதாலும், நம் மாகாணங்களில் பரந்து விரிந்த மனப்பான்மை குன்றியிருத்தல் கூடும். எனவே, சைவ, வைணவ, முஸ்லிம், கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து என்று பிரிந்து தொண்டாற்றும் மனப்பான்மையும், கொழும்புத்தமிழர், மலைநாட்டுத் தமிழர், மட்டக் களப்புத்தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் என்று வேற்றுமை பாராட்டுவதும் நம் இனத்திற்கு நன்மை பயக்காத முறைகள் ஆகும். நம் இனத்திற்கு ஒற்றுமையும் உறுதியும் இருப்பதற்காக, நம் எழுத்தறிஞர்களும் மேடைக் கலைஞர்களும் ஒத்துழைத்தல் வேண்டும்.’’

இவ்வாறே, தனிப்பட்ட நட்புறவுகளிலும் அவர் எந்தப் பாகுபாடும் பாராத பொதுமை உணர்வினராகவே வாழ்ந்தார். அவரது உடன் பல்கலைத் தோழராகத் திகழ்ந்தவரும் மிகப்பெரிய தமிழறிஞருமாகிய முனைவர் வி.அய். சுப்பிரமணியம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ‘‘அவர் கிறித்துவப் பாதிரி ஆயினும், என்னிடம் கிறித்துவமதத்தின் பெருமையையும் இந்து மதத்தின் குறைபாடுகளையும் என்றும் கூறியதில்லை. அதற்கு நேர்மாறாக, தேவார திருவாசகத்தின் பெருமையைக் கூறிப் பாராட்டியது இன்றும் நினைவிருக்கிறது.’’

அடிகளார் சிங்கள மொழியோடு தமிழுக்கும் சமத்துவம் கேட்டு தீவிரமாகப் போராடியவர்தான். எனினும் சிங்கள மக்கள் சிங்கள மொழியைக் காக்க வேண்டியதன் அவசியம் பற்றி அறிஞர் பொன். இராமநாதன் ஓர் நிகழ்வில் ஆற்றிய உரையினை அடிகளார் துண்டுப் பிரசுரமாக வெளியிட்டார்.

ஊ. பல தமிழ் அமைப்புகள் நிறுவிய தமிழ்த் தொண்டர்

தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழாய்வின் மேம்பாட்டுக்காகவும் உலகளாவிய பல தமிழமைப்புகளை உருவாக்கப் பாடுபட்ட பெரும் தமிழ்த் தொண்டர் அவர். தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகம் ஏற்படுத்தி, அதன்வழி பல சிறந்த நூல்களை வெளியிட்டவர். ஏற்கெனவே சுட்டியவாறு, சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது, அதன் விளைவாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்ற சீரிய அமைப்பை தமிழக அரசின் உதவியோடு உருவாக்கிடவழிவகுத்தவர். இவற்றுக்கெல்லாம் மேலாக, உயர்தரமான உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை முன்னெடுத்து நடத்தும் உலகப் பேரமைப்பாக, உலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாக, 1964ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாடு தொடங்கி, ஓயாதுழைத்து, பல்வேறு அறிஞர்கள் - அமைப்புகள் - அரசுகள் உதவியோடு, பாதை சமைத்த பெரும் சாதனையாளர் அவரே. இந்த மன்றத்தின் இலங்கைக் கிளை இன்றுவரைசிறப்புறச் செயல்பட இவரே காரணர் எனலாம்.

எ. ஈழத் தமிழ்ப் போராளி

அடிகளாரைப் பற்றி, பலரும் அதிகம் அறியாத செய்தி, அவர் ஈழத் தமிழர்களுக்காக இதய பூர்வமாகப் போராடிய ஒரு போராளி என்பதாகும். ஈழத்தமிழர் தலைவரான தந்தை செல்வநாயகத்துடன் சேர்ந்து தமிழும் சிங்களத்துக்கு இணையாக அரசு அலுவல் மொழியாக அங்கீகரிக்கப்பட, பல போராட்டங்களில் ஈடுபட்டார். 1956இல் தந்தை செல்வாவோடு சேர்ந்துதனிச் சிங்கள சட்ட மசோதாவுக்கு எதிரான சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார். வன்முறைக்கு நடுவிலும் தன் எதிர்ப்பைக் காட்டினார். 1961ஆம் ஆண்டில் தமிழ் ஆதரவுப் போராட்டத்துக்காக ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பல துண்டு பிரசுரங்களை வெளியிட்டார். கொழும்புவில் பல இடங்களிலும் கூட்டங்கள் நடத்தி அவற்றை விநியோகித்தார். போராட்டத்துக்காக நிதி திரட்டி உதவினார்.

III. வாழ்வின் நிறைவு

இவ்வாறு, இடையறாத் தமிழ்த் தொண்டாற்றி வந்த பெருமகனார், உடல் சற்றே நலிவுற்று, 1979 முதல் பண்டத்தரிப்பிலுள்ள தியான இல்லத்தில் தங்கி வாழ்ந்து வந்தார். 1980 ஜனவரி யாழ் நகர மன்றப் பொதுக் கூட்டத்தில், கடந்த யாழ்ப்பாண மாநாட்டில் கொல்லப்பட்ட இளைஞர்களுக்கு அஞ்சலி கூறிப் பேசினார். அதே ஆண்டு ஏப்ரலில் தந்தை செல்வா நினைவிடத்திறப்பில், அவரது நினைவு நூலை வெளியிட்டுப் பேசினார். அங்கேயே தொடர்ந்து 2 நாட்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தமிழ்ப்பண்பாடு பற்றியும் தமிழாய்வுகள் பற்றியும் உரை நிகழ்த்தினார். 1980 மே திங்கள் மேலணையில் நடைபெற்ற

திருக்குறள் மாநாட்டில் க.பொ. இரத்தினம் அவர்களின் 'தமிழ்மறை விருந்து நூல் வெளியிட்டு பேசினார். இதுவே அவர் பங்கேற்ற இறுதிப் பொது நிகழ்வாகும். 'உடல் சோர்ந்து விட்டது. ஆனால் தமிழ் உள்ளம் சோரவில்லை' என இக்கூட்டத்தில் குறிப்பிட்டார். பின்னர் 1980 செப்டம்பர் 1இல் மாரடைப்பால் காலமானார்.

IV அடிகளார் பற்றிய புகழுரை

இவ்வாறு பைந்தமிழ் ஆய்வுகளின் பார தூரமான வளர்ச்சிக்குப் பாரெங்கும் சுற்றி பன்முகப் பங்களிப்புகள் தந்த தனிநாயகம் அடிகளாரின் தனித்துவமான தொண்டுகளைப் போற்றிப் புகழாதார், தமிழுலகில் எவருமிலர். எனினும் ஒரே ஒரு சான்றாக, காரையூர் நா. பொன்னையா எனும் அறிஞர், அடிகளாரின் பன்முகக் கொடைகளைத் தொகுத்து போற்றிய சில வரிகளோடு இக்கட்டுரையை நிறைவு செய்வோம்.

"தனிநாயகம் அடிகளாரின் பெயரைக் கேட்கின்ற போதெல்லாம் எமக்கு நினைவில் வருவது தமிழ்க் கலாச்சாரம் என்னும் முத்திங்கள் ஏடும் 1968 ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடுமே என்பதில் ஐயமில்லை. தமிழ்க் கலாச்சாரம் என்னும் தேன் சுவையை அந்நிய மொழியாகிய ஆங்கில மொழி மூலம் தமிழர்களது கலை இலக்கியம் பண்பாடு என்பனவற்றை உலகிற்குப் பறை சாற்றி வந்துள்ளார் என்பதைத் தமிழர்களாகிய நாமறிவோம்.

'தமிழ்க் கலாச்சாரம்' என்னும் முத்திங்கள் ஏடு, தமிழர்களுடைய கலை இலக்கியம் பண்பாடு என்பனவற்றைப் பறைசாற்றி வந்துள்ளது. இந்த ஏடு ஆற்றி வந்த அரும் பெரும் பணி மகத்தானது. இவ்வேடு உலகை வலம் வரச் செய்த பெருமை, பிதா தனிநாயகம் அடிகளாரையே சாரும். கத்தோலிக்கத் துறவியாகத் தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் காலப்போக்கில் தமிழ்மீது தீராக்காதல் கொண்டு, அதனை முறைப்படி கற்றுத் தேர்ந்து, தமிழை வளர்க்கும் - பரப்பும் தூதராகவும் தமிழ்க் கலாச்சாரம் ஏட்டின் ஆசிரியராகவும் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

தமிழ்மொழி இந்துக்களுக்கு மட்டும் உரியதன்று. அது சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என அனைத்து மதத்தவர்களுக்கும் உரிய தனித்துவமான மொழி என்று உலகம் முழுவதும் இதன் சிறப்பை அடிகளார் எடுத்துரைத்தார்கள். இதனால் சமய சமரசம் நிலவியது. உலக ஒப்புரவு காணப்பட்டது. புத்தரின் அகிம்சையும் நபிகள் நாயகத்தின் சகோதரத்துவமும் சைவரின் அன்பும் வைஷ்ணவரின் சரணாகதிக் கோட்பாடும் தனிநாயகம் அடிகளாரிடம் மலிந்து காணப்பட்டன என்றால் மிகையொன்றும் இல்லை.

தமிழாராய்ச்சி ஆங்கிலேயர் காலத்திற்குப் பின் விருத்தி அடைந்ததென்பது தப்பான கருத்தென்பதும், 1500 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கள் அதற்குச் சான்று பகர்கின்றன என்பதும் அடிகளாரின் துணிந்த கருத்தாகும்."

மரபின் வேர்கள் - நூல் திறனாய்வு

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

நூல் பெயர்: மரபின் வேர்கள் (சொல்லாய்வுக் கவிதைகள்
ஆசிரியர்: பாவலர் கருமலைத்தமிழாழன்
வசந்தா பதிப்பகம்
தொடர்பு எண்: 94434 58550
பக்கங்கள்: 160
விலை: உரூபா: 200 - 00

சிலருக்கு எதைச் சொன்னாலும் மேடையில் சொல்ல வேண்டும் என்று தோன்றும்; வேறு சிலருக்குக் கட்டுரையாக எழுதத் தோன்றும்; இன்னும் சிலருக்குச் சொற்போரில் முழங்கத் தோன்றும். பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களுக்கு எதைச் சொன்னாலும் கவிதையில் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது போலும். அவர் நீரோட்டம் போன்ற இயல்புக் கவிஞர் அல்லவா? அதனால் அவர் நினைப்பதும் கவிதை; நினைத்ததை எழுதுவதும் கவிதை. அதன் விளைவாகத்தான் சொற்கள் தொடர்பான தன்னுடைய ஆய்வுகளைக் கவிதை நடையிலேயே எடுத்துச் சொல்லி, அவற்றை, ''மரபின் வேர்கள்'' என்னும் பெயரில் புத்தகமாகவும் வெளியிட்டுள்ளார்.

தமிழகப் புலவர் குழுவின் தலைவராக இருக்கும் பெரும்புலவர் ப. அரங்கசாமி அவர்கள், தமது 'அணிகலன்' என்னும் உரையில் குறிப்பிட்டது போலக் கவிதைகளின் இடையிடையே தமிழுணர்வு, அறிவுரை, வரலாறு முதலியன தலைகாட்டச் செய்திருக்கிறார். அவற்றை விரிக்கின் நூல் பெருகும். அவை தனிக் கட்டுரையாக எழுத வேண்டியவை.

பாவலர்
கருமலைத்தமிழாழன்

சொற்கள் சிலவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டும், எப்படிப் பயன்படுத்தக் கூடாது என்பதை இந்நூல் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறது. எனவே தமிழ்ப் படித்தவர்களுக்கு மிகவும் பயனுள்ள நூலாக இந்நூல் விளங்கும் என்பது உறுதி.

இப்புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் சில பல சொற்களைத் தவறாகப் பயன்படுத்தி. வருவதை உணர்வார்கள்.

அந்த வகையில் இப்புத்தகம் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக உள்ளது என்பதை அறிந்து பெருமையும் மகிழ்ச்சியும் நாம் அடையலாம்.

இது ஓர் அருமையான நூல். நம்மில் நன்கு கற்ற பலரும் சொற்களைப் பற்றிச் சிந்திக்காமல் இளமையிருந்து வரும் பழக்கத்தினால் பல சொற்களைத் தவறாகப் பேசியும் எழுதியும் வருகிறோம் என்று நினைக்கும்போது நமக்கு வெட்கமாக இருக்கிறது. இந்த நூலில் உள்ள சொற்களின் திருத்தங்களைப் பார்ப்பவர்களுக்கு இச் சொற்கள் சரி என்று தோன்றி, அவர்களும் இச் சொற்களைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன். எனவே இந்த நூலை தமிழ் மொழியைப் படிக்கத் தெரிந்த ஒவ்வொரு தமிழரும் படிக்க வேண்டும். ஆம், ஒவ்வொரு தமிழரும் கட்டாயம் படிக்க வேண்டும்.

பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களின் கவிதைகள் யாவும் படிப்பதற்கு இனிமையாகவும் எளிமையாகவும் தெளிவாகவும் புரிவதாகவும் இருக்கும். இந்த "மரபின் வேர்கள்" என்னும் இந்நூற் கவிதைகள் சொல்லாய்வுக் கவிதைகள் அல்லவா? அதனால் இவற்றில் சிலவற்றைப் புரிந்து கொள்ள இயலவில்லை. சான்றாக, "தன்னலம் - தந்நலம்" என்னும் கவிதையில் இந்தச் சொற்களின் பொருள் இன்னும் தெளிவாக விளங்குமாறு எழுதியிருக்கலாம்.

சாதாரணமாக, திறனாய்வு என்பது மிகவும் சுருக்கமாக இருக்கும். ஆனால் நான் இந்த நூலின் திறனாய்வை மிகவும் விரிவாக எழுதியுள்ளேன். இதற்குக் காரணம், இக் கட்டுரையைப் படிப்போருக்கு மூல நூலைப் படித்தது போன்ற பயனை நல்க வேண்டும்

என்பதுதான். ஏனெனில், திறனாய்வைப் படித்தவர்களில் பெரும்பாலோர் மூல நூலைத் தேடிப்பிடித்து வாங்கிப் படிப்பதில்லை.

இந்நூலில் நூற்று இருபத்து ஏழு சொற்களைப் பற்றிப் பாவலர் ஆய்வு செய்கிறார். அவற்றை இனி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

1) மனதை - மனத்தை என்னும் சொற்கள்:

நாம் தெரிந்தோ தெரியாமலோ பழக்கத்தினாலோ பல சொற்களைத் தவறாகப் பயன்படுத்தி வருகிறோம். அதில் ஒன்று, 'மனத்தை' என்னும் சொல். இந்த நூலின் முதல் கவிதையிலேயே நெற்றிப் பொட்டில் அடித்தாற் போன்று இந்தச் சொற்கள் இடம் பிடித்து விட்டன.

பணம் + ஐ = என்பது புணர்ச்சி விதிகளின்படி பணதை என்று ஆகாது.
குணம் + ஐ = என்பது குணதை என்று ஆகாது.
பழம் + ஐ = என்பது பழதை என்று ஆகாது.
மரம் + ஐ = என்பது மரதை என்று ஆகாது.

மாறாக, தகர ஒற்று மிகுந்து அத்து சாரியைச் சேர்ந்து 'பணத்தை' என்றும் 'குணத்தை' என்றும் 'பழத்தை' என்றும் 'மரத்தை' என்றும் புணர்ந்து வரும்.

ஆனால் மனம் + ஐ என்பதை மட்டும் 'மனதை' என்று எழுதுகிறோமே இது சரியா? என்று கேட்கிறார் பாவலர். இது தவறு; 'மனத்தை' என்பதுதான் சரி. அதுபோல மனம் என்னும் சொல்லுடன் 'ஆக' என்னும் சாரியை சேர்ந்தால் 'மனமாக' என்றுதானே சொல்ல வேண்டும்? ஆனால் நாம் 'மனதாக' என்று ஏன் சொல்லுகிறோம்? பாவலர் கேட்கிறார். அவர் கேட்பது நியாயந்தானே?

எனவே இனி 'மனதை' என்று எழுதாமல் 'மனத்தை' என்று எழுதுவோம்; ஒரு 'மனதாக' என்று எழுதாமல் ஒரு 'மனமாக' என்று எழுதுவோம்.

2) மனமார - மனமாற என்னும் சொற்கள்:

தமிழர் திருநாள் என்னும் தைப் பொங்கல், விளக்குத் திருநாள் என்னும் தீபாவளித் திருநாள், புத்தாண்டுப் பிறப்பு போன்றவற்றுக்கு நாம் பிறருக்குப் புலன்கள், மின்வரி, படவரி, முகநூல் போன்றவற்றின் மூலமாக வாழ்த்துகளை அனுப்புகிறோம்; நேரிலும் அலைபேசி மூலமும் தெரிவிக்கிறோம். வாழ்த்து அட்டைகள் மூலமாகவும் ஒரு சிலர் தெரிவிக்கின்றனர். எழுத்தின் மூலம் தெரிவிக்கும் போது, 'மனமார' வாழ்த்துகிறேன் என்றும் 'மனமாற' வாழ்த்துகிறேன் என்றும் வாழ்த்துகிறோம். 'மனமார', 'மனமாற' என்னும் இந்த இரண்டு சொற்களில் எது சரியான சொல் என்று பலர் சிந்திப்பதில்லை.

'மனமார' என்று சொன்னால் மனம் நிறைய என்று பொருள். ஆனால் 'மனமாற' என்று வல்லின றகரதைப் பயன்படுத்தினால் ''மனம் மாற'' என்று பொருளாகிறது. அதாவது, ''மனம் மாறிவிட'' என்று பொருளாகிறது. ஆகவே பிறரை நாம் வாழ்த்தும்போது 'மனமார' என்று இடையின ரகரம் எழுதி வாழ்த்துவோம் என்று பாவலர் கூறுகிறார்.

3) மங்கலம் - மங்களம் என்னும் சொற்கள்:

யாரேனும் தமிழில் திருமண அழைப்பிதழ் கொடுத்தால் அதனைப் படித்துப் பாருங்கள். அது, "நிகழும் மங்களகரமான" என்றுதான் 99 விழுக்காடு தொடங்குவதாக இருக்கும். "நிகழும் மங்கலகரமான" என்று தொடங்காது. திருமண அழைப்பிதழைப் பொருத்தவரை, " மங்களகரமான" என்னும் சொல்தான் மக்கள் மனங்களில் ஊன்றிப்போய் விட்டது. ஆனால் இந்த இரண்டு சொற்களுக்கும் வேறுபாடு உண்டு. மங்கலம் என்பது பல பொருள் ஒரு சொல் ஆகும். மங்கலம் என்ற சொல்லுக்கு மன்றல், மகிழ்ச்சி, நலம், நன்மை, சிறப்பு, தாலி, சுபம், பொலிவு, திருமணம், பிறர் வாழ்த்துகின்ற வாழ்த்து என்றெல்லாம் பொருள். ஆனால் மங்களம் என்ற சொல்லுக்கு எந்தப் பொருளும் இல்லை. ஆகவே இனி நாம் அனைவரும் பொருளற்ற "மங்களம்" என்னும் சொல்லை விடுத்து, "மங்கலம்" என்னும் சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்று பாவலர் வேண்டுகோள் வைக்கிறார். நாமும் அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொள்வோம்.

[4) தன்னலம் - தந்நலம் என்னும் சொற்கள்:

தந்நலம் என்றால் என்ன? தன்னலம் என்றால் என்ன? இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன? உங்களுக்குப் புரிகிறதா?

தந்நலம் என்றால் தனது நலம்; தன்னைச் சார்ந்தோரின் நலம் என்று பொருள். தன்னலம் என்றால் சுயநலம் என்று பொருள்.

"பொதுநலத்தை மறந்து இங்கு தந்ந லத்தால்
பொழுதெல்லாம் திளைக்கின்ற மனித ராலே"
"மது இன்பம் உடல் நலத்தை கெடுத்தல் போல
மனமின்பம் காணுகின்ற தன்ன லத்தால்"

என்று தந்நலத்தையும் தன்னலத்தையும் பாவலர் பித்துக் காட்டுகிறார். இவற்றின பொருளை உணர்ந்து பயன்படுத்துவது அறிவுடைமையாகும்.

5) கைம்மாறு - கைமாறு என்னும் சொற்கள்:

"கைம்மாறு - கைமாறு" என்னும் தலைப்பிலான இக்கவிதை எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் பெய்யும் மழையைப் போன்று உதவி செய்யக்கூடிய மனநிலையையும் மிகுந்த எதிர்பார்ப்போடு செய்யக்கூடிய உதவி மனப்பான்மையையும் வேறுபடுத்திக் காட்டுகிறது.

"கைம்மாறு" என்னும் சொல் எவ்வித எதிர்பார்ப்பும் கருதாமல் செய்யக்கூடிய உதவி மனப்பான்மையைக் குறிக்கிறது. ஆனால், 'கைமாறு' என்னும் சொல், "நீ இதைக் கொடுத்தால் நான் அதைக் கொடுப்பேன்" என்று ஒவ்வொருவரும் தன்னுடைய முன்னேற்றத்துக்கான எண்ணத்தை மனதிற் கொண்டு செய்யும் செயலாகும்.

பாவலர் இந்த இரண்டு கருத்துகளையும் இக்கவிதையில் வேறுபடுத்திக் காட்டுகிறார். மக்கள் எதையும் கைமாறு செய்யாமல், கைம்மாறு கருதாமல் ஒருவருக்கொருவர் உதவிகளைச் செய்து கொள்ள வேண்டும் என்னும் கருத்தை முன்வைக்கிறார் என்று

கருதலாம். மகர ஒற்று மிகுவதற்கும் மிகாமல் இருப்பதற்கும் உள்ள நுண்ணிய வேறுபாட்டை எடுத்துச் சொல்லும் பாவலரின் நுழைமாண் நுண் புலம் போற்றர்க்குரியது.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு"

என்னும் வள்ளுவரின் குறள் நோக்கற்குரியது.

6) நாள்கள் - நாட்கள் என்னும் சொற்கள்:

"நாள்கள் - நாட்கள்" என்னும் சொற்களை முனைவர் பட்டம் பெற்றவர்கூடச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் எழுதவும் பேசவும் செய்கின்றனர். நாள் என்னும் சொல்லுக்குப் பன்மைச் சொல்தான் நாள்கள் என்னும் சொல்லாகும். ஆனால் நாட்கள் என்று ஏறக்குறைய அனைவருமே எழுதுகின்றனர். நாட்கள் என்னும் சொல் பன்மைச் சொல் அன்று.

"பல நாட்கள்" என்றால் "பல நாள்கள் ஆன பழைய கள்" என்று பொருள். புதிய கள் பதநீர் எனப்படும்; அது உடலுக்கு நன்மையைத் தரும். அதனைக் குடித்தால் போதை ஏற்படாது; பலநாட் கள்ளைப் பருகினால் போதை ஏற்படும். இதுதான் நாள்கள் என்னும் சொல்லுக்கும் நாட்கள் என்னும் சொல்லுக்கும் உள்ள வேறுபாடு. இந்த வேறுபாட்டைப் பாவலர், "நாள்கள் - நாட்கள்" என்னும் தலைப்பிலான கவிதையில் அழகாக. எடுத்துச் சொல்லுகிறார்.

பித்தேற்றும் நாட்கள்; ஆயின் சிலர் பசியால் பல நாள்கள் வாடுவர் என்று கவிஞர் விளக்குகிறார். அதாவது, பலநாட் கள்ளானது போதையைத் தரும்; ஆனால் பல நாள்கள் சிலர் பசியால் வாடுவார்கள் என்று பல நாட்கள் என்னும் சொல்லையும் பல நாள்கள் என்னும் சொல்லையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். இதனைப் புரிந்துகொண்டு நாம் சரியான சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

7) ஏழ்மை - ஏழைமை என்னும் சொற்கள்:

ஏழை - பணக்காரன் என்றால் நன்றாகப் புரிகிறது; வறுமை - வளமை என்றாலும் புரிகிறது. ஆனால் ஏழைமை என்றால் புரிந்து கொள்ளத் தயங்குகிறோம். வளமைக்கு எதிர்ச் சொல் ஏழ்மை என்று தவறாகப் புரிந்து வைத்திருக்கிறோம். இதனைக் கவிஞர், "ஏழ்மை - ஏழைமை" என்னும் தலைப்பில் உள்ள கவிதை மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

ஒருமை, இருமை, மும்மை, நான்மை, ஐம்மை, அறுமை, எழுமை அல்லது ஏழ்மை, எண்மை, தொண்மை, பதின்மை என்பவை எண்களைக் குறிக்கும் சொற்களாகும். இங்கே எழுமை என்றாலும் ஏழ்மை என்றாலும் ஏழு என்னும் எண்ணைக் குறிக்கும். ஆனால் ஏழ்மை என்ற சொல்லுக்கு நாம் வறுமை என்று தவறாகப் புரிந்து கொள்கிறோம். இது இலக்கணத்தில் வழூச் சொல் எனப்படும். மக்கள் தங்கள் பேச்சு வழக்கில் பல சொற்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். அவற்றில் இதுவும் ஒன்று.

"இல்லாமை உணர்த்தும் சொல் ஏழ்மை அன்று;
இருக்கின்ற ஏழைமைதான் வறுமை சொல்லும்"

என்று ஏழ்மை என்னும் சொல் வறுமையைக் குறிக்காது; மாறாக, ஏழைமை என்னும் சொல்தான் வறுமையைக் குறிக்கும் என்று பாவலர் சொல்லுகிறார். ஆனால் நாம் ஏழைமை என்னும் சொல்லைப் பயன்படுத்துவதில்லை. இனி பயன்படுத்த வேண்டும். நாம் சொல்லுகின்ற சொல்லின் பொருளை உணர்ந்து சொன்னால்தான் அந்தச் சொல்லுக்கு உயிர் இருக்கும் என்றும் பாவலர் சொல்லுகிறார். இதனை,

"சொல்கின்ற சொல்குறிக்கும் பொருளு ணர்ந்து
சொன்னால்தான் சொற்களுக்கும் உயிரி ருக்கும்"

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. ஒரு நிறத்தைச் சொல்வதற்கு ஏதேனும் ஒரு பொருளைச் சொல்லி, அது போன்ற நிறம் என்று சொல்லுவது வழக்கம். சான்றாக, மாம்பழச் சேலை என்றும் கிளிப் பச்சை என்றும் பால்போல் வெள்ளை என்றும் காக்காக் கருப்பு என்றும் சொல்கிறோம். அதுபோல வறுமையைக் குறிப்பதற்கு ஏழ்மை என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம் என்று பாவலர் ஏளனம் செய்கிறார்.

8) மானிலம் - மாநிலம் என்னும் சொற்கள்:

மானிலம் - மாநிலம் இரண்டுக்கும் என்ன வேறுபாடு? முன்னது, மான் + நிலம். அதாவது, மான்கள் வாழக்கூடிய இடம். அதாவது, மான்கள் வாழக்கூடிய காடு என்று பொருள்.

மாநிலம் என்றால் பெரிய நிலம். அதாவது, காடு, மேடு, பள்ளம், மலை, புறம்போக்கு நிலம் போன்ற அனைத்தும் சேர்ந்த இடம் எனப்படும். அதாவது, மொழிவாரிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட மக்களின் நிலப்பரப்பு எனப்படும். அதாவது, தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகம், கேரளம் போன்ற பகுதிகளைத் தனித்தனியே குறிக்கும். தவிர, ஐஉலகம் என்னும் பொருளையும் சுட்டும். இதனை அழகாக,

"மாநிலத்தை மானிலமாய் மாற்றிச் சொன்னால்
மான்வாழும் நிலமாகக் காட்டைச் சுட்டும்.
மாநிலந்தான் பெரும்பூமி உலக மென்னும்
மனிதர்கள் வாழுகின்ற மண்ணைச் சுட்டும் "

என்று கவிதை பாடுகிறார். இதுதான் வேறுபாடு. இந்த வேறுபாட்டை மனதிற் கொண்டு சரியான சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று பாவலர் பரிந்துரைக்கிறார்.

9) முந்தாணை - முன்தானை என்னும் சொற்கள்:

முந்தாணையா, முந்தானையா அல்லது முன்தானையா? எது சரியான சொல்? முந்தானை என்றுதான் எல்லோரும் எழுதுகிறார்கள். "முந்தானை முடிச்சு" என்னும் பெயரில் ஒரு திரைப்படம்கூட வந்துள்ளது. ஆனால் பாவலர் கருமலைத்தமிழாழன், முன்தானை என்னும் சொல்தான் சரியான சொல் என்று கூறுகிறார். தானை என்றால் துணி, ஆடை, சேலை என்று பொருள். முன் தானை என்றால் முன்னே இருக்கக்கூடிய துணியின் - சேலையின் ஒரு பகுதி என்று பொருள். ஆகவே முன்தானை என்பதுதான் சரியான சொல்லாகும். நமது பாவலரும்,

"முனைப்பகுதி குறிப்பதற்கு ஏற்ற சொல்லோ
முன்தானை என்பதுவாம் அதையே சொல்வோம்"

என்றே பாடுகிறார். முந்தாணை என்பது பொருளற்ற சொல்லாகும். ஆனால் நமது பழக்கத்தில் முந்தானை என்னும் சொல்லே பரவலாக உள்ளது. எனவே பொருளுணர்ந்து முன்தானை என்ற சொல்லையே இனி நாம் பயன்படுத்த வேண்டும் என்று பாவலர் கூறுகிறார்.

10) நன்செய் - புன்செய் என்னும் சொற்கள்:

பல சொற்களைத் தவறாக நாம் எழுதியும் பேசியும் வருவதுபோல இந்த நஞ்சை, புஞ்சை என்னும் சொற்களையும் நாம் தவறாகவே எழுதி வருகிறோம். நஞ்சை, புஞ்சை அல்ல; நன்செய், புன்செய் ஆகும்.

கால்வாய்ப் பாய்ச்சல், ஏரிப் பாய்ச்சல், ஆற்றுப் பாய்ச்சல் மூலம் நீர் பாய்ந்து, நெற்பயிர்கள் இருபோகம் அல்லது முப்போகம் விளைவது நன்செய் நிலங்கள் எனப்படும். அவை பாயாத நிலங்களும் நெல் விளையாத நிலங்களும் புன்செய் நிலங்கள் எனப்படும். இவை மானாவாரி நிலங்கள் என்றும் அவற்றில் விளையும் பயிர்களை மானாவாரிப் பயிர்கள் என்றும் அழைப்பர். இந்த நிலங்கள் வானம் பார்த்த பூமி என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தகைய நிலங்களில், சோளம், வேர்க்கடலை, துவரை உளுந்து போன்ற தானியப் பயிர்கள் விளையும். கிணற்றுப் பாய்ச்சல் இருந்தால் கரும்பும் நெல்லும் விளையும். எனினும் அவையும் புன்செய் நிலங்களே ஆகும்.

ஆகவே நஞ்சை, புஞ்சை என்று தவறாக எழுதாமல் நன்செய் நிலங்கள் என்றும் புன்செய் நிலங்கள் என்றும் நல்ல தமிழில் எழுதிப் பழகுவோம் என்று பாவலர் சொல்லுகிறார்.

11) ஆளுனர் - ஆளுநர் என்னும் சொற்கள்:

ஆளுனர் - ஆளுநர் இவற்றில் எது சரியான சொல்? எது தவறான சொல்? ஆளுனர் என்பது தவறு; ஆளுநர் என்பது சரி. ஏன்? பாவலர் சொல்வதைப் பார்ப்போம்.

"பேருந்து நடத்துவோரை ஓட்டு வோரை
பெரும்துறையை இயக்குவோரை அழைக்கும் போது
பேருந்தும் அர்விகுதி சேர்க்க வேண்டும்.
பெயரில்லா வினைச்சொற்கள் இவற்றின் பின்னே
சேருந்தும் றன்னகரம் சேர்த்தல் குற்றம்
செம்மையுறத் தந்நகரம் வருதல் வேண்டும்."

பேருந்து நடத்துவோர், நடத்துநர் என்றும் பேருந்து ஓட்டுவோர் ஓட்டுநர் என்றும் பற்பலத் துறைகளை இயக்குபவர்கள், இயக்குநர் என்றும் 'அர்' விகுதி சேர்த்து எழுத வேண்டும் என்கிறார்.

நடத்து, ஓட்டு, இயக்கு, ஆளு போன்ற சொற்கள் வினைச் சொற்கள் ஆகும். வினச்சொற்களுக்குப் பின் 'றன்னகரம்' வரக்கூடாது என்னும் இலக்கணத்தைப் பாவலர் சுட்டிக் காட்டுகிறார். சிலருக்கு றன்னகரம், தந்நகரம் என்றால் குழப்பம் ஏற்படும். அது

வேறு ஒன்றும் அல்ல; தமிழ் எழுத்துகளில் 'த' என்னும் எழுத்துக்கு அடுத்து 'ந' என்னும் எழுத்து வருகிறது. எனவே அது 'தந்நகரம்' எனப்படும். அதேபோல 'ற' என்னும் எழுத்துக்கு அடுத்து 'ன' வருகிறது. எனவே அது, 'றன்னகரம்' எனப்படுகிறது. எனவே இந்த வேறுபாட்டை உணர்ந்து சொற்களைப் பயன்படுத்தி தமிழ் மொழியை வளப்படுத்துவோம்.

12) அடிகோல் - அடிக்கோல் என்னும் சொற்கள்:

'அடிகோல்' என்று வல்லின ஒற்று இல்லாமல் எழுதினால் இது வினைத்தொகை. அடித்த கோல், அடிக்கின்ற கோல், அடிக்கும் கோல் என்று இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் ஆகிய மூன்று காலங்களையும் காட்டும் சொல்.

அடிக்கோல் என்று ஒற்று மிகுந்தால் அது அடிக்கின்ற கோல். அதாவது அடிக்க உதவும் கோல் ஆகும். தவிர, கடைக்கால் போடுதல், அஸ்திவாரம் போடுதல் என்று பொருள்.

இந்த வேறுபாட்டைப் புரிந்து கொண்டால் குழப்பம் ஏற்படாது. இக் கவிதையைத் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்

13) பழிதாங்காப் பத்தினி என்னும் சொல்:

''பழிதாங்காப் பத்தினி'' என்னும் சொல் பிழையாக உள்ளது. 'னி' என்னும் எழுத்துக்கு மாறாக 'ரி' என்னும் எழுத்து வந்துள்ளது. இது எழுத்துப் பிழை.

கண்ணகியை அடிப்படையாக வைத்துப் பாவலர் இக்கவிதையை எழுதியுள்ளார் போலும். ''படி தாண்டாப் பத்தினியா?'' என்று சிற்றூர்களில் கேட்பார்கள். ஆனால் கண்ணகி, படிதாண்டாப் பத்தினி ஆவாள்; தவிர, அவள் பழிதாங்காப் பத்தினியும் ஆவாள் என்று பாவலர் சொல்லுகிறார். அதாவது, தன் கணவன் கோவலன் மீது ஏற்பட்ட, 'கள்வன்' என்னும் பழியைத் தாங்க முடியாத பத்தினி என்பது பொருள்.

பெண்கள் தமக்கு ஏற்பட்ட பழிச் சொல்லைத் தாங்கிக் கொண்டு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்காமல் கண்ணகியைப் போல வீறு கொண்டு எழுந்து வந்து அப்பழியைத் துடைத்துக் கொள்ள வேண்டும் என்று பாவலர் கூறுகிறார்.

அதனால், அவளைப் பழி தாங்காப் பத்தினி என அழைக்க வேண்டும் என்கிறார்.

14) பட்டினம் - பட்டணம் என்னும் சொற்கள்:

அன்றுமுதல் இன்றுவரை பட்டினம் என்ற பெயரால் புகழ் பெற்ற நகரங்களாக இருப்பவை சென்னைப் பட்டினம், நாகப் பட்டினம், விசாகப் பட்டினம் ஆகியவையே. சிலப்பதிகாரக் காலத்தில் காவேரிப்பூம் பட்டினம் புகழ்பெற்ற வணிக நகரமாக விளங்கியது என்று அறிகிறோம்.

கப்பல்கள் வந்து செல்லும் கடற்கரையை ஒட்டியுள்ள நகரத்தைப் பட்டினம் என்று அழைப்பார்கள். பொதுவாகப் பட்டினம் என்றாலே அது சென்னைப் பட்டினத்தைத்தான் குறிக்கும். ஆனால் நாளடைவில் சென்னைப் பட்டினம் என்பது சென்னைப் பட்டணம்

என்று மருவிற்று. இக்காலத்தில் பட்டணம் என்றாலும் சென்னைப் பட்டணம் என்றாலும் சென்னப்ப நாய்க்கன் பட்டணம் என்றாலும் மதராசுப் பட்டணம் என்றாலும் அது சென்னையைத்தான் குறிக்கும். பட்டினப் பாக்கம் என்று ஒரு தனிப் பகுதியும் உள்ளதை அறிவோம். இவ்வாறு பட்டினம் என்ற சொல்லும் பட்டணம் என்ற சொல்லும் மக்களின் புழக்கத்தில் உள்ளன.

பெரிய நகரங்களை பட்டணம் என்றும் கடற்கரை நகரத்தைப் பட்டினம் என்றும் அழைக்க வேண்டும் என்று பாவலர் சொல்லுவதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

15) ஆறு - ஆர் என்னும் சொற்கள்:

ஆறு என்னும் சொல் இன்று ஆர் என்று திரிந்து வழங்குவதைப் பாவலர் சுட்டிக் காட்டுகிறார்.

சான்றாக, திருவையாறு (திரு ஐ ஆறு) என்பது இன்று திருவையார் எனப்படுகிறது; திரு ஐ ஆறு என்றால் திருவினை உடைய ஐந்து ஆறுகள் என்னும் பொருள் தருகிறது. திரு வையார் என்றால் திருவினை வைக்காதார் என்னும் பொருள் தருகிறது.

அடையாறு என்பது இன்று அடையார் என்று அழைக்கப்படுகிறது. அடை ஆறு என்பது வினைச்சொல்லாகி, அடைந்த ஆறு, அடைகின்ற ஆறு, அடையும் ஆறு என்று முக்காலத்தையும் குறித்து நின்றது. ஆனால் அடையார் என்பது அடையமாட்டார்கள் என்ற எதிர்மறைச் சொல்லாகி நிற்கிறது.

செய்யாறு என்பதும் செய்த ஆறு, செய்கின்ற ஆறு, செய்யும் ஆறு என்னும் மூன்று காலங்களையும் குறித்தது. ஆனால் இன்று செய்யாறு என்னும் சொல் செய்யார் என்று திரிந்து செய்யமாட்டார்கள், செய்யாதவர்கள் என்னும் எதிர்மறைச் சொல்லாகி நிற்கிறது.

ஆகவே ஆறு என்று ஆற்றைக் குறிக்கும் அழகான பொருள் தரும் சொற்களை, எதிர்மறைப் பொருள் தரும் ஆர் என்னும் சொல்லாகத் திரித்துக் கூறாமல் ஆறு என்றே அழைக்க வேண்டும் என்று எடுத்துக் கூறும் பாவலரை எவ்வளவும் பாராட்டலாம். இனி வரும் காலங்களில் ஆறு என்பதை ஆர் என்று அழைக்காமல் ஆறு என்றே அழைக்கத் திருவையாறு, அடையாறு, செய்யாறு என்றே அழைப்பது சாலச்சிறந்த தமிழ்ப் பணியாகும்.

16) ஆர்க்காடு - ஆற்காடு என்னும் சொற்கள்:

ஆத்தி என்னும் ஒருவகை மரங்கள் நிறைந்த காடாக இருந்ததால் ஓர் ஊருக்கு ஆத்திக்காடு என்னும் பெயர் ஏற்பட்டது. ஆர் என்பது ஆத்தி மரத்தைக் குறிக்கும். அதனால் ஆத்திக் காடு என்பது ஆர்க்காடு எனப்பட்டது. அந்தப் பெயர் இந்நாளில் ஆற்காடு என்று மறுவிவிட்டது. ஆர்க்காடு என்னும் பெயர் ஆற்காடு என்று சொல்லப்பட்டால் அது ஆலமரங்கள் நிறைந்த காடு என்னும் பொருளில் ஆகிவிடும். ஆலமரங்கள் ஒரே இடத்தில் ஒரு காடுபோல இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. புணர்ச்சி விதிப்படி ஆல் + காடு = ஆற்காடு என்று திரியும்.

எனவே ஆற்காடு என்று அழைக்காமல் ஆர்க்காடு என்றே அழைப்போமாக என்று பாவலர் வேண்டுகோள் வைக்கிறார். ஒரு சொல் நமக்குப் பழக்கமாகிவிட்ட பிறகு

அதனை மாற்றிப் பயன்படுத்துவதற்கு நமது மனம் இடம் கொடுப்பதில்லை. எனினும் உண்மை உண்மைதானே. அந்த உண்மையை ஏற்றுக் கொள்வதுதான் அறிவுடைமை.

17) தவறாமல் - தவிராமல் என்னும் சொற்கள்:

தவறாமல் மற்றும் தவிராமல் என்னும் இரண்டு சொற்களுக்கும் உள்ள வேறுபாட்டைப் பாவலர் தம் பாடலில் எடுத்துரைக்கிறார். நமது நிகழ்ச்சிகளுக்குப் பிறரை நாம் அழைக்கும் போது, ''தவறாமல் வந்து கலந்து கொள்ள வேண்டும்'' என்று அழைப்பிதழ்களில் வேண்டுகிறோம். இச் சொல் சரியான சொல் அல்ல என்பது பாவலரின் வாதம். மாறாக, ''தவிராமல் கலந்து கொள்ள வேண்டும் என்பதே சரியாகும் '' என்கிறார்.

'தவறாமல்' என்னும் சொல், ''எவ்விதத் தவறும் செய்யாமல் என்னும் பொருளைக் குறிக்கிறது. ஆயின், 'தவிராமல்' என்னும் சொல், 'தவிர்த்திடாமல்' என்னும் பொருளைத் தருகிறது. மேலும், மறந்திடாமல், தாழ்ந்திடாமல், புறக்கணிக்காமல் என்னும் பொருள்களையும் இச் சொல் தருவதாகப் பாவலர் கூறுகிறார். தவிர் என்னும் சொல்லுக்கு விலகு, நீங்கு, இல்லாதுபோ என்றும் பொருளாகும். எனவே,

''..... விழாவிற் கேநாம்
தவறாமல் எனும்சொல்லில் அழைத்தி டாமல்
தவிராமல் வரவேண்டும் என்ற ழைப்போம் ''

என்று பாவலர் கூறுகிறார். நாமும் அவரைத் தவிராமல் பின்பற்றுவோம்!

18) போராட்டம் - போர் என்னும் சொற்கள்:

போராட்டம் என்பதற்கும் போர் என்பதற்கும் வேறுபாடு உள்ளது என்பதை நாம் அறிவோம். அது என்ன வேறுபாடு என்பதைத்,

''தும்பைப்போல் நேருக்கு நேர்செய் போராம்
துயர்களையக் கோரிக்கை வென்றெ டுக்க
நம்குறையை அறிவுறுத்தப் பலபேர் கூடி
நடத்துவது போராட்டம் என்ப தாகும் ''

என்று பாவலர் வாயிலாக அறிகிறோம். ஆம். நேருக்கு நேர் நின்று செய்வது போர். ஆனால் நாம் நமது கோரிக்கைகளுக்காகப் போராடுவது போராட்டம் ஆகும்.

தும்பை என்பது ஒருவகைச் செடி. அதில் வெண்மையாக மிகச் சிறிய அளவில் பூக்கள் பூக்கும். பார்க்க அழகாக இருக்கும். புன்செய் நிலங்களில் அவை ஏராளமாக முளைக்கும். அதன் பூக்களை விநாயகருக்குச் சாற்றுவார்கள். அந்தச் செடிகளைப் பிடுங்கி சேற்று வயல்களில் தழைச்சத்து உரமாகவும் பயன்படுத்துவார்கள். இந்தத் தும்பைப் பூ மாலையை அணிந்து கொண்டு அக்கால அரசர்கள் கடுமையாகப் போரிடுவார்கள் என்று புறப்பொருள் வெண்பாமாலை சொல்லுகிறது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

ரோசாப்பூ துரை

மதுரை மக்களின் அன்பிற்குரிய "ரோசாப்பூ துரை" என்று அழைக்கப்பட்ட பாரிஸ்டர் #ஜார்ஜ்_ஜோசப் *(Barrister George Joseph)*

ஒரு சிறந்த வழக்கறிஞர், துணிச்சலான சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார்.

கேரளாவில் பிறந்திருந்தாலும், மதுரையைத் தன் கர்மபூமியாகக் கொண்டு, அங்குள்ள மக்களுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர்.

அவரைப் பற்றிய விரிவான தகவல்கள் மற்றும் ஆதாரங்கள் இங்கே:

1. ரோசாப்பூ துரை - பெயர்க்காரணம்

ஜார்ஜ் ஜோசப் வழக்கறிஞராக நீதிமன்றத்திற்குச் செல்லும்போது, எப்போதும் தனது கோட்டில் ஒரு ரோஜாப் பூவை வைத்திருப்பார். இதனால் மதுரை மக்கள் அவரை அன்போடு "ரோசாப்பூ துரை" என்று அழைத்தனர். இன்றும் மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு இவர் பெயரை வைக்கும் வழக்கம் உள்ளது.

2. சமூகப் பணிகள் மற்றும் தியாகங்கள்

குற்றப் பரம்பரை சட்டத்திற்கு எதிரான போராட்டம் *(Criminal Tribes Act - CTA)*:

* ஆங்கிலேய அரசு 1920-களில் "குற்றப் பரம்பரைச் சட்டம்" என்ற கொடிய சட்டத்தின் மூலம் பிரமலை கள்ளர், மறவர் போன்ற குறிப்பிட்ட சமூகத்தினரை பிறப்பிலேயே குற்றவாளிகள் என்று முத்திரை குத்தியது

ஜார்ஜ் ஜோசப் இச்சட்டத்தை எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார். 1920-ல் பெருங்காமநல்லூரில் இச்சட்டத்தை எதிர்த்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோது, பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடினார்

ஆதாரம்: பாதிக்கப்பட்ட கள்ளர் சமூக மக்களுக்காக இவர் ஆற்றிய பணியை நினைவுகூரும் வகையில், இன்றும் பெருங்காமநல்லூர் தியாகிகள் தினத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

தொழிற்சங்கப் பணிகள்:

தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர். 1918-ல் "மதுரை தொழிலாளர் சங்கம்" (Madura Labour Union) என்ற அமைப்பைத் தொடங்கி, ஆலைத் தொழிலாளர்களின் நலனுக்காகப் போராடினார்.

3. சுதந்திரப் போராட்டத்தில் பங்கு

வைக்கம் சத்யாக்கிரகம் (Vaikom Satyagraha - 1924):

கேரளாவில் வைக்கம் மகாதேவர் கோயில் தெருக்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் நடக்க இருந்த தடையை நீக்க நடந்த போராட்டத்தில் இவர் முக்கிய பங்காற்றினார்.

காந்தியடிகள், பெரியார் போன்றவர்கள் இதில் ஈடுபடுவதற்கு முன்பே, ஜார்ஜ் ஜோசப் இப்போராட்டத்தை முன்னின்று நடத்தினார். இதற்காக அவர் சிறை சென்றார். காந்தியடிகளுக்கும் இவருக்கும் இப்போராட்டத்தின் நோக்கம் குறித்து கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும், கொள்கையில் உறுதியாக இருந்தார்.

ஹோம் ரூல் இயக்கம் மற்றும் ஒத்துழையாமை இயக்கம்:

அன்னி பெசன்ட் அம்மையார் தொடங்கிய "ஹோம் ரூல்" (தன்னாட்சி) இயக்கத்தில் தீவிரமாகப் பங்காற்றினார். இதற்காக இங்கிலாந்து சென்று வாதாடவும் முயன்றார்.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈர்க்கப்பட்டு, தனது லட்சக்கணக்கிலான வருமானம் ஈட்டித் தந்த வழக்கறிஞர் தொழிலைத் துறந்து முழுநேர சுதந்திரப் போராட்ட வீரரானார்.

சைமன் கமிஷன் எதிர்ப்பு

1929-ல் சைமன் கமிஷன் மதுரைக்கு வந்தபோது, ஆயிரக்கணக்கான தொண்டர்களைத் திரட்டித் திருமலை நாயக்கர் மஹால் முன்பு மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார். அப்போது அவருடன் கைகோர்த்து நின்றவர் கர்மவீரர் காமராஜர்.

4. தலைவர்களுடனான நெருக்கம்

மகாத்மா காந்தி: காந்தியடிகள் நடத்திய "யங் இந்தியா" (Young India) பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பு வகித்தார். காந்தி இவரைத் தனது "மிக நெருங்கிய தோழர்" என்று குறிப்பிட்டுள்ளார். மோதிலால் நேருவின் "தி இன்டிபென்டன்ட்" பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்தார்.

காமராஜர்: பெருந்தலைவர் காமராஜருக்கு அரசியல் குருவாகவும், வழிகாட்டியாகவும் ஜார்ஜ் ஜோசப் திகழ்ந்தார். காமராஜர் மீது ஆங்கிலேய அரசு தொடுத்த "விருதுநகர் சதி வழக்கில்" அவருக்காக வாதாடி விடுதலையும் பெற்றுத் தந்தார்.

பாரதியார்: மகாகவி பாரதியார் மதுரைக்கு வந்தபோது ஜார்ஜ் ஜோசப் இல்லத்தில்தான் தங்கினார். அங்குதான் தனது புகழ்பெற்ற "விடுதலை! விடுதலை! விடுதலை!" என்ற பாடலை இயற்றிப் பாடினார் என்று கூறப்படுகிறது.

முடிவுரை

கேரளாவில் பிறந்து, லண்டனில் சட்டம் படித்து, மதுரையில் எளிய மக்களுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் ஜார்ஜ் ஜோசப். 1938-ம் ஆண்டு மார்ச் 5-ம் தேதி இயற்கை எய்தினார். மதுரை மக்கள் இன்றும் அவரைத் தங்கள் குலதெய்வமாகவே மதிக்கின்றனர்.

தொடர்புடைய காணொளி:

George Joseph - ரோசாப்பூத் துரை பற்றிய விரிவான தகவல்கள் அடங்கிய காணொளி இதோ TN Leader Series - George Joseph - ரோசாப்பூத் துரை.

இந்தக் காணொளி ஜார்ஜ் ஜோசப் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் டிஎன்பிஎஸ்சி (TNPSC) தேர்வுகளுக்கான முக்கியக் குறிப்புகளை வழங்குகிறது.

https://youtu.be/4RJUv48yoT4?si=BUAF9YHc45al_j0d

https://youtu.be/RCZs4Yjs-Ak?si=l7yfxsxTYBLZzcL0

நூல் மதிப்புரை

பெரியார் பிராமணர்களின் எதிரியா?
-சோழ. நாகராஜன்

முனைவர் சிவ இளங்கோ (நூலாய்வு)
புதுச்சேரி.

பெரியார் தன் போராட்ட வாழ்க்கையைப் பற்றி இப்படிக் கூறுகிறார்:

"யார் ஒருவர் பாதிப்புக்கு உள்ளாகிறார்களோ அவர்கள் பக்கம் நின்று பேசுபவன்"

என்று தன்னைப் பற்றியும் தெளிவாகக் கூறியிருக்கிறார். "அது பணக்காரன், ஏழை என்ற தன்மையோ, பிறப்பால் அல்லது சாதியால் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற தன்மையோ அதில் யார் பலவீனமாக இருக்கிறார்களோ அவர்கள் பக்கம் இருக்கும் நியாயத்திற்காகப் போராடுபவன்" என்றும் கூறியிருக்கிறார்.

இன்னும் தெளிவாகப், "பார்ப்பனர் அல்லாத கீழ் மக்கள் நலனுக்குக் கேடாகப் பயன்படுத்தும் வாய்ப்பை ஒழிக்க வேண்டும் என்று பாடுபட்டு வருகிறேன். என்னுடைய பிரதான ஒரே தொண்டு இதுதான்" என்றும் கூறியிருக்கிறார். உனக்கேன் இதில் அக்கறை என்று யாரும் கேட்பதற்கு முன்பாகவே, "வேறு எவருமே இதைச் செய்ய முன்வரவில்லை. எனவே நான் இதைச் செய்கிறேன்" என்றும் விளக்கம் கொடுத்திருக்கிறார். இதைவேறுவகையிலோ அல்லது திருத்தமாகச் செய்பவர்களோ இருந்தால் செய்யட்டுமே என்பதுதான் அதற்குப் பொருள்.



இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில், பெரியார் மேற்கொண்ட அந்தப் பணியினை அப்படி யாரும் தலைமேல் போட்டுக்கொண்டு செய்ய முன்வரவில்லை என்று இந்த நூற்றாண்டு வாசிகள் அனைவருக்கும் தெரிந்தது தான். ஆனால், முக்கால் நூற்றாண்டுக் காலம் அவரது அரிய உழைப்பினால் விளைந்த, இட ஒதுக்கீடு உள்ளிட்ட சமுதாயப் பலன்களை

அனுபவித்துக் கொண்டு வரும் மக்கள், அவர் இல்லாத இந்தக் காலத்தில், அவரது உழைப்பிற்கும் போராட்டங்களுக்கும் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவதைக் கல் போல் சிலையாக அமர்ந்து அவர் கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்த கல் பேசினால் என்ன பதில் சொல்லும் என்பதைப் போல, அவரது பணிகளைப் பற்றியும், பின்னாட்களில் அவர் மீது எழக்கூடிய விமர்சனங்கள் பற்றியும் யோசித்து, அவர் முன்பாகவே பேசியும் எழுதியும் வைத்து விட்டுப் போய்விட்டார். அந்தப் பதிலை, அவரது கருத்துக்களை ஆழமாக வாசித்துப் புரிந்து கொண்டவர்கள் தான் அவரைப் பற்றி விமர்சனங்களாக எழும் கேள்விகளுக்குப் பதில் தர முடியும். ஏதோ ஒரு கூட்ட முடிவில் ஓடி வந்து, தன் கையைப் பிடித்துக் கொண்ட ஒரு சிறுவன், தனக்குப் பின்னான அய்ம்பது ஆண்டுகளில் தன் பணிகளைப் பற்றியும், தன் மீது எழும் விமர்சனங்களுக்கும் பதில் தரும் ஒரு நூலைப் படைப்பான் என்று அப்போது பெரியாரே சற்றும் யோசித்திருக்க மாட்டார். சொந்தத் தாத்தாவின் கையைப் பற்றி நின்றது போல் நின்ற சோழ நாகராஜன் என்னும் அந்தச் சிறுவன்தான், இக்காலச் சூழ்நிலையில், அப்படியான ஒரு நூலைப் படைத்திருக்கிறார்.

ஏறத்தாழ 2000 ஆண்டுகளாக, இந்தியச் சமுதாயத்தில் நிலவி வரும் அநீதியான வழக்காறுகளை எதிர்த்து எப்படி ஒரு பெரும் போராட்டத்தைப் பெரியார் துவக்கினாரோ, அதே போன்று பெரியாரையே ஒரு வழக்காறாகச் சித்தரித்து அதை எதிர்க்கும் காலமாக இந்தக் காலம் மாறி இருக்கிறது. மாற்றங்களை வரவேற்ற பெரியாரைப் போல் இந்த எதிர்ப்பையும் வரவேற்று, அதற்கான புதிய மாற்றத்தைத் தேடி அடையும் சிந்தனையில் பெரியாரியலாளர்கள் ஈடுபட்டு வருவதை நாடறியும். அப்படியான ஒரு சிந்தனையின் வெளி வடிவமாக, எழுத்து வடிவமாக நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு பயன்பாட்டு நூல்தான், "பெரியார் பிராமணர்களின் எதிரியா?" என்னும் நூல்.

தோழர் சோழ. நாகராஜன் இந்நூலை எழுதியிருக்கிறார் என்பதை விடத் தன் பயணங்களின் ஊடான பட்டறிவை முன்வைத்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். இதற்குப் பெரியாரின் கருத்துக்களை மட்டுமல்ல, பெரியார் என்னும் உயிரியையும் உள்வாங்க வேண்டும். அப்படியான அனுபவங்கள் தனக்குக் கிடைத்திருப்பதை இந்நூலின் பக்கங்களில் நாகராஜன் நெகிழ்ச்சிடன் குறிப்பிடுகிறார்.

இந்தியாவின் வரலாற்றுக் காலம் சனாதனத்துடனேயே தொடங்கியது. இனக்குழுக் காலத்தில் தோற்றவன் அடிமை ஆக்கப்பட்டான். அடுத்து வந்த காலத்தில் சர்வ வல்லமை கொண்ட இனக்குழுத் தலைமையைப் போலவே இல்லாத குழுக்கள் எல்லாம் தோன்றின. அதில் மதக்குழுவாக உருவான தலைமையே மற்ற அனைவரையும் தனக்கு அடிமை என்று நம்ப வைத்தது. அதனால் இந்தியாவில் வர்ண பேதமே வர்க்க பேதம் என்ற நடைமுறையைப் போர்த்துக் கொண்டது. இவை எல்லாம் இந்தியாவின் நவீன முதலாளித்துவத்தின் துவக்கமாக இருந்தன. கடவுள், மதக் கருத்தியல் என்ற போர்வையில் பெரும்பகுதி மக்களை அடக்கி ஆண்ட சனாதனிகள் பெரும் பலன் அடைந்தனர். அந்த அநீதியான செய்கைக்குத் தெய்வங்களும் காவல் நின்றன. அதனால் சமுதாயத்தின் அடிநிலை மக்களும், வறுமை உற்றவர்களும் அடிமையாக்கப் பட்டனர்.

உலக நாடுகள் போல இரண்டு வர்க்கங்களோடு மட்டும் இந்தியப் பிளவு நின்று விடவில்லை. இந்திய வர்ண பேதம், வர்ண சமூகத்தின் கணக்கை அதிகமாக்கிக் கொண்டிருந்தது. தலை முதல் கால் வரையான நால் வருணங்களும் அதில் இடம்பெறாத அவர்ணர்களும் தங்கள் உச்சத்தில் இருந்த வர்ணத்திற்குக் கட்டுப்பட்டே தீர வேண்டிய கட்டாயத்தில் தான் வாழ முடிந்தது. அதனால் வர்ணாசிரமத்தின் அடியில் நசுக்கப்பட்ட மனிதக் கூட்டமாக சூத்திரர்களும், அவர்ணர்களும் இருந்தனர். சூத்திரர்களுக்குக் கடவுள் விடுத்துள்ள ஒரே வேலை பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று பிரிவினருக்கும் பணிவோடு ஊழியம் செய்வதே.

அதேநேரம் இந்த வர்ண பேத அமைப்புக்கு எதிர்ப்புக் குரல்களும் கேட்கத் தொடங்கின. வேத காலத்திற்கு முன்பிருந்த இந்தியச் சமயங்கள் இயற்கையோடு இணைந்து வாழும் அறிவைத்தான் போதித்து வந்தன. அதற்குப் பிறகு நுழைந்த வைதீக மரபு அனைவரையும் வர்ண பேதத்தினுள் வைத்து அடிமை என்றது. அந்த வர்ண பேதத்தைக் கடவுள் உண்டாக்கியதாகக் கூறி அதற்குச் சான்றாக சுமிருதிகளையும், சாத்திரங்களையும் உண்டாக்கி அவற்றின் வழி தங்கள் மேலாதிக்கக் கருத்துகளை நிறுவி வந்தனர். இது புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே எதிர்ப்புக்குள்ளாகி இருந்தது. பின்னர் புத்தரும் எதிர்த்தார். சித்தர்களும் எதிர்த்தனர். வர்ணாசிரம, சாதிய சமுதாயக் கருத்துகளை எதிர்த்த போர் என்பது நீண்ட நெடிய சங்கிலித் தொடராகவே காலங்காலமாய் நடந்து வந்தது. மரபு வழி போதிக்கப்பட்டு வந்த வர்ணாசிரமக் கோட்பாட்டை எதிர்த்த குரலும் மரபார்ந்த நாகரிகத்தின் கருத்தியலாக எதிரொலித்ததை தனது காலத்தில் பெரியாரும் ஒலிக்கச் செய்தார். அக்குரல் எல்லோருக்கும் எல்லாமும் உரியதான சமத்துவத்தை நோக்கியதாகவும், ஒருமைப்பாட்டை அடிநாதமாகக் கொண்டிருந்ததாகவும் அமைந்தது என்றும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அவருடைய இந்தக் கருத்துக்கு வரலாறு நெடுகிலும் கலகக் குரல்கள் ஒலித்த சான்றுகளையும் வரிசைப்படுத்துகிறார்.



பண்பாட்டில் உயர்ந்திருந்த ரோமானியர்களை முரட்டு வீரர்களான ஜெர்மானியர்கள் வென்றது போல, நாடோடிகளாக வந்த ஆரியர்கள் சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்திருந்த பூர்வகுடி திராவிட மக்களைத் தோற்கடித்து, அவர்களின் உயர்ந்த பண்பாட்டினைக் கண்டு வியந்து அதைத் தம்முடையதாக்கிக் கொள்ள முயற்சித்தனர். நாடோடிக் கும்பல்களின் சுரா பான உளறல்களை எல்லாம் வேதங்கள் என்று கூறியதுடன், ‘‘வேதங்களும், சாத்திரங்களும் அறிவியல் வழிப்பட்டவை என்று சித்தரிக்கும் உச்ச கட்ட மூடத்தனங்களின் காட்சிச் சாலையாக இந்தியா ஆனது’’ என்று ‘வால்கா முதல் கங்கை வரை’ நூலின் ஆசிரியரும், இந்திய ஆய்வாளருமான, இராகுல சாங்கிருத்யாயன் குறிப்பிட்ட கருத்துக்களை முன் வைக்கும் நூலாசிரியர், அச் சாத்திரங்களை உயிருள்ள சவம் என்றும் கூறுகிறார்.

இந்தியச் சமுதாயத்தில் நடைபெறும் சமத்துவத்துக்கான வர்க்கப் போரின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக சமூக நீதிப் போராட்டங்கள் தொடர்ந்தன. இந்தச் சூழலில்

இந்தியச் சமுதாயம் இருபதாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவைப் பொருத்து மாபெரும் எதிர்ப்பைப் பெரியார் மூலம் கண்டது. இதுகுறித்து, காந்தியடிகளே பெரியாருக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். அதாவது, பெரியாருக்குப் பின்னர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக மயிலை சீனிவாச ஐயங்கார் இருந்தபோது, 1931 ஆம் ஆண்டில், அகில இந்திய காங்கிரஸ் தலைவரான மகாத்மா காந்தி சென்னை வந்தார். சீனிவாச ஐயங்கார் வீட்டுத் திண்ணையில் தானும் தனது மனைவி கஸ்தூரிபாயும் தங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். பின்னர் 1942 ஆம் ஆண்டில் சென்னை வந்தபோது சீனிவாச ஐயங்காரின் இல்லத்தினுள் சமையல் கூடத்திற்கும், படுக்கை அறைக்கும் தங்களால் செல்ல முடிந்தது என்று காந்தியடிகள் குறிப்பிட்டு, பெரியாரின் கலகத்தால் தான் இது நடந்தது என்று பெரியாருக்கு நன்றி தெரிவித்திருக்கிறார் (இந்தச் செய்தி முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ. ராசாவின் உரையிலிருந்து எடுக்கப்பட்டது).

"அக்ரகாரமும், சேரியும் ஒரே சமுதாயத்தில் எப்படி இருக்க முடியும்?" என்று கேள்வி எழுப்பிய பெரியார், அந்த இரண்டையும் ஒழிப்பதுதான் தன் முதல் கடமையாகக் கருதி அதற்கு அடிப்படையான வர்ணாசிரம எதிர்ப்பை மேற்கொண்டார். அதற்காகத் தனிப்பட்ட முறையில் பிராமணர் உட்பட யாரோடும் அவர் வேற்றுமை பாராட்டியதும் இல்லை. மாறாக பிராமணர்களுக்குள்ளும் மனிதர்களைத் தேடி இருக்கிறார் என்பதுதான் உண்மை. "ஊருக்கு உழைப்பவனுக்கு வேறு மதம் வேண்டுவதில்லை என்பதுடன் பிறருக்குப் பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்தாலே போதும்; கடவுளும், மதமும் தேவையில்லை" என்றார் பெரியார்.

"பாம்பையும் பார்ப்பனனையும் ஒருசேரக் கண்டால் பாம்பை விட்டு விடுங்கள்; பார்ப்பனனை அடியுங்கள்; அவன்தான் பாம்பை விட நஞ்சு உள்ளவன்!" என்று பெரியார் சொன்னதாக கேள்விப்பட்டிருப்போம். இது உண்மையிலேயே பெரியார் தான் சொன்னாரா என்று கேட்டால் எங்கிருந்தும் பதில் வரவில்லை. இப்போது அதைவிட மிக மோசமான கருத்துக்களை எல்லாம் பெரியார் சொன்னதாகக் கூறி, அதனால் பெரியாரை அதே அளவுக்கு இழிவு படுத்துவது சமூக வலைத்தளங்களில் அதிகமாகி விட்டது.. இதன் உச்சகட்டம் தான் பெரியார், பிராமணர்களின் எதிரி என்பது. அதைப் பிராமணத் துவேஷி என்று அவர்கள், அவர்களின் சொல்லாடலில் குறிப்பிடுகின்றனர்.

"ஆம், நான் பார்ப்பனத் துவேஷி தான்!" என்று சொல்கிறார் பெரியார். அவர் சொல்வது என்னவென்றால், வாயில் நஞ்சை வைத்திருக்கும் வரையில் நல்ல பாம்பைத் துவேஷிக்காமல் இருக்க முடியவில்லை என்பதுதான். இந்த நாகரிகமான விமர்சனம் தான், பாம்பை அடிப்பதா? பார்ப்பனனை அடிப்பதா? என்பது வரையில் கண், காது, மூக்கு வைத்து உருவாகி விட்டது. "திராவிட மக்களின் சந்ததியரில் ஒருவர் கூட அட்வகேட் ஜெனரலாகவோ, திவானாகவோ, டாக்டராகவோ, நீதிபதியாகவோ வர முடியாத நிலைமையில் அவர்கள் ரிக்ஷா இழுக்கின்றனர்; மூட்டை தூக்கி, விறகு பிளந்து, இந்த வேலை கூட கிடைக்காமல் பர்மா, மலேசியா, இலங்கை, தென்னாப்பிரிக்கா என்று குடி பெயர்ந்து, அங்கும் பல இயற்கைச் சவால்களை எதிர்கொண்டு பேரழிவைச் சந்திக்கின்றனர்" என்பது பெரியாரின் பட்டறிவு வாதம். ஆனால் இதுபோன்று எந்தச் சிரமமும் இன்றிப் பார்ப்பனச் சந்ததியர்கள் வெறும் திதி, தர்ப்பை என்று கௌரவப் பிச்சை

எடுத்து வளர்க்கின்ற மகா சந்ததியாரை ஹை கோர்ட் நீதிபதி, திவான், மந்திரி, டாக்டர், இன்னும் பல உயரிய பதவிகளில், தங்கள் வர்ணம் சொல்லி, எளிதாக அமர்த்துகின்றனர். நான் மூட்டை தூக்கியாவது, கூலி வேலை செய்தாவது, ரிக்ஷா இழுத்தாவது உன்னைக் காப்பாற்றுகிறேன் என்று தன் காதலி அல்லது மனைவியிடம் இதுவரை எந்த ஒரு பார்ப்பனனாவது ஏதாவது ஒரு சிறுகதையிலோ, நாவலிலோ, திரைப்படங்களிலோ வசனம் பேசி இருக்கிறானா? எங்கேயாவது கண்டதுண்டா? படித்ததுண்டா? அதற்குக் காரணம் அவர்கள் கற்பித்த வர்ண பேதமும், சாதியை அடிப்படையாகக் கொண்ட சனாதனமும் தான். "இதை எதிர்ப்பது தான் என்னுடைய வேலை. இதை எதிர்ப்பதைத் தான் துவேஷ உணர்ச்சி என்கிறார்கள். சொல்லட்டுமே! ஆம் என்போம்! பயம் என்ன?" என்கிறார் பெரியார்.

அதே நேரம், அதற்குச்சமூக அடிப்படையில் விளக்கம் கூறிய பெரியார், "சாதிக்கர்வமும், மூடநம்பிக்கையும் பார்ப்பனச் சகோதரர்களிடம் மாத்திரம் இருப்பதாக எண்ணுவது பிசகு; பார்ப்பனர் அல்லாத சில வகுப்பாரிடமும், பஞ்சமர் ஆகிய சில வகுப்பாரிடமும் இருக்கிறது; இதை இவர்கள் மேல் சாதியார் என்பவர்களிடத்திலிருந்து தான் கற்றுக் கொண்டார்கள்" என்று குடியரசு இதழ் வழி கூறுகிறார். சிருங்கேரி சங்கராச்சாரியார் பெரியாருக்குக் கடிதம் எழுதி அவரை நேரில் வருகை தருமாறு வேண்ட, அதற்குப் பெரியார் நேரில் செல்லாவிட்டாலும், கண்ணியமாகப் பதிலளித்து எதிர்கொண்ட விதம் பெரியார் ஒரு பிராமணத் துவேஷி அல்ல என்பதேயே காட்டுகிறது. இளமை முதல் பழகிய ராஜாஜியிடம் மட்டுமல்ல, தன் மனதைக் கவர்ந்த வாசனிடம் மட்டுமல்ல, முன்பின் தெரியாத தன் கொள்கையை உரசிப் பார்த்த பிறப்பால் பிராமண சாதியார்களிடம் எல்லாம் அவர் கண்ணியம் காட்டி இருக்கிறார். அதனால்தான் அவர் (பெரியார்) இயற்கையின் புதல்வர் என்கிறார் வ. ராமசாமி ஐயங்கார். 1931 ஆனந்த விகடனில் கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி, பெரியாரை மனமுவந்து பாராட்டி எழுதுகிறார். "பிறப்பொக்கும் என்னும் தூய மொழியை இம் மாநிலத்தில் நிலைநாட்டிய பேரறிஞர் நம் ஈ. வெ. ரா." என்கிறார் 1939 இந்தி எதிர்ப்புத் தமிழர் படையில் இடம்பெற்ற காஞ்சிபுரம் ராஜகோபால் என்கிற ஒரு பிராமணர்.

1948 மகாத்மா காந்தி படுகொலையின் போது, அக் கொலையைச் செய்த கோட்சே ஒரு பிராமணர் என்று ஒரு பொதுக் கூட்டத்தில் தி.க. தோழர் ஒருவர் சொல்ல முயல, மேடையில் தன் கைத்தடியைத் தட்டி அதனைத் தடுத்து நிறுத்திய பெரியார் பின்னர், "மக்கள் ஏற்கனவே கொந்தளிப்பில் இருக்கும் போது அதைத் தூண்டி விடுகிற மாதிரி பேசுவது கலவரங்களை உண்டாக்காதா? சமூகத்தை பிளவுபடுத்துவதா நம் நோக்கம்? என்று பெரியார் அறிவுறுத்திய செய்தியைக் கூறிப் பெரியார் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை வரிசைப் படுத்தும் சோழ நாகராஜன், "எப்படிப் பெரியார் பிராமணத் துவேஷி ஆவார்?" என்று கேட்கிறார்.

சென்னை ராயப்பேட்டை சீனிவாசப் பெருமாள் கோயில் வளாகத்தில், 1953 ஆம் ஆண்டில், லட்சுமிபுரம் யுவ சங்கத்தைச் சேர்ந்த பார்ப்பன இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கூட்டத்திற்குப் பெரியாரை அழைத்திருந்தனர். அவரும் அதை ஏற்று நேரில் வந்து பேசுகிறார். சீனிவாச அய்யங்கார் என்பவரின் மறைவிற்காக நடைபெற்ற இரங்கல் கூட்டம் அது. அங்கு கூடி இருந்தோரில் ஆகப் பெரும்பான்மையோர்

பிராமணர்கள். அக்கூட்டத்தில் பேசிய பெரியார், "பிராமணர்கள் இந்த நாட்டில் வாழக்கூடாது என்றோ, இருக்கக் கூடாது என்றோ திராவிடர் கழகம் வேலை செய்யவில்லை. திராவிடர் கழகத்தின் திட்டமும் அதுவல்ல. இந்த நாட்டில் நாங்களும் (பிராமணரல்லாதோர்) கொஞ்சம் மனிதத் தன்மையோடு, சமத்துவமாக இருக்க வேண்டும் என்பதுதான் நாங்கள் விரும்புவது. இதற்காக இந்த நாட்டை விட்டுப் பார்ப்பனர்கள் போய்விட வேண்டும் என்று சொன்னதாக அர்த்தமாகாது; அவர்களைப் போகச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை; நம்மிடையில் பேத உணர்ச்சி வளரக்கூடாது என்பதில் எனக்குக் கவனம் உண்டு" என்று பேசி முடித்து, தன்னைப் பேச அழைத்ததற்காக அவர்களுக்கு நன்றியும் தெரிவித்திருக்கிறார் பெரியார். இதையே, "பார்ப்பனத் தோழர்களுக்கு" என்று தலைப்பிட்டு, விடுதலை இதழில் செய்திக் கட்டுரையாகவும் தீட்டி இருக்கிறார் என்று தி.க.வினரே அறிந்தராத பல செய்திகளையும் பட்டியலிட்டு இருக்கிறார் நூலாசிரியர்.

"என்னைச் சில பார்ப்பனர்கள் வெறுத்து ஏசுகிறார்கள். ஆனால் ஒன்று; சிறு வயதிலேயே கணவனை இழந்தவள் என்பதால் மொட்டை அடிக்கப்பட்டு, முக்காடு போடப்பட்டு, அமங்கலி என வீட்டிற்குள் மூலையில் உட்கார வைக்கப்பட்டிருக்கும் அந்த அக்கிரகாரத்து இளம் விதவைப் பெண்கள் என் பேச்சைக் கேட்டால் என்னைப் போற்றவே செய்வார்கள்" என்றும் பெரியார் கூறினார். விதவைக் கொடுமையைப் பார்ப்பன இளம் பெண்கள்தான் அதிகம் அனுபவித்தவர்கள். அந்த அநாகரிக வழக்கத்தை அறவே கைவிடச் சொன்னவரும் பெரியார் தான். இன்றைய நிலையில் பார்ப்பன விதவைகள் என்று யாரையும் காண முடியவில்லை. அவர்கள் மொட்டை அடித்துக் கொண்டு மூலையில் உட்கார்ந்து கொள்வதில்லை. மறுமணம் என்ற அடுத்து நிலைக்குச் சென்று அவர்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்கின்றனர். இதற்கெல்லாம் பெரியாரின் சாதி ஒழிப்புக் கருத்துக்களும், பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்களும் தான் காரணம் என்பது பார்ப்பனர்களே இரகசியமாக ஏற்றுக்கொள்ளும் ஒன்றுதான். உண்மையில் இப்படிப் பாதிக்கப்பட்ட பார்ப்பனர்களிடம், பெரியார் பிராமணத் துவேஷியா? என்று தனிப்பட்ட முறையில் கேட்டால், "இல்லை, அவர் பிராமண மித்ரன்! (நண்பன்)" என்று தான் கூறுவார்கள்.

பெரியார் பொதுவாகப் பார்ப்பனர்கள் என்று தான் குறிப்பிடுவார். தங்களைப் பிராமணர்கள் என்று ஆரிய வந்தேறிகள் முதலில் குறிப்பிட்டுக் கொண்டாலும் அது பழக்கத்தில் இல்லை. அந்தணர், பார்ப்பனர் என்பதெல்லாம் சமண, ஆசீவக அறவோரைக் குறிக்கும் சொற்கள். பின் நாட்களில் அவை பிராமண சமூகத்திற்கு உரியவையாக அவர்களாலேயே வரிந்து கொள்ளப்பட்டன. தமிழில் மட்டுமே பார்ப்பனர் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. வேற்று மொழிகளில் அவர்கள் பிராமணர்கள் தான். டாக்டர் அம்பேத்கரும் அவர்களைப் பிராமணர்கள் என்றுதான் குறிப்பிடுகிறார். ஆனால் பிரம்மன் என்னும் கடவுளுக்கு இணையாகக் குறிப்பிடப்படும் பிராமணர் என்ற பதத்தைப் பயன்படுத்த க்கூடாது என்று பெரியார் கூறிப் பார்ப்பனர் என்று அழைக்கலாம் என்றார். பார்ப்பனர் என்று சொல்லாடல் சங்க இலக்கியங்களிலும் பயின்று வருகிறது. பார்ப்பன மகனே என்று புறநானூறும், மாமுது பார்ப்பான் என்று சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றன.

ஆனால், அவை குறிப்பிடுபவை பிராமணர்களை அல்ல சமண அந்தணர்களை. அந்தணன் என்போன் அறவோன் என்கிறார் திருவள்ளுவர். அவர்களைப் பிராமணர் என்று அழைக்கும் வழக்கம் திருவள்ளுவர் காலத்தில் இல்லாத ஒன்றாயிருக்கலாம்.

"பெரியாரைப் புரிந்து கொள்ளுதல் என்பது அவருடைய எழுத்துக்களை மட்டும் வாசித்துப் புரிந்து கொள்வது அல்ல. பெரியாருடைய எழுத்துக்களை மட்டும் தனியாகத் தொகுத்து அவரை கொடூரமான வன்முறையாளனாகக் கூடச் சித்தரிக்கலாம். ஆனால் அவர் எழுத்துக்களோடு அவருடைய செயல்பாடுகளையும் சேர்த்து உணரும்போது மிகச்சிறந்த காந்தியவாதியாக, அகிம்சாவாதியாகப் பெரியார் திகழ்ந்தார்" என்பது பெரியார் குறித்து அண்மையில் விமர்சிக்கப்பட்ட கருத்துகள் ஆகும்.

"எந்தப் பண்பாட்டையும் இந்துத்துவமாக்கும் ஒரு படையெடுப்பை ஆர்எஸ்எஸ் கடந்த ஒரு நூற்றாண்டாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அதை வெற்றிகரமாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறது என்பது தான் நாம் கவனிக்க வேண்டிய செய்தி. அதற்கு எதிராக நாம் என்ன வகையான மாற்றுத்திட்டத்தை கையில் வைத்திருக்கிறோம் என்பதுதான் மிக முக்கியமானது" என்று சமூக வலைத்தளங்களில் புழங்குகின்ற கருத்துகள் சரியான எச்சரிக்கையையே தருகின்றன.

"பெரியார் வறட்டு நாத்திகர் கிடையாது. பெரியாரிடம் இருந்த சமயோசித திட்ட வழிமுறைகள் நம்மிடம் இருக்கிறதா என்பதைத் தீவிரமாகப் பெரியாரிய இயக்கங்கள் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய நேரம் இது. பெரியாரிய இயக்கங்களும் காலத்திற்கு ஏற்பப் பல்வேறு மாற்றங்களை உள்செரித்து முடிவுகளை எடுத்துக் கொண்டிருந்தாலும், பண்பாடு சார்ந்த வரையறைகளிலும், ஆர்எஸ்எஸின் திட்ட வழிமுறைகளைப் பண்பாட்டு ரீதியாக எதிர்கொள்வதிலும் நம்மிடம் உள்ள திட்டம் எதிர்காலத்திற்கும் சேர்த்துப் பயன்படுமா?" என்பதை மீளாய்வு செய்ய வேண்டிய தேவையை உண்மையான சமூக அக்கறை உள்ளவர்கள் எச்சரித்துக் கொண்டிருக்கும் இன்றைய முக்கியமான காலகட்டத்தில், தோழர் சோழ நாகராஜனின் நூல் பெரியாரியலின் உண்மையான பரிமாணத்தை எடுத்து இயம்புவதுடன், தற்போது இந்தியா எதிர் கொண்டிருக்கும் மத பயங்கரவாத பேராபத்திலிருந்து வருங்காலத்தில் எப்படி மீள்வது, சமத்துவமான சமூக

நீதியை எப்படி நிலை நிறுத்துவது என்ற சமூக நல்லிணக்கத்திற்குப் பாதுகாப்பான ஒன்றாக அமையும். பெரியார் வழி இயங்குபவர்கள் தான் இந்நிலைக்காகப் போராட வேண்டும் என்றில்லாமல், தோழர் சோழ நாகராஜன் போன்று அவரவர்களுக்குமான சமுதாயப் பொறுப்பை உணர்ந்தாலே எதிர்காலத்தில் நம்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழும் என்பதில் அய்யமில்லை.

வழிபாடு விளக்கமும் வகைகளும்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி,
ஆசிரியர், தமிழணங்கு, மதுரை

வழிபாடு என்பது ஓர் வெளிப்பாடு. இறைவன், ஒரு தெய்வீகப்பொருள் அல்லது ஒரு குருவுக்கு அடிபணிந்து அவரை/ அதனைப் போற்றித் துதித்து மதித்து சிலையை/ படத்தை / பொருளை அலங்கரித்து அவரால்/ அதனால் கிடைத்த நன்மைகளுக்காக நன்றி சொல்லி அதற்கான சில சடங்கு சம்பிரதாயங்களை செய்வதாகும். தனக்கு வேண்டிய பொருட்களை சுகங்களைப் பட்டியலிட்டுக் கேட்டு அவை கிடைத்தால், பதிலுக்கு இன்னின்ன செய்வேன் என்று ஒரு எழுது மனமொழி ஒப்பந்தம் செய்வதும் வழிபாடு எனப்படும். இவ் வழிபாடு மதத்துக்கு மதம் மாறுபடுவதோடு மட்டுமல்லாது. ஒரே மதத்துக்குள் இருக்கும் பல, சில பிரிவுகளுக்கிடையிலும் மாறுபடும். சாதிகளுக்கிடையிலும் வழிபாடுகள் வித்தியாசப்படும். ஒரேசமயத்தைச் சேர்ந்த தெய்வங்களுக்கிடையில் வழிபாடுகள் வேறுபடும். ஒரே கோயிலுக்குள்ளும் வேறுபடும் திருவானைக்கா கோவிலில் வராகி ரூபிணியாக விளங்கும் அகிலாண்டேஸ்வரிக்கு தாழம்பூ சாற்றலாம். அங்கேயே அருகில் அருள் பாலிக்கும் ஜம்புகேஸ்வரர் சந்நிதிக்குள் தாழம்பூவை எடுத்துச் செல்ல கூடாது.

வழிபாட்டுக்கு உரியவர்

வழிபாட்டுக்கு உரியவையாக இறைவன் என்ற நம்பப்படுகின்ற ஒரு மீவியற்கை சக்தி, செத்துத் தெய்வமாகிய முன்னோர்கள், ஆன்மீகப் பெரியோர்கள்சமயப் பெரியோர்கள் தற்காலத்தில் அரசியல் தலைவர்கள் ஆகியோர் வழிபாட்டுக்குரியவர்களாகக் கருதப்படுகின்றனர் வழிபடு பொருட்கள்தெய்வ சக்தி உடைய பொருட்கள்,, தெய்வத்தோடு தொடர்புடைய பொருட்கள், தெய்வமாக நம்பப்படும் பொருட்கள், என்று மூன்று வகையில் பொருட்களுக்கு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.வழிபாட்டுக்குரிய பொருட்களை *sacred taboo* என்று மேனாட்டறிஞர்கள் அழைப்பர். இவையும் பொதுவாக இறைவனோடு தொடர்புடைய பொருட்களாக அல்லது இறைச் சக்தி பெற்ற பொருட்களாக இருக்கும. இந்தப் பொருளே இறைவனாவும் கருதப்படும். தமிழகத்தில் பல இடங்களில் இன்றைக்கு முருகன் கோவில் என்று அழைக்கப்படுகின்ற கோவில்களில் ஆதியில் வெறும் வேல் மட்டுமே

வழிபடுபொருளாக இருந்து வந்தது. இன்றைக்கும் அங்கு வேலுக்கு தனிக் கோயில் மற்றும் வழிபாடுகள் உண்டு.

வேல்

வேல் மட்டுமே வழிபாடு பொருளாக விளங்குகின்ற கோவில்களும் உண்டு. முருகனுக்குரிய அறுபடை வீடுகளில் முதலாவதாக விளங்கும் திருப்பரங்குன்றத்தில் அபிஷேக ஆராதனைகள் அனைத்தும் வேலுக்கே செய்யப்படும். அங்கு வேல் தான் முக்கிய வழிபடுபொருள் ஆகும். சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் சுறா மீனின் முதுகெலும்பை வைத்து வழிபட்டதாகச் சான்றுகள் கிடைக்கின்றன

நூல்

இஸ்லாமியர், ஜோராஷ்டிரியர் போன்றோர் தங்களுடைய குரான், ஜென்டா அவெஸ்தா, ஆகிய வேத நூல்களை புனிதப் பொருளாகப் போற்றுகின்றனர். அவற்றைத் தரையில் வைப்பது கிடையாது. சில சமயங்களில் புனித நூலைப் பெண்கள் தொடக்கூடாது என்றும் குறிப்பாக மாதவிடாய்க் காலத்தில் புனிதப் பொருட்கள் எதையும் தொடக்கூடாது என்றும் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இவையெல்லாம் தூய விலக்கு *(sacred taboo)* பெற்றவை. இந்நூல்கள் தூய்மையானவை என்பதால் தீட்டுப்பட்டவர்கள் தொடக்கூடாது.

மரம்

தெய்வமாகக் கருதப்பட்ட மரங்கள் அச்சத்திற்குரியனவாகவும் போற்றுதலுக்கு உரியனவாகவும் நம்பப்பட்டன. இவை காவல் மரங்கள் என்று அழைக்கப்பட்டன. இந்த மரங்களில் அவர்களின் முன்னோர்கள் ஆவியாக உறைவதாகவும் அவர்களே மரத்தின் வழியாக தங்களைக் காப்பாற்றுவதாகவும் *(totem)* நம்பிக்கை இருந்ததனால் அந்த மரத்திற்குச் செய்யப்படும் இடையூறு தங்கள் இறைவனை இழிவு படுத்துவதாக எண்ணி அவ் இடையூறு செய்தவர்களுக்கு கொலைத் தண்டனை வழங்கினர். சங்க இலக்கியத்தில் காவல் மரங்கள் பற்றிய ஒரு கொடூரமான நிகழ்வைப் பெண் கொலை செய்த நன்னனின் வரலாற்றால் அறியலாம். இவனால் கொலை செய்யப்பட்ட பெண் இன்றைக்கு மாசாணி அம்மன் ஆக அருள்பாலித்து வருவதையும் பின்வரும் கட்டுரைகளில் விளக்கமாகக் காணலாம். அவனுடைய காவல் மரமான மா மரம் தெய்வமாக போற்றப்பட்டதன் வரலாற்றை இவனுடைய வரலாறு எடுத்துக் கூறுகின்றது. மரம், செடி, கொடி, விலங்கு, பறவை போன்றவற்றைத் தங்கள் குல முதுவராகக் *(totem)* கருதும் நம்பிக்கையின் காரணமாக இவையும் வழிபடு பொருட்கள் ஆயின.

சாமி பெட்டி

வேறு சில பொருட்களும் வழிபாட்டுக்குரியனமாக உள்ளன. நாட்டார் சமயங்களில் சாமி பெட்டி வழிபாட்டிக்கு உரியதாகும். அதில் இறந்து போனவர்களுடைய பொருட்கள் வைக்கப்பட்டு இருக்கும். பெண் தெய்வம் என்றால் காதோலை, கருகுமணி, வளையல், சேலை போன்ற மங்கலப் பொருட்கள் இருக்கும். அவற்றை ஆண்டுக்கு ஒரு முறை எடுத்துத் திறந்து வைத்துப் புதிய காதோலை, கருகமணி, வளையல், சேலை வைத்து பழையவற்றை எடுத்துவிட்டு வழிபாடு முடிந்த பிறகு அந்தப் பெட்டியை அதற்கென்று இருக்கும் ஒரு சின்ன சாமி அறையில் வைத்து விடுவார்கள். இதுவும் வழிபாட்டிற்குரிய பொருளே ஆகும்.

இவை தவிர குடும்பத்து முன்னோர் வழிபாடுகளில் அவர்கள் புழங்கிய, அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், வழிபாட்டுப் பொருட்களாக விளங்குவதும் உண்டு.

ஆயுதம், வாகனம்

யூத சமயத்தில் காணப்படும் ஏழு கிளைகளை உடைய விளக்கு, இந்து சமயத்தில் இறைவன் கையில் இருப்பதாக கருதப்படும் வேலாயுதம் சூலாயுதம் போன்றவை, சங்கு சக்கரம் போன்றவை வழிபடு பொருட்களாகும். பெருமாள் கோயில்களில் அவரது ஆயுதமான சக்கரத்துக்கென்று தனியாக சக்கரத்தாழ்வார் சன்னதி உண்டு. சிவன் கோயில்களில் அவரது வாகனமான நந்தி வழிபடு பொருளாக விளங்குகின்றது. பிரதோஷ வேளையில் நடைபெறும் வழிபாடு நந்திக்குரிய சிறப்பு வழிபாடாகும்.

தெய்வ சக்தி உடைய பொருட்கள்,, தெய்வத்தோடு தொடர்புடைய பொருட்கள், தெய்வமாக நம்பப்படும் பொருட்கள், என்று மூன்று வகையில் பொருட்களுக்கு வழிபாடுகள் செய்யப்படுகின்றன

வழிபாட்டு முறைகள் என்பது அதிசயம்*(wonder)*, உருமாற்றம்*(transformation)* , புதுப்பித்தல்*(renewal)*, பொதுமையாக்கம்*(decentering)* என்ற நான்கு அடிப்படையில் நிகழ்வதாக அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிசயம் ஏதேனும் வாழ்க்கையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தால் அது தான் வணங்கும் இறைவனால் நிகழ்ந்தது என்று அந்த இறைவனை துதித்துப் போற்றுவதுண்டு. அல்லது தான் தெய்வமாகப் போற்றும் ஆன்மிகப் பெரியவரை போற்றுவர், முன்னோர்களைத் தெய்வமாகக் கொண்டிருந்தால் அத்தெய்வத்துக்குச் சிறப்பு வழிபாடுகள் நடத்துவர். அந்த அதிசயத்தைப் பலருக்கும் எழுத்தின் மூலமும், காட்சி ஊடகம் மற்றும் எழுத்து ஊடகம் மூலமாகவும் விளக்குவர்.

உருமாற்றம்

உருமாற்றம் என்பது சிலர் வழிபாடுகளின் போது, அல்லது அதன் காரணமாக பல வகையிலும் தங்கள் உருவத்தை மாற்றிக் கொள்வதாகும். சிலர் தங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்வர். எடுத்துக்காட்டு - ஐயப்பன் கோவிலுக்கும் முருகன் கோவிலுக்கும் மாலை அணிந்து விரதம் இருப்பவர்கள் தங்களுடைய தோற்றத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவார்கள். கழுத்தில் ருத்ராட்சம், தாமரை மணி மாலை அணிவது, கருப்பு நீல நிறம் மற்றும் பச்சை நிற வேட்டி உடுத்துவது நெற்றியில் சந்தனம் குங்குமம், விபூதி இடுவது, கையில் காப்பு கட்டுவது போன்ற மாற்றங்கள் தெளிவாகத் தென்படும்.

நேர்ச்சை

வேறு சில கிராமக் கோவில்களுக்கு நேர்த்திக் கடன் இருந்து அதனை நிறைவேற்றச் செல்பவர்கள், சாமியாடிகள், தீச்சட்டி எடுப்போர், திரி எடுத்து ஆடுவோர், தண்ணீர் பீய்ச்சுவோர் போன்றோர் கோவில் விழா தொடங்கியதும் கையில் காப்பு கட்டுவார்கள். ஆன் பெண் இரு பாலாரும் விறலி மஞ்சள் துண்டை, மஞ்சள் துணியில் கட்டி அதனைக் கைகளில் கட்டி இருப்பார்கள். வழிபாடுகள் இவ்வாறு அவர்களுடைய உருவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

துறவியாகப் போகின்றவர்களும் இறைப்பணிக்கும் சமயப் பணிக்கும் தங்களை முழு நேர பணியாளர்களாக மாற்றிக் கொள்பவர்களும் அந்தந்த சமயத்திற்கும் சமயப் பிரிவிற்கும் சாதிப்

பிரிவுக்கும் ஏற்றபடி தங்களின் தோற்றத்தை மாற்றிக் கொள்கின்றனர். இதுவும் இறை வழிபாடு, குரு வழிபாடு, இயற்கை வழிபாடு போன்ற ஏதேனும் ஒரு வழிபாட்டின் அம்சமாக விளங்குகின்றது.

புதுப்பித்தல்

ஒரு வழிபாடு மனிதனைப் புதுப்பித்துக் கொள்ள உதவுகின்றது. ஒரு மாபெரும் சக்தியின் மீது நம்பிக்கை வைத்து அதனால் தன் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படும் என்று நம்பியவன் வழிபாடு செய்ததும் அந்த மாற்றங்கள் அவனது வாழ்க்கையில் தற்செயலாக நடந்திருந்தாலும் கூட வழிபாட்டின் மூலமாகவே நடந்தது என்பதை நம்பி தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்கிறான். தன் வாழ்வில் சில பழைய பழக்கவழக்கங்களை விட்டுவிட்டு புதிய நடைமுறைகளைப் பின்பற்றத் தொடங்குகிறான். தன் குடும்பத்திலும் அந்த மாற்றங்களைக் கொண்டு வருகிறான். தன்னுடைய நண்பர் வட்டத்திலும் தெரிந்தவர்களிடமும் அதனைப் பகிர்ந்து கொண்டு அவர்களையும் அந்த வழிபாட்டைச் செய்யும்படி தூண்டுகின்றான். இவ்வாறாக வழிபாட்டின் மூலமாக புத்துருப் பெறுதல் அல்லது புத்தாக்கம் அடைதல் போன்ற நிலையும் கிடைக்கின்றது.

பொதுமையாக்கம்

பொதுத்தன்மை என்பது வழிபாட்டினால் கிடைக்கும் மற்றொரு விளைவாகும். மக்கள் ஒன்று கூடி ஒரு சமூகமாக இயங்குகின்ற நிலை ஏற்படுகின்றது. குழுவாக சேர்ந்து வழிபாடுகளை நடத்தும் போதும் ஊரோடு சேர்ந்து ஊர்த் திருவிழாவாக வழிபாடுகள் செய்யும் போதும் அல்லது மகாமகம் என்று மாநில அளவிலும் கும்பமேளா என்று தேசிய அளவிலும் நடத்தும் நிலை தோன்றுகிறது. வழிபாடுகள் மக்களை தன் மய்யப்படுத்துதல் என்ற நிலையில் இருந்து மாற்றி பொதுமையாக்கம் என்ற நிலைக்கு உயர்த்துகிறது.

பலரும் ஒன்று கூடி வழிபாடுகளை நிகழ்த்தும் போது அந்த நேரத்தில் கிடைக்கக்கூடிய வசதிகளில், சில, கூட குறைய இருந்தாலும் அதனைப் பொறுத்துக் கொண்டு சக மனிதராக கூட இருப்பவர்களை முன்பின் தெரியாதவர்களாக இருந்தாலும் நேசித்து அவர்களோடு இணக்கமாக இருக்க இவ்வழிபாடு உதவுகின்றது. இதுவும் வழிபாட்டினுடைய ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றது

Who will punish and Who will not

Dr. Mrs. C. Rajeswari
Madurai

Thiruvalluvar reveals the after effect of a panic creator or a problem monger with a valuable man and a monarch. In a same situation when a an angee is ignited for these two different persons their condition and reaction is different.

In the chapter **பொறையுடைமை** (155) he has told that men who are patient never punish the victims who kindle their wrath. (Instead they forgive them). So these great men are to be protected (by the society) as priceless gold. Men who are not emotionally reacting but patient in handling such situations and thus maintaining human relationship are priceless. They create social harmony.

பொறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்

பொறுத்தாரைப் பொன் போல் பொதிந்து

(குறள் 155)

Sudhananda Bharathi has translated this couplet in the title forgiveness as
Vengeance is not in esteemed held
Patirnce is praised as hidden gold

G. U. Pope has given a different version under the title The possession of Patience or Forbearance has translat ed this 155 couplet as w
Who wreak their wrath as worthless are despised
Who patiently forbear as gold as prized

Here in this 155th couplet Thiruvalluvar says the men who control their emotions when they are provoked are great human beings. They are valuable for the society.

Next let us take the couplet
தக்காங்கு நாடித் தலைச் செல்லா வண்ணத்தால்,
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து (561)

which describes the duty of the king in controlling the offence in his kingdom. If a violence took place he probes into the issue with no bias and partiality. Then he duly punishes the offender so that that offence would never recur. It is one of his royal duties to punish the problem creators. Terrorism is a nomenclature used for an organisation oriented ideology and activities. Here Thiruvalluvar

has named it as **வெருவந்த செய்யாமை** which means not terrorism but offence that create panic among his subjects. Anyone who creates panic and social unrest among his subjects are liable to severe punishment like rigid sentence. This may refer to an offensive nature and behaviour of individuals, it need not be a terrorist organisation.

This couplet reveals the duty and power of the benevolent despot in controlling violence and offence but creating a peaceful atmosphere for his subjects. Terroris is a word used in a larger context.

Sudhananda Bharathi has given the English version of this couplet under the title 'Avoiding terrorism'

A king enquires and gives sentence
Just to prevent future offence

G. U. Pope translate the title as 'The absence of terrorism'.

Who punishes, investigation made in due degree
So as to say, advance of crime, a king is to be

These couplets inform us who will punish and who will not. A valuable person who is learned and experienced will never get furious when someone true to provide him. He will be patient and never punish him. He may avoid such people and never have them around him. He prefers to be with polite and dignified people. But this is not the case with a monarch. He immediately take action against anyone who creates problem to social harmony. He will punish jim severely that the punishment could be a lesson for him and other offenders. He never shows mercy to men who create social unrest. He will never have a soft corner for these men even if they are his friends or relatives. Irrespective of his connections he punishes the offenders to bring peace and harmony in his kingdom.

Thiruvalluvar is not only a poet but a psychologist who delves deep into the nature of human minds and behaviour this differentiates the reaction towards a panic creator by a valuable man and a benevolent despot. He shows same situation but different reactions for us to read and contemplate

A review on Kavinjanin kaathali- Tamil translation of Sonnets from Portugese

Dr. Nagalakshmi
Asst. Professor, Vaishnav College for Women

The translated title ' Kavinanin Kathali' of the poem maintains the modesty of the poetess as Elizabeth Barrott Browning wanted it to be in disguise as if it were the translations from Portuguese due to the Victorian anxieties about female modesty and public exposure. Apart from this the title overcomes the barrier of cultural alienation by avoiding the word Portuguese .

The encaptivating opening of the dramatic monologue depicts the Poetess's predicament that she is dragged and chased by death seizing her locks from behind her head with a striking knell, rather the voice echoed as a church bell resonating 'I am not death but love, thee sweet lady'. This makes a strong emotional appeal by binding the reader with a conviction to continue the emotional journey throughout the poem without taking a break.



The highlight of the poem lies in her proposal and withdrawal of the courtship and the underlying paradoxes of emotions. The translator has weaved this back and forth in the with the delicate craftsmanship of language where the personal confession transforms into universal poetry. In the stanza 10 The poetess glorifies the divinity of love and assures her love to be pure and juxtaposes this in the succeeding stanza and states her withdrawal citing her fears and weakness. Though this contradiction is prevalent throughout the poem, it is best illustrated in the stanzas as given below:

10. .....தேவையின்போது
தெரிவிக்கின்றேன்/
நான் உன்னை காதலிக்கிறேன்/

குறித்து வைத்துக் கொள்/
உன்னை நான் காதலிக்கிறேன்.....

11. .....உன்னை ஆசீர்வதிக்கின்றேன் அன்பே
ஆனால் உன் முகத்துக்கு நேராக/
உன்னை விட்டு விலகி விலகிச்
செல்கின்றேன்.....

Editor, Tamil Anangu, & Sakthi Pennithazh

The translation has beautifully brought out poetic devices in Tamil and in particular the alliteration and assonance which are embellishments of the dramatic monologue.

Some examples are as cited below:

ஆண்டுக்கு ஆண்டு, இயற்கை இன்பங்கள்,
ஒளி துளித்தது, உன்னுள் என்னைக், நற்சாட்சியாக நிற்கின்றேன்
நிமிர்ந்து நிற்கும், கண்ணீரில் கண்டேன், பூப் பாத்திகளும் பூப் பந்தல்களும்

This translation is significant in Tamil Literature as it demonstrated how private emotion could be elevated into high art, inspiring later poets to explore personal themes more openly. The translation stands as a testament to Cross-cultural resonance n emphasizing how the universal theme of love bridges literary traditions across time and geography.

Elizabeth Barret Browning

நூல் திறனாய்வு

சாதிவன்மக் கொலைகளும் அருந்ததியர் [illegible] சாமிகளும்

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

திறனாய்வாளர் : டாக்டர் புதேரி தானப்பன்
நூல் பெயர்: சாதிவன்மக் கொலைகளும் அருந்ததியர் குல சாமிகளும்
ஆசிரியர்: பேராசிரியர் டாக்டர் ச. சீனிவாசன்
பாலாஜி இன்டர்நேஷனல் பதிப்பகம், புது தில்லி.
தொடர்பு எண்: 9911223484, 9911345252.
பக்கங்கள்: 160
விலை: உரூபா: 200 /-

சாதிகள் நிரம்பி வழியும் இந்தச் சமூகத்தில் சாதிவன்மக் கொலைகள் பரவலாக நடைபெற்று வருகின்றன என்னும் செய்தியையும், அப்படிச் சாதிவன்மத்தால் கொலை செய்யப்பட்டவர்கள் பிற்காலத்தில் குல சாமிகளாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றனர் என்னும் செய்தியையும் இந்த நூலின் தலைப்பே சொல்லிவிடுகிறது. அத்தகைய குல சாமிகள் அருந்ததியர் இனத்தைச் சார்ந்த மக்களிடையேயும் உருவாகியுள்ளன என்னும் செய்தியையும் இந்தத் தலைப்பு நமக்குச் சொல்லுகிறது

"இந்த அவல முடிவை எட்டியவர்கள் மக்கள் முன்னர் வீரனாகவும் நாயகனாகவும் தங்கள் சமூகத்தைக் காக்கும் குலதெய்வமாகவும் விளங்குகின்றனர்" என்று முனைவர் விவேகானந்தன் தனது அணிந்துரையில் இந்தச் செய்தியைத்தான் கூறுகிறார்.

சாதிவன்மம் என்றால் என்ன? என்னும் வினாவுக்கு, "ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது சமூகப் பிரிவினருக்கு எதிராக மற்றொரு சாதியினரால் இழைக்கப்படும் பகையுணர்வு, வன்முறை, மற்றும் வெறுப்புணர்வை "சாதிவன்மம்" என்னும் சொல் குறிக்கிறது" என்று இந்நூலாசிரியர் தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார். இவை மட்டுமே அல்லாமல் உயர்சாதித் தெருவில் நடக்கும்போது செருப்பை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது, யார் வீட்டுக்குள்ளும் நுழையக் கூடாது என்பது, தேநீர்க் கடையில் தனியாகக் குவளை வைத்திருப்பது, யாரையும் தீண்டக்கூடாது என்பது, எவ்வளவு சிறியவராக இருந்தாலும் அவரது பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூடாது; மாறாக, அந்தச் சிறிய பையனைச் சாமி என்றுதான் கூப்பிட வேண்டும் என்பது போன்றவையும் சாதி வன்மங்களேயாகும்

இந்தச் சாதிப் பிரிவுகளால் ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்கும் பகைமை ஏற்படுகிறது; இந்தப் பகைமை காரணமாக அவர்களுக்குள் தொடர்ந்து வெறுப்புணர்வு இருந்து கொண்டே இருக்கிறது; இதன் காரணமாக அடிக்கடி வன்முறை வெடிக்கிறது. இது நிரந்தரமான ஏற்றத் தாழ்வை உண்டுபண்ணுகிறது; ஒரு சாதியைச் சேர்ந்த மக்களும் மற்றொரு சாதியைச் சேர்ந்த மக்களும் வேறு வேறானவர்கள் என்னும் வேற்றுமையை ஏற்படுத்துகிறது. பொருளாதாரத்தில் உயர்ந்த சாதியினர் குறைந்த சாதியினரைப் பல வகையிலும் துன்புறுத்துகின்றனர். கீழ்ச் சாதியினர் எனப்படுவோர் அவமானங்களையும் அடிமைப்படுத்துதலையும் வாழ்நாள் முழுவதும் தாங்கிக் கொள்ள வேண்டிய அவல நிலை ஏற்படுகிறது.



இயற்கையை வணங்கிய ஆதி மனிதன் இறந்துபோன தனது முன்னோரை வணங்கத் தொடங்கி, பின்னர் தங்கள் குலக்குறிகளாகக் கொண்ட விலங்குகளையும் பறவைகளையும் வணங்கிப் பின்னர், இறந்தவர்களுக்கு நடுகல் நட்டு வழிபட்டான். இவ்வாறு முன்னோர் வழிபாடு படிப்படியாக குலதெய்வ வழிபாடாக மாறியது என்று இந்நூல் தொடங்குகிறது.

தமிழகத்தில் பெருவாரியான மக்கள் சிறு தெய்வங்களை வணங்குபவர்களாக உள்ளனர். தமிழகத்தின் தென்மாவட்டங்களில் குலசாமிகளாக வணங்கப்படும் கௌதலமாடன், சேர்வாரன், மாயக்குருவி, சாமாயி அம்மன், ராமப்பகடை, சின்னத்தம்பி, ஒண்டிவீரன், முத்துவீரன், சின்னக் குருவன், பெரிய குருவன், குயிலி போன்ற அருந்ததியரின் குலசாமிகள் தமிழகத்தின் வட மாவட்டங்களில் வணங்கப்படுவது இல்லை. அதற்குக் காரணம் வட மாவட்டங்களுக்கு அருகே உள்ள தெலுங்கு பேசும் ஆந்திர மக்களுடைய பழக்க வழக்கங்களின் தாக்கமாக இருக்கலாம். இங்கே உள்ள அருந்ததியர்கள், திருத்தணி முருகன் கோயிலுக்குக் காவடி எடுத்து நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர். அருகில் இருக்கும் திருப்பதிக்கும் அடிக்கடி சென்று வருகின்றனர். சிலர், வெங்கடேசப் பெருமாளின் பாதங்களை உருவமாகச் செய்து, அதனை வழிபட்டுவரும் பழக்கமும் உண்டு

தமிநாட்டுச் சிற்றூர் மக்கள் சிறு தெய்வங்களையும் பேரூர் மக்கள் பெருந் தெய்வங்களையும் வழிபடுவது வழக்கமாக உள்ளது என்னும் கருத்தை யாரும் மறுக்க முடியாது.

சிறுதெய்வங்கள் என்பவை யாவை? இவற்றின் இருப்பிடங்கள் யாவை? பெருந் தெய்வங்கள் என்பவை யாவை? இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? குலதெய்வம் என்றால் என்ன? குலதெய்வ வழிபாடு எவ்வாறு உருவாயிற்று? குலதெய்வ வழிபாட்டால் என்னென்ன நன்மைகள் உண்டாகும்? குலதெய்வங்களை வழிபடும் முறை யாது? குலதெய்வம் எது என்று தெரியாதவர்கள் என்ன செய்ய வேண்டும்? பழந்தமிழரின் வழிபாட்டு மரபு என்ன? "சக்கிலியர்" என்னும் பெயர் எப்படித் தோன்றியது? சக்கிலியர்களின் பூர்வீகம் என்ன? நாட்டுப்புறத் தெய்வங்களின் வகைகள் யாவை? போன்ற வினாக்களுக்கு விடைகாண விழைவோர் இந்நூலை வாங்கிப் படிக்கலாம்.

"பகடை" என்னும் சொல் சக்கிலியரில் ஒரு பிரிவினரைக் குறிக்கும் என்றும் இந்தப் "பகடை" என்னும் சொல் "பகடு" என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது என்றும் இந்தப் "பகடு" என்னும் வேர்ச்சொல் நமது சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பல புலவர்களால் கையாளப்பட்டுள்ளது என்றும் இந்நூலாசிரியர் முனைவர் ச. சீனிவாசன் எடுத்துக் காட்டுகிறார்.

"பகடையர்" அரசர்களாக இருந்தனர் என்றும், பிரம்மதேசம், திருப்பதி, திருவண்ணாமலை, திருவாலங்காடு, திருமுல்லைவாயில், காளஹஸ்தி, ராமகிரி, திருப்புக்குழி போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுகள் இதற்குச் சான்றாக உள்ளன என்றும் இவர் கூறுகிறார்.

"சக்கிலியர்கள் ஆந்திராவிலிருந்து வந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் தமிழர்கள் அல்லர்; அவர்கள் பேசும் தெலுங்கு மொழியே இதற்குச் சான்றாகும்" என்னும் கருத்து நிலைபெற்றிருக்கும் தமிழகத்தில், இக்கருத்தினைப் பொய்யாக்கும் வகையில் இந்நூலாசிரியர் பல்வகைத் தரவுகளை அடுக்குகிறார். இலட்சக்கணக்கான பகடைகள் வேறு வேறு அரசர்களின் போர்ப்படையில் வீரர்களாகவும் தளபதிகளாகவும் இருந்தனர் என்று கூறுகிறார். கந்தன் பகடை, பொட்டிப் பகடை, முத்தன் பகடை, மாடன் பகடை, நீலகண்டப் பகடை, வாலப் பகடை, சின்ன வீரன் - பெரிய வீரன் பகடை இப்படிப் பல்வேறு பகடைகளின் பெயர்களையும் அவர்களது வீரதீரச் செயல்களையும் எடுத்துச் சொல்லி அவர்கள் அனைவரும் இந்த நாட்டு விடுதலைக்காகப் போராடி உயிர் துறந்தார்கள் என்றும் ஆனால் இவர்களின் வரலாறு திட்டமிட்டு மறைக்கப்பட்டு விட்டது என்றும் கூறுகிறார்.

ஆனால் இவர்கள் யாருமே இந்திய விடுதலைக்காகப் போராடவில்லை என்பதையும் மாறாக, அவரவரும் தத்தம் அரசர்களுக்காகவும் தத்தம் ஜமீன்களுக்காகவுமே போராடினார்கள் என்பதையும் நூலாசிரியர் ஏனோ உணரவில்லை..

இந்த நூல், சேர்வாரன் சாமி கதைப்பாடல், நாமபகடை - சின்னநம்பி கதைப்பாடல், சின்னக் குருவன் பெரிய குருவன் கதைப்பாடல் ஆகியவற்றைக் கொண்டிருப்பது சிறப்பு.

முனைவர்.மு.முத்துவேலு அவர்களின் திருக்குறளின் உறுதியும் தெளிவும்

ம.சுரேஷ் M.A., M.ED
முதுகலை தமிழாசிரியர் கயப்பாக்கம்

நூல் ஒரு கண்ணோட்டம்

பல்துறை வித்தகர்: முனைவர் மு.முத்துவேலு ஐயா அவர்கள்

அன்புள்ளம் கொண்டவர், வெளிச்சமாய் உடையணிந்து வெண்மையாய் சிரித்திருப்பார், குறிப்பறிந்து செயல்படும் நுண்ணறிவு கொண்டவஐயாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு, எழுத்தால் தூண்டப்பட்டவன் நான்

பெருக்கெடுத்து ஓடும் ஆற்றுக்கு அழகு அதன் அழகான கரைகள் தான் அது போல நூலாசிரியர் முத்துவேலு ஐயா அவர்கள் திருக்குறள் பற்றிய நூலுக்கு உறுதியும், தெளிவும் என்ற அழகான இரண்டு கரைகளை கட்டமைத்து அவற்றிடையே தம் ஆய்வுக் கருத்துகளை வெள்ளமென கரைபுரண்டு ஓடச் செய்திருக்கிறார்.

உளவயில் அறிஞர் சிக்மண்ட் ப்ராய்டு அவர்களின் கூற்றுப்படி மனிதனின் ஆழ்மனதில் இருப்பது விலங்கு மனம். அந்த விலங்கு மனம் தலைதூக்கும் போதெல்லாம் ஒரு மொழியில் உள்ள இலக்கியங்களின் விழுமியங்களே அந்த மனதை கட்டுப்படுத்தி வைக்கின்றன. அந்த வகையில் மனித இனத்திற்கே அறிநெறியில் வாழும் வழி சொல்லும் நூல் திருக்குறள்.

திருக்குறளின் பெருமையை அறியாதவர்களுக்கு அதை ரசிக்க தெரியாதவர்களுக்கு அது ஒரு வெடிமருந்து கிடங்கு போல அருகில் செல்ல அச்சப்படுவார்கள். ஆனால் திருக்குறளின் ஆழகை ஆராதிப்பவர்களுக்கு அது ஒரு மத்தாப்பு கையில் பிடித்துக்கொண்டு மனம் விரும்பியவாறு சுற்றிச் சுழன்று ஆடி மகிழ்வார்கள்.

முனைவர் மு.முத்துவேலு

வாணவேடிக்கைகாரன் இரண்டு கைப்பிடியளவு மருந்தில் பல வண்ணக்கோலம் காட்டுவது போல திருக்குறள் என்னும் கிடங்கில் இருந்து இரண்டு சிட்டிகை அதாவது உறுதியும்,

தெளிவும் என்ற இரண்டை எடுத்துக் கொண்டு 21 கட்டுரைகளின் மூலம் நம் மணதை மகிழ்வித்திருக்கிறார் நூலாசிரியர் அவர்கள்.

நேர்த்தியான மொழி நடை:

நூலுக்கும் வாசகனுக்கும் இடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்துவது நூலாசிரியரின் மொழி நடை கூற வரும் கருத்துகளை மட்டும் அல்ல தனது மன உணர்வையும் வாசகனின் மனதிற்குள் கடத்தும் மொழித்திறம் படைத்தவர் நூலாசிரியர். படிப்பவரிடம் நேரடியாக பேசுவது போல நேரடி மொழியில் வாசகனை கட்டிப் போட்டுள்ளார் முனைவர் முத்துவேலு ஐயா அவர்கள்



திருக்குறளின் உறுதியும், தெளிவும் என்ற இந்த நூலில் உள்ள ஒவ்வொரு சொல்லும் விளைந்த நல்முத்துக்கள் என்னை மிகவும் கவர்ந்த சிலவற்றை மட்டும் எடுத்துரைக்க விழைக்கின்றேன்.

திருக்குறளின் உறுதி

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

தீவினை செய்பவர்களை கெடுதல் விடாமல் சென்று சேரும் என்பதை உறுதியாக நம்புகிறது வள்ளுவர் உள்ளம்.

இந்நூலாசிரியர் உறுதி என்பதை நிழலோடு ஒப்பிடும் உவமையில் மனம் குறளை விட்டு அகலாமல் பற்றி நிற்கிறது.

சினத்தை பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று

ஒரு செயலுக்கு எதிர்வினை உண்டு என்பதை ஒருவன் தன் கையால் தரையை ஓங்கி அறைந்தால் அவன் கை வலிப்பது உறுதி அது போல சினத்தை தன் குணமாக கொண்டவனை கெடுதல் நிச்சயம் வந்தடையும் என்பதை நூலாசிரியர் வழி அறியும் போது ஏற்பட்ட வியப்பு நிலைமாற சில நிமிடங்கள் ஆனது.

திருக்குறளின் ஆழம்

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு

என்ற குறளில் கேணி பறையிலும் தோண்டப்படும் களிமண் நிலத்திலும் தோண்டப்படும் களிமன் நிலத்திலும் தோண்டப்படும் பாறையில் கிடைக்கும் நீருற்று நிரந்தரமானது. ஆனால் மணற் கேணியில் ஊற்றுவழி நீரோடு மணலும் சேர்ந்து வரும் மணல் சேர்ந்து கேணியின்

ஊற்றை மூடிவிடாமல் இருக்க மணலை அகற்ற வேண்டும் அதுபோல கற்றலும் தொடர் நிகழ்வாக இருக்க வேண்டும் என்ற உவமையை படிக்கும் போது, பலமுறை இந்த குறட்பாவை கடந்து வந்திருக்கிறேன் ஆனால் நூலாசிரியரின் இந்த ஆழமான கருத்தில் இருந்து மேலேற வெகுநேரமாயிற்று

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்

இந்த குறட்பாவிற்கு இதுவரை நான்கண்ட உரை உலகியல் நடைமுறைக்கு ஏற்புடையதா? என்ற எண்ணத்தை உண்டாக்கியது ஆனால் முனைவர் முத்துவேலு ஐயாவின் உரை ஆழம் அதை நீக்கியது.

வறிய நிலையிலும் விதை நெல்லையும் கொண்டு விருந்து படைத்தவர் நம் முன்னோர். முதல் நாள் இரவு பெய்த மழையின் ஈரம் காய்ந்து விடுவதற்கு முன் மறுநாள் காலையில் விதைத்துவிட வேண்டும். ஆனால் ஒரே நாளில் அனைவருக்கும் வேண்டிய உழவு மாடும், விதையும், அதை விதைப்பதற்கு ஆளும் கிடைப்பது அரிது அந்த நேரத்தில் விருந்தோம்பலினால் மகிழ்ந்தவர்கள் நீங்கள் இல்லத்தில் இருங்கள் உங்கள் நிலத்தில் நாங்கள் சென்று விதைக்கின்றோம் என்று உள்ளன்போடு ஓடிவரும் நிகழ்வை நூலாசிரியர் இந்த குறளில் படமட பிடித்து காட்டுகிறார்.

திருக்குறளின் விரிவு

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

என்ற இந்த குறளின் சுருக்கமான பொருளை படித்து கடந்து சென்றதுண்டு ஆனால் பொறாமை குணமுடையவர் மட்டும் அல்லாது அவருடைய உறவினரும் இழப்பவற்றுள் உடையை முதலில் குறிப்பிட்டு வள்ளுவர் கூறும் கருத்தை விளக்கி விரிவுரையாக ஐயா கூறக்கேட்டு ஒரு கணம் அதிர்ந்து போனேன்.

கண்ணும் கொலிச்சேறி நெஞ்சேஇவை என்னைத்
திண்ணும் அவர்கானல் உற்று
மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்

முதலிய குறட்பாக்களை விளக்கி நூலாசிரியர் தரும் முன் பின் தொடர்புகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

இந்த குறட்பாக்களை எல்லாம் படித்து எழுதி கடந்து போனபோது இவ்வளவு உணர்வுகள் வெளிப்பட்டதில்லை. ஆனால் நூலாசிரியரின் எழுத்துகள், கடந்து வந்த காலம் எவ்வளவு சுகமானது என்பதை நினைவூட்டுகின்றன. பத்தாண்டுகள் ஒன்றாக படித்த பெண், நல்ல தோழியாக இருந்தவள், நன்றாக சிரித்து பேசி நட்பு பாராட்டியவள். அதன் பிறகு அவளை சிந்திக்கவே இல்லை பத்தாண்டுகள் கழித்து அந்தப் பெண்ணை திடீரென சந்திக்கும் போது ஏற்படுமே ஒரு உணர்வு அதைப்போலவே ஐயாவின் குறள் விளக்கங்கள் எனக்குள் இனம் புரியாத உணர்வை ஏற்படுத்தியது.

நூலாசிரியரின் உள்ளம் கவர்நத ஒரு சொல்

திருக்குறளில் அறம் பொருள் காமம் என்ற மூன்று பிரிவுகள்- 133 அதிகாரங்கள் 1330 குறட்பாக்கள் 9310 சீர்கள் திருவள்ளுவர் எழுதியதாக கருதப்படும் 14000 சொற்களில் நூ லாசிரியரின் உள்ளம் கவர்நத சொல்லாக சொல்லேருழவர் என்ற சொல்லை குறிக்கிறார். தமிழ் இலக்கிய பரப்பில் முதன் முதலில் சொல்லேருழவர் என்னும் சொல்லை படைத்தளித்தவர்கள் திருவள்ளுவரே ஆவார். இச்சொல்லை படைக்க திருவள்ளுவருக்கு சங்க இலக்கியங்களே வழிகாட்டின.

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

வில்லேருழவர் என்ற சொல் சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு, அகநானூறு போன்றவற்றில் பயின்று வந்துள்ளதக சான்று காட்டுகிறார் நூலாசிரியர்.

படைத்திறன் மிக்க பகை மன்னனை விட நடைத்திறன் மிக்க நல்லறிஞர் பகை பெருந்தீங்கு இழைக்கும் என்ற கருத்தை "வாளை விட வாய்ச்சொல் வலிமையானது" என்ற சான்றுடன் நிறுவியுள்ளார் நூலாசிரியர்.

அறிவின் அடையானம்

ஒரு பேருந்து பயணத்தின் காட்சிகளை படம் பிடித்து அறிவுக்கு அடையானம் என்ன என்பதை கூறுகிறார். வாழும் மனிதர்களிடத்தில் வற்றாமல் சுரக்க வேண்டிய மனதப் பண்பே அறிவுடைமைக்கு அடையாளம் என்பதை வள்ளுவர் வழியில் எடுத்துரைத்துள்ளார்.

தமிழோ ஒரு வெள்ளித்தட்டு அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள் திருக்குறள் என்ற னுச.கிரெளல் அவர்களின் கூற்றுப்படி திருக்குறளை இந்த நூலின் மூலம் ரசிக்கச் செய்திருக்கிறார் ஐயா அவர்கள்

உயிருக்கு ஊதிய

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

என்ற குறளின் மூலம் உடலை இயக்கும் உயிருக்கு ஊதியமாகவும், கைமாறாகவும் ஏதேனும் வழங்க வேண்டும் என்றால் அது ஒருவன் வாழும் காலத்தில் அறச் செயல்களின் மூலம் ஈட்டும் புகழே உயிருக்கான ஊதியம் என்கிறார்.

கற்பனை நோயால் கலங்கி நிற்கும் எண்ணற்ற இளைஞர்களுக்கு அவர்களது கலக்கத்தை போக்கும் விதமாக

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி

என்ற குறட்பாவை எடுத்துரைக்கிறார்.

தந்தையின் நன்றியும் மகனின் உதவியும்

நன்றி, உதவி, நன்மை என்ற பொருள் தரும் ”நன்றி” என்ற ஒரே சொல்லை பயன்படுத்தியுள்ளார் வள்ளுவர். அது எந்ததெந்த இடத்தில் என்னென்ன பொருளில் ஆளப்பட்டுள்ளது என்ற ஐயாவின் ஆய்வுப் பணி அளப்பரியது.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்

இக்குறட்பாவில், ஒரு வேளை வள்ளுவர் காலத்தில் இருந்திருக்கலாம் என்று ஐயா கூறும் நம்பிக்கை வியப்பை ஏற்படுத்துகிறது. அக்காலத்தில் மக்கட்பேறு குறித்து உயர்ந்த கருத்துகள் நிலவியதையும் பெற்றோன் என்ற சொல்லுக்கும், துறக்கம் செல்வதற்கு வழியமைத்து கொடுத்ததற்கும் மகனுக்கு தந்தை செய்வது நன்றி என்ற இந்த கருத்துகள் நூலாசிரியரின் தேடல் மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது.

விரும்பும் சொல் பயில்வோம்.

கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்

இக்குறட்பாவில் இடம் பெறும் கேளார் என்ற சொல்லுக்கு உரையை கேட்க தவறியர், கேள்அல்லாதார் அதாவது பகைவர், கேட்கும் திறன் அற்றவர் என்ற உரையை படிக்கும் போது பாரதிதாசன் சொன்னாரோ

.....அழகென்பாள்....

நரெடுத்து நறுமரை தொடுப்பாளின்
விரல் வளைவில் நாடகத்தை செய்கிறாள் என்று

அதைப்போல இந்தக் குறளில் ஒரு நாடகத்தையே நடத்திக் காட்டிருக்கிறார் நூலாசிரியர்.

எனக்கு தேடியது கிடைத்த மகிழ்ச்சி

வள்ளுவர் தமது முப்பாலில் மூன்று இடங்களில் மட்டுமே “யாம்” என்னும் சொல்லை பயன்படுத்தியிருக்கிறார். அதை அழுத்தம் திருத்தமாக பயன்படுத்தி இருக்கிறார் என்றதும், திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றிய தனிப்பெரும் கவிஞர் ஆனாலும் தரணியில் வாழும் மனிதர்கள் அனைவருக்கும் ஏற்ற கருத்தை எடுத்துரைக்க வந்தவர் என்பதினால் நூல் முழுவதும் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் உலகு, உலகம் என்ற சொற்களை பயன்படுத்தியுள்ளார் என்றதும்.

வள்ளுவத்தை வாழ்க்கை விளக்கம் என்ற டாக்டர் மு.வரதராசரின் கூற்று, திருவள்ளுவதுரை தமிழ் இறைவனார் என்ற பாவேந்தர் கூற்றும்

திருக்குற்ளின் உறுதியும் தெளிவும் என்ற நூல் உருவாக்கத்தில் ஐயா முனைவர் மு. முத்துவேலு அவர்களின் ஆழ்ந்த ஆய்வுச் சிந்தனையை நாம் அறிய முடிகிறது மேலும் நாம் தேடும் பல செய்திகள் இந்நூலில் சங்கமிக்கின்றன.

புதிய வெளியீடுகள்







சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639